
# திருப்பம்

**Thiruppam**


அரசியல், கலை, இலக்கிய சமூக மாத ஏடு

*A Monthly of Politics, Arts, Literature and Social Issues*

ஜூன் 15 - ஜூலை 14, 1998

வுச்சென்வால்ட், ஜேர்மனி

யுத்தந்தந்த மயான அமைதி

**விலை: ரூபா 25/=**

கம்

# விற்பனையாகின்றன:

- **தமிழ்மாறன் கட்டுரைகள்**
  - வி.ரி.தமிழ்மாறன்
- **தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள்**
  - வி.ரி..தமிழ்மாறன்
- **அபிவிருத்தியும் கல்வியும்**
  - பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
- **கல்விச் செயற்பாட்டில் புதிய செல்நெறிகள்**
  - பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
- **கல்வியும் உளவியலும் (பகுதி-,11)**
  - கலாநிதி ச. முத்துலிங்கம்
- **சிறுவர் பக்திக் கதைகள்**
  - த. துரைசிங்கம்
- **பாட்டுப் பாடுவோம்**
  - த. துரைசிங்கம்

பிரதிகளுக்கு :

**லங்கா புத்தகசாலை,**

F.L - 1. 14, டயஸ் பிளேஸ்,

குணசிங்கபுர,

கொழும்பு - 12

தொ.பேசி. 341942

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்


# திருப்பம்

முனை : 01 ஜூன் 15- ஜூலை 14, 1998 இதழ் : 03

ISSN 1391-376X



நிர்வாக ஆசிரியர்:

த. துரைசிங்கம்

ஆசிரியர் குழு:

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்

வி. ரி. தமிழ்மாறன்

எம். ஏ. நஸ்வி

கணனி அமைப்பு:

மதுரி மாறன்

அச்சுப்பதிவு:

**Perfect Printers,**
130, Dias Place,
Colombo-12

வெளியீடு:

**The Future Foundation,**
215, F/2/6, Park Road, Colombo-5
T.P.: 593331
Fax: 508180

விநியோகம்:

**Lanka Book Depot.**
F.L.1.14, Dias Place,
Colombo-12
T.P.: 341942


## நெஞ்சோடு நெஞ்சம்......!

வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

உருவத்தை மாற்றி, உள்ளடக்கத்தைக் கூட்டி, ஆசிரிய பீடத்தவரின் பெயர்களையும் போட்டு இரண்டாவது இதழை நாள் தப்பாது கொண்டு வரவும் கடிதப் போக்குவரத்து சீராகவும் சரியாக இருந்தது. ஜனரஞ்சக சஞ்சிகைகள் கிடைக்கும் கடைகளில் 'திருப்பம்' கிடைக்காமையினால் புத்தகசாலைகளை நோக்கி 'நெடுந்தூரம்' செல்ல வைக்கின்றீர்களே என்ற முறைப்பாடு தான் முதலில் வந்தது. இதை எமது விநியோகஸ்தரின் காதில் போட்டு வைத்துள்ளோம்.

அரசாங்கம் கொண்டுவந்துள்ள செய்தித் தணிக்கை எம்மையும் பாதிக்கவே செய்யும். எத்தகைய செய்தித் தணிக்கை முயற்சியினையும் 'திருப்பம்' பலமாகவே எதிர்க்கின்றது. செய்திகளுக்கும் கருத்துக்களுக்கும் மக்களே நீதிபதிகள் என்பதே எமது சித்தாந்தம். எங்களுக்காக நாங்கள்தான் சிந்திக்க வேண்டுமே தவிர அரசாங்கம் சிந்திக்க முடியாது. இன்று மக்களுக்கு எது தேவையென்பதை இராணுவ அதிகாரி ஒருவர் சிந்தித்துத் தீர்மானிக்கும் பரிதாப நிலையே நாட்டில் உள்ளது. இது மக்களது பக்குவத் தன்மையினையும் அறிவையும் எள்ளிநகையாடும் முயற்சியே தவிர வேறில்லை. யுத்தமென்றாலே இப்படித்தான். படிப்படியாக எல்லாமே தேய்ந்து போகும். முதலில் தேய்வது கருத்துச் சுதந்திரந்தான் என்பது எத்தனை முறை நிரூபணமாயிற்று.

வாசகர் கேள்வி–பதிலை அப்பாடா என்று தொடங்க முடிந்தது. சந்தா விண்ணப்பப் படிவத்தைக் கேட்டு வாசகர்கள் நச்சரிக்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்களை அடுத்த இதழ் வரை காத்திருக்குமாறு வேண்டுகிறோம். மேலும் மேலும் சிறப்பம்சங்களைத் தாங்கி வருவதற்குத் திருப்பத்துக்கு தங்கள் ஆதரவொன்றே அடித்தளம் என்று நம்பிச் செயற்படுகின்றோம். உங்கள் அபிப்பிராயங்களே எங்களுக்கு ஊக்கமருந்து. எனவே தயங்காது எழுதுங்கள்.

அன்புடன்

ஆசிரியர்

கொழும்பு தமிழ்ச் சங்கம்

IN THE MARKET PLACE OF IDEAS



நூலகம்

விரைவில் ஆரம்பமாகின்றது!

இனங்களின் போராட்ட வரலாறு தந்த

**சிசெரோவின்** கைவண்ணத்தில்

திருப்பத்துக்கென பிரத்தியேகப் படைப்பு

**பாலஸ்தீன விடுதலை இயக்கம்**

(முழுமையான வரலாற்று ஆய்வு)

பத்திரப்படுத்த வேண்டிய கட்டுரைத் தொடர்!

காத்திருங்கள்.......!

ஐரோப்பாவில்

எமது விற்பனை முகவர்

ஐரோப்பாவின் மிகப்பெரிய

தமிழ்ப் புத்தகசாலை

**தமிழாலயம்**

* ஈழத்துச் செய்திப் பத்திரிகைகள் அனைத்தும் (தமிழ், ஆங்கிலம்)
* ஈழத்து இலக்கியங்கள்
* இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்

விற்பனைக்கும் தொடர்புகளுக்கும்

**தமிழாலயம்**

39, Bd. de la Chapple
75010 Paris
FRANCE.
T.P.: 33 1 42 05 18 58



## திருப்பத்தினுள்ளே................

01. இருகவிதைகள் — 04
ஆண்டி

02. மலையகம் - தாழ்ந்து கிடப்பதே தலைவிதியோ? — 05
பேராசிரியர் மா. செ. மூக்கையா

03. நெருக்கடியும் வெளிப்பாடும் — 12
கோ. றொ. கொன்ஸ்ரன்ரைன்

04. இலங்கையிற் தமிழர் உயர்கல்வி — 16
பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

05. பயணம் (சிறுகதை) — 22
ஆதியாள்

06. தொடர்புசாதன வளர்ச்சிக்கு வழிகாட்டல் வேண்டும் — 25
ஆ. சிவநேசச்செல்வன்

07. கலக்கந் தரும் கணிப்பொறி — 30
அம்சா ஆனந்தன்

08. அமெரிக்காவின் வறுமை — 32
(சித்திரம் பேசுதடி)

09. மாநில அரசாங்கமொன்று எப்போது கலைக்கப்படலாம்? — 34
வி. ரி. தமிழ்மாறன்

10. நேருக்கு நேர்- — 42
டக்ளஸ் தேவானந்தா எம்.பி.

11. நீறுபூர்ந்த நெருப்பிலிருந்து — 50
க. வில்வரெத்தினம்

12. தோழர் சரத் முத்தெட்டுவகம நினைவாக — 51

13. இலங்கையில் இலக்கிய விமரிசனம் — 53
தெ. மதுசூதனன்

14. சிவசேகரத்தின் மனப்பதிவுகள் — 57

15. மதுரன் பதில்கள் — 63

# இரு கவிதைகள்

ஆண்டி

எத்தனை முறைகள்
இடம் பெயர்ந்து
இருப்பேன் . . . !
இனியும் இருப்பேன்.
இடம்
பெயர்வு
சுதந்திரத்தின் மூலங்கள்.
விடுதலைக்கான விரிதளங்கள்.

கண்டறிந்ததும்
காணப்போவதும்
இருப்பின் அர்த்தம்
புரிந்தும்
தேடியும்
நான் அறிந்தும்
இருப்புக்காய்
இடம்
பெயர்ந்தும்
எத்தனை முறைகளும்
இருப்பேன்.
அந்த
மூலங்கள்
விரிதளங்கள்
எட்டும் வரை.

*

கை தவறித் திறந்து
கொண்டது மனதை.

மோட்சத்திற்காய்
உடல் வழியே தியானம்
புலன்கள் நிமிர்ந்து
பிதுங்கித் தவித்தன.
நாளொரு வண்ணமும்
ஏங்கித் தவித்தே
நிர்வாண உடலை
நிதமும்
போஷித்து . . .
கலவியின் உச்சம்
கூச்சலாய்
சனசந்தடி எல்லாம்
கேட்கக் கேட்க
கட்டுமஸ்தான உடலிலிருந்து
விலாப்புறம் மட்டும் ஒடிந்து
தனியே ஆதிக்கக் குரலுக்கு
எதிராய் குரல் கொடுத்தது.

கை
தவறித் திறந்து கொண்டது,
மனதை.

*



# மலையகம் – தாழ்ந்து கிடப்பதே தலைவிதியோ?

## மாற்றத்துக்கு என்ன வழி?

பேராசிரியர் மா.செ.மூக்கையா
புவியியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

கடந்த நூற்றாண்டில் உலகளாவிய வகையில் ஏற்பட்டிருந்த குடியேற்ற வாதமானது விருத்தி பெறும் நாடுகளின் அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய அனைத்து துறைகளிலும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது. அவற்றில் இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் தொழிலாளர்களாக இந்தியர்களை உலகின் பல பாகங்களுக்கும் குடிபெயரச் செய்தமை முக்கியமானதொன்றாகும். அவ்வாறு குடிபெயர்ந்தவர்களின் வழித்தோன்றல்கள் இலங்கையைத் தவிர்த்து ஏனைய நாடுகளில், நவீன உலகின் வளர்ச்சியோடு குறிப்பாக தாம் வாழும் நாடுகளின் ஏனைய சமூகத்தவர்களுக்கு இணையாக வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். ஆனால் இலங்கையில் அவர்கள் ஆரம்பகாலத்தில் குடிபெயர்ந்து வந்தபோது எவ்வாறு சாதாரண விவசாயத் தொழிலாளர்களாக, அல்லது சுரங்கங்கள், போக்குவரத்துத் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர் களாக காணப்பட்டனரோ அதிலிருந்து பெருமளவுக்கு வேறுபட்டவர்களாக இன்றும் வளரவில்லை. அதே நேரத்தில் ஏனைய நாடுகளுக்கு குடிபெயர்ந்து சென்ற இந்தியர்கள் வாழ்க்கையில் உயர் நிலை நோக்கி அசைந்துள்ளமையினை காணக் கூடியதாயுள்ளது.

இதற்கு சிறந்த உதாரணமாக பீஜி நாட்டிற்கு குடிபெயர்ந்து சென்ற இந்தியர்களைக் கூறலாம். கடந்த தசாப்தத்தின் போது பீஜியின் அரசியலில் இம்மக்கள் குறிப்பிடத்தக்க நிலைக்கு வளர்ந்து, பிரதம மந்திரியாக பதவியேற்கும் ஒரு வளர்ச்சியினை பெற்றிருந்தனர். பின்னர் அங்கு ஏற்பட்ட சதித் திட்டத்தின் விளைவாக அது மாற்றியமைக்கப்பட்டமை வேறு ஒரு திருப்பமாகும். அந்நாடுகளில் அவர்கள் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பார்க்கும் போது கல்வி கற்று உயர் பதவிகளைப் பரந்தளவில் வகிப்பவர்களாக மாறி வர, இலங்கையிலோ அவர்களில் மிகப் பெரும்பான்மையினர் இன்னும் தாம் இலங்கைக்கு குடிப்பெயர்ந்து வந்த சமகால நிலையில் சமூகத்தில் எவ்வாறு தாழ்ந்த அந்தஸ்தினைப் பெற்ற சாதாரண விவசாயத் தொழிலாளர்களாக

வாழ்ந்தனரோ அந்நிலையிலிருந்து பெருமளவுக்கு மாறாத வகையிலேயே இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இதற்கான காரணங்கள், அவர்களுடைய இன்றைய அபிலாசைகள், அவற்றினை அடைவதில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், இவற்றைப் பற்றிய அனுமானங்கள் என்பன பற்றி பகுத்தாராயும் தேவைகள் உள்ளன.

1946ஆம் ஆண்டளவில் இலங்கையின் மக்கள் தொகையின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்திய தமிழ் மக்கள் தனி ஒரு பிரிவினராக இந்நாட்டில் இரண்டாம் இடத்தை வகித்தனர். ஆனால் அடுத்து வந்த 35 வருடங்களில் (1981) நாலாவது இடத்திற்கு தள்ளப்பட்டு விட்டனர். இதற்குப் பிரதான காரணம் இம்மக்களையோ அல்லது இவர்களுடைய உண்மையான பிரதிநிதிகளையோ கலந்தாலோசிக்காது இலங்கை அரசும் இந்திய அரசும் (1964-1974) செய்து கொண்ட தாயகம் திரும்பும் ஒப்பந்தங்களே காரணம் என்பது ஒரு பகிரங்கமான உண்மையாகும். இவ்வாறு தாயகம் திரும்ப வேண்டியவர்கள் தென்னிந்தியர்களாக இருந்தமையினால் இப்பிரச்சனையினை அக்கறையுடன் இந்திய மத்திய அரசு கவனிக்கவில்லை என்ற விமர்சனமும் உண்டு. உகண்டா போன்ற நாடுகளில் வாழ்ந்த வட இந்திய மக்களுக்கு இவ்வாறான பிரச்சனை ஏற்பட்டபோது இந்தியா அம்மக்கள் ஆரம்பத்தில் குடிபெயரக் காரணமாயிருந்த பிரித்தானியர்களையே பொறுப்பேற்கச் செய்தமையினை அவ் விமர்சகர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். தாயகம் திரும்பியோரில் பெரும்பான்மையினர் இந்தியாவில் திருப்தியாக குடியேற்றப்படாமை இன்னுமோர் குற்றச்சாட்டாகவும் கூறப்படுகின்றது. இலங்கையின் தரப்பில் இனவாதச் சக்திகளின் தீவிரவாத முயற்சிகளும் செயற்பட்டதன் விளைவாக இவர்கள் எண்ணிக்கையில் இவ்வாறு குறைக்கப்பட்டனர். 1948ஆம் ஆண்டு வரையான அந்நிய ஆட்சியின் போது விவசாயக் கூலிகளாக மட்டும் கருதப்பட்டவர்களது வாழ்க்கை நிலை உயரவோ, சமூக அந்தஸ்து வளரவோ எதுவித அடிப்படை ஏற்பாடுகளும் உருவாக்கப்படவில்லை. 1948, 1949ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இலங்கை குடியுரிமை சட்டங்கள் காரணமாக ஏற்பட்ட விளைவுகள் பாரதூரமானவை.

ஒரு மனிதனதோ அல்லது சமூகத்தினதோ வளர்ச்சியின் அடித்தளம் அவர்கள் வாழும் இடத்தில் உள்ள உரிமையில் இருந்தே ஆரம்பிக்கின்றது. 1948ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் காரணமாக, குடியுரிமை இழந்தவர்கள் இலங்கையில் நிலத்தினையோ, தாம் வாழும் வீட்டினையோ கூட உரிமை கொள்ள தகுதியற்றவராயினர். இது பல சங்கிலித் தொடர் விளைவுகளை பாதகமான வகையில் ஏற்படுத்தியுள்ளது. இம்மக்களில் பெரும்பான்மையினர் நிதி வசதியற்றவர்கள். விவசாயத் தொழிலாளர்கள் பெற்ற வேதனங்கள் குறைந்தபட்ச வேதனங்கள். சேமிப்புக்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு. இதனால் தமக்கென ஒரு சொந்த வீட்டைப் பற்றி சிந்திக்கவும் தகுதியற்றவர்களாயிருந்தனர். நிதி வசதி ஒருபுறமிருக்க கல்வி வளர்ச்சி இல்லாத நிலையில் ஆழச் சிந்திக்கவும் முடியாதிருந்தனர். மறுபுறத்தில் சிறிய சேமிப்புக்களைக் கொண்டிருந்தவர்களும் தமக்கெனச் சொந்தமாக ஒரு வீட்டைக் கொள்வனவு செய்யவோ நிர்மாணிக்கவோ சட்ட ரீதியாக உரிமையற்றவர்களாக இருந்தனர்.

கடந்த ஐம்பது வருடங்களில் மூன்று இலட்சம் ஏக்கருக்கு அதிகமான நிலம் இலங்கை அரசினால் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்ட போதிலும், நாடற்றவர்கள் என அடையாளம் செய்யப்பட்டவர்களுக்கு இச்சலுகைகள் கிடைக்கவில்லை. இந்நிலையில்தான் வசதிபடைத்த ஒரு சிலரும் கூட தமது சேமிப்புக்களை இலங்கையில் வைத்திருப்பதில் அச்சம் கொண்டிருந்தனர். சிலர் தமது சேமிப்புக்களைக் கொண்டு இந்தியாவில் வீடு கட்டவும் முனைந்தனர். இதற்கு காரணம் இவர்களது முதலீடுகளுக்கு இங்கு பாதுகாப்பு இல்லை என்ற அச்சமே முக்கிய காரணமாகும். இவற்றினால் குடியுரிமை கொண்டிருந்த ஒரு சிலரும் கூட தமது சேமிப்பை தமது இனத்தவர்கள் எவரும் முதலீடு செய்ய முன்வராத துறையில் முதலீடு செய்வதற்கான தைரியத்தினைக் கொண்டிருக்கவில்லை. இவற்றின் இறுதி விளைவாக இந்நாட்டில் வாழும் இந்திய தமிழ் மக்கள் நூற்றாண்டுகளாக வாழும் வரலாற்றினைக் கொண்டிருந்தாலும் தமக்கென வாழ ஒரு வீட்டிற்கும் உரிமை இல்லாது வாழ்கின்றனர். சிறிய சேமிப்பினையே கொண்டிருப்பவர்கள் அதனை முதலீடு செய்யும்போது அதற்கான பாதுகாப்பு பற்றியே முதலில் சிந்திக்கின்றனர். அது தவிர்க்க முடியாததொன்றாகும். இத்தகைய பாதுகாப்பு பற்றிய எண்ணங்களுக்கு உரமிடும் வகையில் பேரினவாதச் சக்திகள் 1956, 1971, 1977, 1981, 1983 ஆகிய வருடங்களில் சிறுபான்மையினருக்கு எதிராக இலங்கையில் அவிழ்த்து விட்ட வன்செயல்கள் செயற்பட்டன. இவ்வாறாக இந்திய வம்சாவளி மக்கள் இந்நாட்டில் தம்மைப் பிணைத்துக் கொண்டு காலூன்றி நிற்க இயலாத வகையில் முதலில் பிரசாவுரிமைச் சட்டமும் பின்னர் தொடர்ந்து ஏற்பட்ட இனக் கலவரங்களும் காரணமாயின. சொந்த வீடில்லாத ஒருவனது எதிர்கால முன்னேற்றத்திற்கான திட்டங்கள் அத்திவாரமில்லாத கட்டிடமாகின்றது. இலக்கு ஒன்றினை நோக்கிச் செயற்பட

முடியாது போகின்றது. தன்னை ஒரு இடத்துடன் பிணைத்துக் கொள்வதனை ஊக்குவிப்பதாக இல்லை. ஒவ்வொருவரதும் சுதந்திரம் முதலில் அவர் வாழும் இல்லத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றது. அது அவனுடைய உரிமையாகவும், அந்நியரது தலையீடு இன்றியும் அமையும் போதுதான் அவனால் ஏனைய காரியங்களை மனத் தெளிவுடன் ஆற்ற முடியும். இவர்களில் மிகப் பெரும்பான்மையினர் பெருந்தோட்டங்களில் 20' x 12' பரப்பிலான சிறிய அறையொன்றிலேயே வாழ வேண்டியவர்களாக இருக்கின்றனர். இந்த அவலம் காரணமாக அவர்களிடையே சுகாதாரம், கல்வி, மன ஆரோக்கியம், போசாக்குக் குறை என்பவற்றில் வளர்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லாது போகின்றன.

இவ்வாறான சூழ்நிலையில்தான் இந்தியத் தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையினர் இன்றும் இலங்கையில் வாழ்கின்றனர். போதாக்குறைக்கு நாட்டில் இப்போது நிலவும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நிலவும் உள்நாட்டுப் போர் காரணமாக இவர்களும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். இப்போருக்கு வித்திட்டவற்றில் முக்கியமான 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது ஆரம்பத் தாக்குதல்களுக்கு ஆளாகி அழிக்கப்பட்ட 18,000 சொத்துக்களில் கணிசமானவை இம்மக்களுடைய சொத்துக்களாகும். ஏறத்தாழ 260,000 குடும்பங்களில் ஐந்து வீதத்திற்கும் (13,000) குறைவானோரே சொந்த வீடு நிலபுலன்களை கொண்டிருந்தவர்கள். அந்த வெகுசில சொத்துக்களும் தீக்கிரையாக்கி அழிக்கப்பட்டன. தப்பிய ஒரு சிலர் அச்சம் காரணமாக சந்தை விலையிலும் ஆகக் குறைந்த விலைக்கு விற்க வேண்டியவராயினர். எனவே இவர்களில் வசதி படைத்தவர்கள் எனக் கருதப்பட்ட ஒரு சிலரும் இவற்றால் நாட்டை விட்டு வெளியேற இவர்களில் பெரும்பாலும் நிதி வசதி, கல்வித் தேர்ச்சி, தொழில் தேர்ச்சி அற்றவர்களே தொடர்ந்தும் இந்நாட்டில் வாழுகின்றனர்.

இவ்வாறான அவலங்களுடன் கடந்த 170 வருடங்களாக இந்நாட்டில் வாழ்ந்த வகையிலேதான் தொடர்ந்தும் வாழ வேண்டுமா என்பது இவர்களை எதிர்நோக்கும் பெரும் வினாவாக உள்ளது. இந்நிலைமைகளில் மாற்றம் ஏற்படாதா என்ற ஏக்கம் இவர்களிடையே காணப்படுவது இயல்பு.

விவசாயத் தொழிலாளர்களாகவும், நிலமற்றவர்களாகவும் காணப்படும் இவர்கள் நிரந்தரமாக எங்கும் வேரூன்ற முடியாத நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்க குறைபாடாகும். கல்வி, தொழில் பயிற்சி இல்லாமல் உயர் தொழில்களுக்கு செல்வதற்கான



வாய்ப்புக்களும் இல்லை. தலைமைத்துவ வாய்ப்புக்களும் அரிது. தொழிற்சங்க அமைப்புக்களே இவர்களுக்கான ஒரே வாய்ப்பாக காணப்படுகிறது. இதனால் இவர்களால் ஓரளவு கல்வி கற்ற ஒரு சிலர் தொழிற் சங்கங்களுடன் இணைந்து அல்லது தாமாகவே தொழிற்சங்கங்களை ஆரம்பித்துச் செயற்படுவது குறிப்பிடத்தக்க ஒரு போக்காகும். தற்போது அரச சார்பற்ற நிறுவனங்களில் இவர்களது ஆர்வம் பெருகி வருகின்றது. சம்பிரதாயமான உயர் தொழில்களுக்குச் செல்வதற்கு சில குறித்த வகையிலான கல்வி, தொழிற் பயிற்சி தகுதிகள் தேவை. தன்னம்பிக்கையும் ஓரளவு கல்வியும். சில தலைமைத்துவ தகைமைகளையும் கொண்டவர்கள் இவ்வாறான தொழிற்சங்க, அரசு சார்பற்ற நிறுவன நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டுகிறார்கள். இந்திய தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட பெருந் தோட்டங்களில் தொழிலாளராக பணி புரிவது தொழிற்சங்க நடவடிக்கை களுக்கு வாய்ப்பாக உள்ளமை குறிப்பிடக் கூடிய ஒன்றாகும். மறுபுறத்தில் நாட்டில் இயங்கும் பிரதான அரசியல் கட்சிகள் மிக அண்மைக் காலம் வரை இவர்களுடைய நலனில் அக்கறை காட்டவில்லை. இதனால் இவர்களில் குறிப்பிடத்தக்க வகையில் தொழிற்சங்க ஈடுபாடு காணப்பட்டது. இவ்வாறான ஒரு நிலைமையினை இலங்கையில் மாத்திரமன்றி மலேசியா, பீஜி ஆகிய நாடுகளிலும் காண முடிகிறது. அந்நாடுகளின் பெருந் தோட்டங்களிலும் இந்திய வம்சாவளியினரே பெருமளவில் தொழில் புரிகின்றனர். எனவே தொழிற்சங்க வாதிகளும் இச் சமூகத்தில் இருந்தே வந்துள்ளனர்.

ஆனாலும் 1988ஆம் ஆண்டின் பின்னர் குறிப்பாக இலங்கையில் நடைபெற்ற 1989ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின் இந்திய வம்சாவளித் தமிழர்கள் வாக்காளர் களாகப் பதியப்பட்டமையினால் அவர்களது அரசியல் ஈடுபாடு அதிகரித்தமையினை இனங்காண முடிகிறது. 1948ஆம் ஆண்டில் குடியுரிமை அகற்றப்பட்டு நாடற்றவர்களாகினர். 1988ஆம் ஆண்டில் இலங்கையில் சட்டபூர்வமாக வாழுகின்ற ஆனால் இந்திய பிரசாவுரிமைக்கு விண்ணப்பிக்காத அனைத்து இந்திய வம்சாவளித் தமிழர்களும் இந்நாட்டு பிரசைகள் என அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இடைப்பட்ட (1948-1988) நாற்பது ஆண்டு காலத்தில் ஒப்பந்தங்கள் மூலம் இவர்களில் ஒரு பகுதியினரை தாயகத்திற்கு திருப்பி அனுப்பியமை, வன்செயல்களால் தாமாக நாட்டை விட்டு வெளியேறியமை காரணமாக இம்மக்கள் பிரிவினருக்கு கணிசமான

பலவீனம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது. நாட்டின் குடித்தொகையில் 12.5 வீதமாயிருந்த இரண்டாவது முக்கிய பிரிவினர் இப்போது நாட்டின் குடித்தொகையில் 7 வீதமாக குறைக்கப்பட்டு இனங்களிடையே நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டு விட்டனர்.

எண்ணிக்கையில் இவ்வாறு வீழ்ச்சி பெற்றிருக்க, வாழ்க்கைத் தரத்திலும் தாழ் நிலையே காணப்படுகின்றது. சராசரி இலங்கையரது தலா வருமானம் 825 ஐ. அ. டொலராக (1998) அதிகரித்துள்ளது. ஆனால் இந்தியத் தமிழர்களது வருமானம் இதில் 40 வீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகிறது. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களது அன்றாட வேதனங்கள் குறைவிருத்தி பொருளாதாரத்தில் தாழ் நிலையில் காணப்படுவது ஆச்சரியத்திற்குரிய ஒன்றல்ல. இவர்கள் மிக அருமையாகவே உயர் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும், இவர்கள் கல்வியல் தேர்ச்சி பெற்று உயர் வருவாயினைத் தருகின்ற தொழில்களான சட்டவியல், பொறியியல், மருத்துவம், கணக்கியல், முகாமைத்துவம் போன்ற துறைகளில் ஈடுபடுவதன் மூலமும், கல்வி கற்பதன் மூலம் தமது பின் தங்கிய நிலைமைகளுக்கான காரணங்களை அறிந்து அதற்கேற்ப தமது நடத்தைகளை தாமாக மாற்றிக் கொள்ளும் சிந்தனை தெளிவு பெற்ற ஒரு நிலைக்கு உயர்வதன் மூலமே வழி காண முடியும்.

அரசாங்கம் வழங்கும் உயர் வருமான தொழில்களை பெற முடியாதவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும் இருப்பதோடு, அவ்வாறு பெறமுடியாததனால், அக்குறைபாட்டினை ஈடு செய்யும் வகையில் இவர்கள் தொழிற்சங்கங்கள் அரசு சார்பற்ற நிறுவனங்களில் ஈடுபாடு காட்டி வருகின்றனர். அண்மைக் காலங்களில் தேசிய அரசியலிலும் இவர்கள் ஈடுபடுவதும் குறிப்பிடத் தக்கது. உயர் உத்தியோகங்களை பெற்றுக் கொள்ள முடியாத குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் ஒரு முயற்சியாக இவர்களது தொழிற்சங்க, அரசியல் ஈடுபாடுகள் காணப்படுகின்றன என பேராசிரியர் ஒருவர் விமர்சித்தமையினை இங்கே குறிப்பிட்டுக் கூறலாம்.

மக்களைப் பொறுத்தமட்டில் கடந்த அரை நூற்றாண்டாக எதுவித குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைப் பெறாது அபிவிருத்தி செய்முறையில் தேங்கிய நிலையில் காணப்படுகின்றார்கள் என்ற விமர்சனமும் உண்டு. (கல்வித் துறையில் சிறிய மாற்றம் உண்டென்பது குறிப்பிட வேண்டியதொன்றாகும்.) 35 வீதமாயிருந்த எழுத்தறிவு நிலை 68 வீதமாகவும் 3500 பாடசாலை ஆசிரிய பதவிகளை இவர்கள் இன்று பெற்றிருப்பதும் குறிப்பிட வேண்டியதாகும்.



இச்சமூகம் மாற்றங்களை ஆவலுடன் எதிர்நோக்கிச் செயற்படுவது குறிப்பிடத்தக்கது. மலையகப் பிரதேசத்தின் அரசியலில் குறிப்பிடத்தக்க ஒரு சக்தியாக இவர்கள் காணப்படுகின்றார்கள். இவர்களுடைய ஆதரவினைப் பெறும் அரசியல் கட்சியே இங்கே அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடிய நிலைமையே காணப்படுகின்றது. இதற்கு இவ்வருட (1998) ஆரம்பத்தில் நடைபெற்ற பிரதேச சபை (உள்ளூராட்சி) தேர்தல் சிறந்த உதாரணமாகும். இவர்களுடைய ஆதரவைப் பெற்றதனால் ஐக்கிய தேசிய கட்சி பல இடங்களில் வெற்றியீட்டியதுடன் அடுத்து வரும் மாகாண சபை தேர்தலிலும் இவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டி, இந்திய வம்சாவளி வாக்காளர்கள் மீது கூடிய கவனம் செலுத்தும் நடவடிக்கைகளை இனங்காண முடிகிறது. இதனால் வாக்காளர்களாக மாறியுள்ள இவர்களுடைய தேர்தல்கால நடத்தைகள் முக்கியமாகின்றன.

இனப் போராட்டங்கள் மலிந்துவிட்ட காலப்பகுதியில் சிறுபான்மையினத்தவர்களுக்கு அனுதாபமிக்க அரசியல் ஆதரவுகள் கிடைப்பது அபூர்வம். பொருளாதாரக் கொள்கை தடையில்லாத வாணிபக் கொள்கையாகவும், திறந்த தாராள பொருளாதாரக் கொள்கையாகவும் மாறிவிட்ட இக்காலகட்டத்தில் பின்தங்கிய சமூகங்கள், தமது உற்பத்தித் திறனை உயர் நிலைக்கு உயர்த்திக் கொள்வதற்கான வழிமுறைகள் மூலமே சுபீட்சத்தினை அடைய முடியும். அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களில் கேள்வி, நிரம்பல் போன்ற சந்தைச் சக்திகள் சுதந்திரமாக இயங்கவிடப் படுமாயின் அங்கே செல்வந்தர்கள் குபேரர்களாகி விடுவதும், வறுமையானவர்கள் தரித்திரர்களாகி விடுவதும் நிச்சயமான விளைவு என்பதனை அபிவிருத்திப் பொருளாதார நிபுணர் மிர்தால் (Myrdal) என்பவர் கூறியுள்ளமை நினைவு கூரத்தக்கது.

இவை யாவற்றையும் மனதிற் கொண்டு பார்க்கும் போது குறிப்பாக இலங்கையில் வாழும் இந்திய தமிழ் மக்கள் தமது ஒரே பலமாயிருந்த எண்ணிக்கை குறைக்கப் பட்டமைக்கான அரசியல் ஒப்பந்தங்கள் போன்றவற்றின் தாற்பரியங்களை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். தம்மை ஏனைய சமூகங்களுக்கு சமமாக பொருளாதாரம், அரசியல், சமூகம் சார்ந்த அனைத்து துறைகளிலும் வளர்த்துக் கொள்ளுதல் மூலமே முன்னேற முடியும். இதற்கு விண்ணிலிருந்து விமோசனங்கள் வரமுடியாது. தாமாக தமது பலம் எங்குள்ளது என்பதனை கடந்த கால அனுபவங்களை மனதிற் கொண்டு, நன்கு இனங் கண்டு அவற்றின் வாயிலாகவே வளரவும் முடியும், வாய்ப்புக்களைப் பெறவும் முடியும் என்ற கருத்து முக்கியமாகும். ☒

# நெருக்கடியும் வெளிப்பாடும்

கொ. றொ. கொண்ஸ்ரன்ரைன்

ஒரு படைப்பின் தன்மை எழுந்தமானமாக ஏற்படும் ஒரு நிலையல்ல. அதற்கு ஒரு தக்க பின்புலம் உண்டு. அது ஒரு காலத்தைப் பற்றிய கருத்து. கலை இலக்கிய வளர்ச்சி என்பது சமூகத்தினதும் கலைஞரினதும் சார்பான ஒரு மாற்றமாகும். ஒவ்வொரு சமூகத்திலும் கலை இலக்கிய வளர்ச்சியின் வேகங்களும் தன்மைகளும் வேறுபட்டன. அது அவ்வச் சமூகத்திற்கென பிரத்தியேகமானது.

ஒரு சமூகத்தில் ஒரு குறித்த காலத்தில் காணப்படும் கலை இலக்கிய தன்மையினை வேறொரு சமூகத்தினது சமகால நிலையுடன் ஒப்பிட்டு இது பின்னடைவானது அது முன்னேற்ற மானது என தரம் பிரிப்பது அடிப்படைகளற்ற ஒரு கருத்துப்பாடு. கலை இலக்கிய வளர்ச்சி சமூக மாற்றத்துடன் இணைந்து செல்வது. ஆகவே சமூக மாற்றம் சார்பாகவே அது நோக்கப்படவேண்டியது. கலையின் வரலாறு சமூக வரலாற்றின் ஒரு வடிவமே.

சமூகங்கள் பலவித நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றன. இந்தச் சமூக நெருக்கடிகளின்போது கலை இலக்கியங்கள் புதிய உத்வேகத்தைப் பெறுகின்றன. அவை புதுப் பொலிவு பெறுகின்றன.

எந்த ஒரு உயிரியும் நெருக்கடிக்குள்ளாகும்போது தனது தப்பிப்பிழைத்தலை உறுதி செய்யும் வகையில் தன்னாலான எல்லா முயற்சிகளையும் செய்யும் என உயிரியல் விஞ்ஞானம் கூறுகிறது. அதேபோல ஒரு படைப்பாளி நெருக்கடிக் குட்படும்போது அவன் தனது படைப்பாற்றல் முழுவதையும் பிரயோகிக்கக்கூடிய சூழ்நிலையினை தேவையினை எதிர் கொள்கிறான்.

வங்க மறுமலர்ச்சியும் இந்திய விடுதலைப் போராட்டமும் தந்த படைப்பாளிகளின் செல்வாக்கும் முக்கியத்துவமும் இன்று கூட இந்திய கலை இலக்கிய வரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் இந்திய உபகண்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ஏற்படுத்திய அதிர்வலைகள் இலங்கையின் கலை இலக்கியத் தளத்திலும் கணிசமான பாதிப்புகளை ஏற்படுத்தவே செய்தது.

லயனல் வெண்ட், எதிர்வீர சரச்சந்திரா, லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், மாட்டின் விக்ரமசிங்கா போன்றோருக்கு இந்திய விடுதலைப் போராட்டமும் அக்காலத்தில் இந்திய கலை இலக்கிய தளத்தில் ஏற்பட்ட தாக்கங்களும் பெரும் உந்து சக்திகளாக விளங்கின.

> சமூகங்கள் நெருக்கடிக்குள்ளாகும் பொழுது வரன்முறையாக கைக் கொள்ளப்பட்டு வந்த சிந்தனைப் போக்குகளும் அணுகுமுறைகளும் செல்வாக்கிழக்கின்றன.

சமூகங்கள் நெருக்கடிக் குள்ளாகும்பொழுது வரன்முறையாகக் கைக்கொள்ளப்பட்டு வந்த சிந்தனைப் போக்குகளும் அணுகுமுறைகளும் செல்வாக்கிழக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் ஏற்கனவே நிலவிவந்த சிந்தனைப் போக்குகளினதும் அணுகுமுறைகளினதும் போதாமைகளினாலேயே இந்த நெருக்கடிகள் உருவாகின்றன. உதாரணமாக ஈழத் தமிழரின் அரசியல் அணுகுமுறைகளின் போதாமையினாலும் இயலாமையினாலும் ஒரு ஆயுதப் போராட்டம் உருவாக வேண்டிய தேவை ஏற்பட்டது.

இப்படி ஒரு தளத்தில் உணரப் படும் இந்தப் போதாமைகள் இயல்பாகவே புதிய ஒரு சிந்தனைப் பாரம்பரியத்திற்கும் செயற்பாட்டுத் தளத்தின் தோற்றத்திற்கும் வழிகோலுகிறது. இந்த மாற்றம் ஒரு தளத்துடன் மட்டும் நின்று விடுவதில்லை. சமூகத்தின் மற்றைய பரிமாணங்களையும் இந்த மாற்றம் பாதிக்கவே செய்கிறது.

ஈழப் போராட்டம் ஆரம்பித்ததன் பின் எமது சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் நடைபெற்று வந்துள்ளன. இவை நிலையான மாற்றங்களா அல்லது தற்காலிக தோற்றப்பாடுகளா என்பது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தாலும் குடும்பங்கள் முதல் சமூக நியமங்கள் ஈறாக மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கிறது.

இந்த மாற்றங்களின் ஒரு தோற்றப்பாடாகவே கலை இலக்கியத் தளத்திலும் புதிய சிந்தனை வீச்சுக்களும் பரந்த தரிசன வீச்சுமுடைய படைப்பாளிகளின் தோற்றம் கருதப்பட வேண்டும்.

குறிப்பாக 1983க்கு பின் ஈழ கலை இலக்கியத் தளத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறிப்பிடக் கூடியவை. இக்கால கட்டத்திற்கு முன்னரும் ஆங்காங்கு பல முயற்சிகள் நடந்திருந்தாலும் 1983க்கு பின்னரே

நவீன கலை இலக்கிய உத்வேகம் ஈழத் தமிழரிடையே களைகட்டத் தொடங்கியது.

ஈழத்துக் கவிதைகள் எட்டி யிருக்கும் தரிசன வீச்சும் வெளிப்பாட்டு வடிவமும் பலராலும் சிலாகித்துப் பேசப்பட்டுள்ளது. இக்காலத்தில் உருவாகிய கலை இலக்கியவாதிகளின் ஆளுமையும் அவர்களது தரிசன வீச்சும் வித்தியாசமானவை.

புலம் பெயர்ந்த ஈழத்தமிழரின் கலை இலக்கிய வெளிப்பாடுகள் தனித்துக் கருதப்பட வேண்டியவை. ஆரம்ப காலங்களில் இவை ஈழத்து வாழ்வின் அனுபவத் தாக்கத்தின் ஒரு தொடர்ச்சியாக இருந்த நிலை மாறி அவர்களது படைப்புகள் தமக்கே உரிய அனுபவச் சூழலையும் வெளிப்பாட்டுத் தளத்தினையும் உருவாக்கி வருவதனை அண்மையில் வெளிவந்த பல படைப்புகளுக்கூடாக ஓரளவு தெளிவாகக் காணக்கூடியதாயுள்ளது. ஆக புலம் பெயர்ந்த ஈழத்தமிழரின் படைப்புகள் ஈழத்தில் வாழும் படைப்பாளிகளின் முயற்சிகளின் தொடர்ச்சி அல்ல. அவை தனித்துவமானவை.

புலம் பெயர்ந்து வாழ்பவர் களின் சூழ்நிலையும் நெருக்கடிகளும் வித்தியாச மானவை. புலம் பெயர்ந்து வாழ்பவர்கள் எதிர்கொள்ளும் ஒரு முக்கியமான நெருக்கடி அவர்களது சுய அடையாளம் (identity) பற்றியதாகும். அவர்களது படைப்புகள் அவற்றின் தன்மை பற்றிய தரமான ஆய்வுகள் வெளிப்படத் தொடங்கும் பட்சத்தில் அவர்களது வாழிடம் ஏற்படுத்தும் வித்தியாசமான நெருக்கடிகள் தொடர்பாகவும் அது படைப்பாற்றலில் செலுத்தும் செல்வாக்கு தொடர்பாகவும் நாம் அறியக்கூடியதாக இருக்கும்.

கிழக்கிற்கும் மேற்கிற்குமான பனிப் போரின் முடிவுடன் நாடுகளின் எல்லைகட்குட்பட்ட நெருக்கடிகள் பல்வேறு நாடுகளிலும் முனைப்புப் பெற்று வரத் தொடங்கியுள்ளது. இது நேரடியாக பனிப்போரின் (cold war) முடிவுடன் தொடர்புபடாவிடினும் இவற்றின் முக்கியத்துவம் பனிப்போரின் முடிவுடன் சர்வதேச மட்டத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

அதேபோல மனித உரிமைகள் பற்றியும் ஒடுக்குமுறை பற்றியும் பல்வேறு மட்டங்களிலும் அண்மைக் காலங்களில் மிக கரிசனையுடன் நோக்கப்படுகிறது.

இத்தகைய ஒரு பகைப்புலம் மொழி ரீதியாகவும் சாதி ரீதியாகவும் அல்லது வேறுபட்ட பண்பாட் டம்சங்கள் ரீதியாக சிறுபான்மையினர் என்ற காரணத்திற்காகவோ அல்லது வலுவற்றவர்கள் என்ற காரணத்திற் காகவோ ஒடுக்கப்படும் மக்களது போராட்டங்களுக்கு முக்கியத்துவம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இத்தகைய நெருக்கடிகள் படைப்பாக்கத்திற்கு உந்துசக்தியாகத் தொழிற்படும் அதேவேளை பாதிக்கப்பட்ட மக்களின் வெளிப்பாட்டு வடிவங்களுக்கு ஒரு புதிய தளத்தையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இதன் ஒரு வடிவமாக நாம் தலித் இலக்கியங்கள் கறுப்பு இன மக்களது இலக்கியங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பல நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழும் மக்களின் படைப்புகளும் அந்தந்த சூழலில் அவர்கள் எதிர்கொள்ளும் ஒருவித ஒடுக்குமுறையின் வெளிப்பாடாய் அமைவதனைக் காணலாம்.

நெருக்கடிகள் சமூகத்திற்குச் சமூகம், நாட்டுக்கு நாடு வேறுபடக் கூடியன. இந்த வேறுபட்ட நெருக்கடிகள் பொதுவாகக் கலை இலக்கிய படைப்பாக்க உந்து சக்திகளாகத் தொழிற்பட்டாலும் அவை விளைவிக்கும் படைப்புகள் வேறுபடலாம்.

இருப்பினும் சர்வதேச தளத்தில் ஏற்படும் மாற்றங்கள் சில பொது அடிப்படைகளில் ஒத்த நெருக்கடிகளைப் பரவலாக ஏற்படுத்தலாம். அல்லது ஒத்த நெருக்கடிகளின் முக்கியத்துவத்தை உயர்த்தலாம்.

இப்படி ஒரு பொது அடிப்படையில் ஏற்படும் நெருக்கடியின் முக்கியத்துவம் உயரும் பொழுது அவை இணைந்து சர்வதேச தளத்தில் ஒரு புதிய செல்நெறியினை நோக்கி கலை இலக்கிய இயக்கத்தை இட்டுச் செல்லலாம். இப்படியான ஒரு விளைவினையே நாம் இந்த ஒடுக்கப்படும் மக்களது வெளிப்பாட்டு வடிவங்கள் பெற்றுவரும் முக்கியத்து வத்தில் காண்கிறோம். ஆக தலித் இயக்கம் ஒரு சர்வதேசப் போக்கின் பிராந்திய வடிவம்.

ஒரு சமூகத்தினதோ தனி மனிதனினதோ இருப்பு, அடையாளம் என்பன கேள்விக்குள்ளாகும்போது அந்தச் சமூகமும் சரி, தனிமனிதனும் சரி தன் இருப்பை, அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு எடுக்கும் சில நடவடிக்கைகளில் படைப்பாக்கச் செயற்பாடும் ஒரு முக்கிய பரிமாணமாகும்.

இந்த வெளிப்பாட்டிற்கு அவன் எதிர்கொள்ளும் சவால் உந்துசக்தியாகத் தொழிற்படும் அதேவேளை அதன் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தனது கணிசமான செல்வாக்கினையும் செலுத்துகிறது.

# இலங்கையிற் தமிழர் உயர்கல்வி

பேராசிரியர் சோ.சந்திரசேகரன்
கொழும்புப் பல்கலைக்கழகம்

இலங்கைக்குத் தேசிய பல்கலைக்கழகமொன்று தேவை எனக் கூறிப் பாடுபட்டவர்களில் முக்கியமானவர்கள் பொன்னம்பலம் சகோதரர்கள், கலாநிதி ஆனந்த குமாரசாமி போன்ற இலங்கைத் தமிழர்களாவர். தேசிய மறுமலர்ச்சிக்கும் மொழி கலாசார மேம்பாட்டுக்கும் உதவக் கூடியது முழுமையான பல்கலைக்கழக அமைப்பே என்று வாதிட்டனர். ஏறத்தாழ 4 தசாப்த கால போராட்டத்தின் பின்னர் 1942ஆம் ஆண்டில்தான் இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

19ஆம் நூற்றாண்டிலேயே இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, சென்னைப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டு விட்டன. இலங்கையில் 1921இல் நிறுவப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியுடன் அப்போதைக்கு இலங்கையர்கள் திருப்தியுற வேண்டியிருந்தது.

1942இல் முதலாவது இலங்கைப் பல்கலைக்கழகம் உருவான பின்னர், நாட்டின் பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சியில் தமிழ் அறிஞர்கள் பலரின் உழைப்பும் சிந்தனையும் முக்கிய பங்கு கொண்டன. பல்வேறு போதனா பீடங்களின் பண்பு ரீதியான வளர்ச்சிக்குத் தமிழ் அறிஞர்களும் பேராசிரியர்களும் பல வழிகளில் தொண்டாற்றினர். பல முதலாம் தலைமுறைப் பேராசிரியர்களின் பணியை இவ்விடத்து நினைவு கூர வேண்டும். பேராசிரியர் சு.நேசையா, அருட்தந்தை தனிநாயக அடிகள், சுவாமி விபுலானந்த அடிகள், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன், எலியேசர், சி. அரசரத்னம், ஏ. ஜே. வில்சன், எஸ். இராஜரத்னம் என்று இப்பட்டியல் நன்கு நீளும்.

1950 களிலும் 1960 களிலும் தமிழ் அறிஞர்கள் பொருளியல், அரசியல், வரலாறு, புவியியல், கல்வியியல் முதலிய துறைகளில் ஆராய்ச்சிப் புலமை மிகுந்தோராய் முன்னணியில் நின்றனர். இன்று தமிழர் தம் வரலாறு, சமூகவியல், பொருளியல் போன்ற இன்னோரன்ன துறைகளில் ஆய்வுகளையும் பன்னெறி சார்ந்த ஆராய்ச்சிகளைச் செய்து தமிழர் மேம்பாட்டுக்கான வழிகாட்டலைச் செய்யப் போதிய உயர்மட்ட அறிஞர் குழாம் இல்லை என்ற நிலையே தோன்றி விட்டது. இத்துறைகளிலெல்லாம் ஓரிரு சிறப்பறிஞர் மட்டுமே காணப்படுகின்றனர். சமூகவியல், மானிடவியல், உளவியல் போன்ற



துறைகளில் தேர்ச்சி பெற்ற சிறப்பறிஞர்கள் ஒருவர் கூட தற்போது இல்லை. தமிழியல், புவியியல், கல்வியியல் போன்ற துறைசார்ந்த பல இரண்டாம் தலைமுறை ஆய்வாளர்களில், நவீன ஆய்வுப் போக்குகளுக்கமைய இத்துறை ஆய்வுகளை அரசியல், சமூக, பொருளாதார செல்நெறிகளுடன் இயைபுபடுத்திச் சிந்திக்கக்கூடிய பன்னெறிச் சிந்தனையாளர்களின் தொகை அருகி வருவதைக் குறிப்பிட்டுக் கூற வேண்டியுள்ளது.

எடுத்துக்காட்டாக, இன்று இனப்பிரச்சனை தொடர்பாக தமிழர்களுக்குச் சாதகமான, பாதகமான கருத்துக்களை வரலாறு, பொருளியல், அரசியல், சமூகவியல் என்ற பல்வேறு நிலைப்பாடுகளிலிருந்து வெளியிடுவோரும் கட்டுரைகள் எழுதுவோரும் பொதுவாகத் தமிழரல்லாத அறிஞர்களாகவே உள்ளனர். காலஞ்சென்ற நியூட்டன் குணசிங்க மற்றும் ஜயதேவ உயன்கொட, ஜெஹான் பெரேரா போன்றோரின் இனப்பிரச்சனை தொடர்பான தாராண்மை வாதக் கருத்துக்கள் போன்றவற்றுக்கு இணையானவை உள்நாட்டுத் தமிழ் அறிஞரால் அதிகம் முன்வைக்கப் படவில்லை. ஏ. ஜே. வில்சன், எஸ். ஜே. தம்பையா போன்றோர் வெளிநாட்டிலிருந்து விரிவாக எழுதுவது வேறு விடயம். அவ்வாறே தேசிய பொருளாதாரம், கல்வி முறை, சுற்றாடல் பிரச்சனைகள் போன்ற விடயங்கள் பற்றிக் காத்திரமாக சிந்தித்து எழுதும் பல்கலைக்கழகத் தமிழ் ஆய்வாளர்கள் மிகவும் அருகி வருகின்றனர். அறிஞர் தொகை குறையும் போது ஆய்வுகளும் எழுத்துப் பங்களிப்பும் குறைவது தவிர்க்க முடியாததே.

இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினர் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். கடந்த 50 ஆண்டு காலப் பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சி இவர்கள் மத்தியில் 4-5 அறிஞர்களை யாவது சரியாக உருவாக்கவில்லை. பேராசிரியர்கள் சின்னத்தம்பி, மூக்கையா, சந்திரசேகரன் - இதற்கு மேல் பட்டியல் நீளவில்லை. வரலாறு, இலக்கியம், சமூகவியல் என்று பற்பல துறைகளில் ஆய்வாளர்கள் எவரும் தோன்றவில்லை. இந்நிலையில் ஆய்வுப் பயிற்சியும் புலமையும் அற்றோர் தமது ஆற்றலுக்கேற்ப வெளியிட்டு வரும் சிறு பிரசுரங்களை இனங்காண முடிகின்றது. உயர்கல்வி வாய்ப்புகளைப் பெறாத இவ்வெழுத்தாளர்கள் முறையான உயர்கல்விப் பயிற்சியைப் பெற்றிருந்தால் தமது சமூக, இலக்கிய ஆர்வங்களைக் கொண்டு ஒரு புதிய அறிஞர் தலைமுறையை உருவாக்கியிருப்பர். இம்மக்கள் மத்தியில் கலை, இலக்கிய ஆர்வலர்களும் எழுத்தாளர்களும் வளர்ந்த அளவுக்கு சமூக அறிவியல் அறிஞர்கள் வளர்ச்சி பெறவில்லை.

நாட்டின் பலபகுதிகளிலும் செறிந்து வாழும் தமிழ் மக்கள் தம் பொருளாதார, அரசியல், சமூக, பண்பாடு மற்றும் கல்வித்துறைச் சீரழிவுகள் பற்றிய ஆய்வுபூர்வமான எழுத்துக்கள் இன்றைய ஒரு அத்தியாவசிய தேவை; தமிழ் மக்கள் இத்துறைகளில் இதுவரை காலமும் நடந்து வந்த பாதை, அவர்கள் கடந்து வந்த பாதை பற்றிய அறிவு பூர்வமான, ஆக்க பூர்வமான ஒரு மதிப்பீடும் இன்றைய அவர்தம் நிலைமை பற்றிய கணிப்பீடும் தேவை. இவற்றைச் செய்யக் கூடிய கற்றறிவாளர்களின் பற்றாக்குறை எமது பல்கலைக்கழகங்களிலும் சமூகத்தின் மத்தியிலும் காணப்படுவது சுட்டிக் காட்டப்படவேண்டிய ஒரு குறை. ஒரு சமூகத்தை அதன் பல்பரிமாண மேம்பாடு நோக்கி வழிநடத்திச் செல்லும் பொறுப்பை அச்சமூகத்தின் அரசியல் தலைமைப் பீடங்கள் மட்டும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது. சமூக மேம்பாட்டை நெறிப்படுத்தி வழிகாட்டக் கூடிய அறிவும் ஆற்றலுமிக்க சிந்தனையாளர்களின் தலைமைத்துவமும் தேவை. உலகளாவிய புதிய போக்குகள் கடந்த காலம், தற்காலம் பற்றிய வரலாற்றுணர்வு மட்டுமன்றி, எதிர்கால அரசியல், பொருளாதார, சமூக, பண்பாடு, கல்வி முறைச் செல்நெறிகள் பற்றிய அறிவும் உணர்வும் இன்றைய அபிவிருத்திக் கொள்கைகள் பற்றித் தீர்மானிக்கத் தேவை என வலியுறுத்துகின்றன. இத்தகைய எதிர்காலவியல் நோக்கும் ஆய்வுப் பண்பும் எமது நாட்டில் தோன்றி விட்ட நிலையில், தமிழ் சமூகம் இத்தகைய எதிர்காலவியல் சிந்தனையாளரின் பற்றாக்குறையுடன் நலிந்து வருவதைக் குறிப்பிடல் வேண்டும்.

இன்றைய பல்கலைக்கழகக் கல்வியில் மரபுவழி அம்சங்களின் செறிவை இலகுவில் இனங்காண முடிகின்றது. பாடசாலையின் உயர்நிலைக் கல்வி நிலை (ஆண்டு 12, 13) விஞ்ஞானம், கலை, வர்த்தகவியல் என்பவற்றை மட்டும் உள்ளடக்கிப் பின்னர் பல்கலைக்கழகக் கல்வி மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், கலை, முகாமைத்துவம், சட்டம் என்றும் மரபுவழித் துறைகளுடன் முற்றுப் பெறுகின்றது. புதிய பயிற்சி நெறி மாற்றங்களும் சீர்திருத்தங்களும் இவற்றை அண்டியதாகவே அமைந்துள்ளன. சமூக அறிவியல், இயற்கை அறிவியல் முதலாம் துறைகளில் இன்று ஏற்பட்டு வரும் பெருவாரியான வளர்ச்சி, இரண்டொரு பாடநெறிகளுக்குள் உள்ள பிணைப்பால் ஏற்பட்டு வந்த பன்னெறி அணுகுமுறை (inter-disciplinary approach), பல்வகைக் கலை மற்றும் அறிவியல், தொழில் நுட்ப இணைப்பினால் ஏற்பட்டுவரும் பிணைப்புத் துறைகள் (Composite disciplines) என்ற நவீன செல்நெறிகள் பற்றிய உணர்வின்றி பல்கலைக்கழகப் பயிற்சி நெறிகள் மரபுவழியில் இயங்கி வருகின்றன. இப்புதிய செல்நெறிகள் அறிவுத் துறைகளின் துரிதமான வளர்ச்சியை விட அவற்றின் அடிப்படை அமைப்பு மாற்றங்களையே பிரதிபலிக்கின்றன. பல்வேறு அறிவுத்துறைகளின் பாகங்களைப் பல விகிதங்களில் சேர்த்து பொருளாதார, சமூகவியல், அரசியற் பொருளாதாரம், பண்பாட்டு வரலாறு, விஞ்ஞானத்தின் சமூகவியல் என்று சமூக அறிவியற் துறையில் புதிய துறைகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இத்துறை சார்ந்த புதிய தலைமுறை ஆய்வறிஞர்கள் தமிழர் மத்தியில் உருவாகும் வகையில் அவர்தம் உயர்கல்வி வளர்ச்சி பெறவில்லை என்பதையே இவ்விடத்து வலியுறுத்த விரும்புகின்றோம்.

இலங்கையில் 50 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட பல்கலைக் கழகக் கல்வி முறை ஒப்பீட்டளவில் 'சிறிய ஒரு உயர்கல்வி முறையாக' வளர விடப்பட்டமை இந்நாட்டின் சிறுபான்மையின மக்களுக்குப் பாதகமாக– அவர்கள் மத்தியில் பன்னெறி சார்ந்த அறிஞர் குழாமொன்று உருவாகத் தடையாக அமைந்துள்ளது. 12 பல்கலைக்கழகங்களையும் 32000 மாணவர்களையும் 2600 ஆசிரியர்களையும் கொண்ட பல்கலைக்கழக அமைப்பில் இன்று தமிழர் வீதாசாரம் மிகக்குறைவு. மக்கள் தொகையில் தமிழர் 18 வீதம் என்ற கணக்கில், 6000 தமிழ் மாணவர், 400 ஆசிரியர்கள் இருப்பார்களோ என்பது சந்தேகமே! எமது மதிப்பீட்டில் 3500 – 4000 மாணவர்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. மொத்த மாணவரில் தமிழ் மாணவர் தொகை பல்கலைக்கழகக் கையேடுகளில் சரியாகத் தரப்படுவதில்லை. அனுமதி ஆண்டிற்குரிய மாணவர் அனுமதி விபரங்கள் இனவாரியாகத் தரப்படுகின்றனவேயன்றி பல்கலைக்கழக மொத்த தமிழ் மாணவர் தொகை அவ்வாறு தரப்படுவதில்லை. மொத்த தமிழ் மாணவர்களைப் பல்கலைக்கழக வாரியாகவும் பயிற்சி நெறி வகைப்படியும் கணித்துப் பார்க்கும்போது யாழ். பல்கலைக்கழகம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலேயே பெரும்பான்மையான தமிழ் மாணவர்கள் பயில்வது தெரிய வருகின்றது. இவை எந்த அளவுக்கு சகல வசதிகளுடனும் முழுமையாகவும் ஆசிரியர் பற்றாக் குறையின்றி இயங்கி வருகின்றன என்பது யாவரும் அறிந்ததே! பல்வேறு காரணங்களால் இப்பல்கலைக்கழகங்கள் தென்னிலங்கையில் இயங்கும் தேசியப் பல்கலைக்கழகங்களுக்கு இணையான முறையில் வளர்ச்சி பெறவில்லை என்பதை ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை.

பெரும்பான்மையான தமிழ் மாணவர்களுக்கான இடங்கள் இப்பல்கலைக் கழகங்களில் ஒதுக்கப்பட்ட நிலையில், தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்கள், ஒப்பீட்டளவில் அமைதியான சூழ்நிலையில் புதிய அமைப்பு மாற்றங்களைப் பெற்று வருகின்றன. தொழிலாளர் கல்வி நிறுவனங்கள், விஞ்ஞானம், மருத்துவம், முகாமைத்துவம், விவசாயம் முதலிய துறைகளில் பட்டப் பின்படிப்பு நிலையங்கள், கம்ப்யூட்டர் கல்விக்கான விசேட நிறுவனங்கள் எனப் பல்வகையான உயர்கல்வி அமைப்புகள் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நவீன பயிற்சி நெறிகளைப் பொறுத்தவரையில் பட்டப் பின்படிப்பு மட்டத்தில் தென்னிலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள சில பயிற்சி நெறிகள்:

- சமுதாய அபிவிருத்தியில் பட்டப்பின்படிப்பு
- பெண்ணியல் ஆய்வில் பட்டப் பின்படிப்பு (women studies)
- தொழிலாளர் ஆய்வில் பட்டப் பின்படிப்பு (labour studies)
- பொருளாதார அபிவிருத்தியில் பட்டப் பின்படிப்பு
- பிரயோக உளவியலில் பட்டப் பின்படிப்பு
- உளவியல் பரீட்சை முறையில் பட்டப் பின்படிப்பு (psychological testing)
- ஆலோசனை வழங்கலில் பட்டப் பின்படிப்பு (counselling)

இவை மாதிரிக்குச் சிலவே! இப்பயிற்சி நெறிகளில் சில சிங்கள மொழியில் மட்டுமே நடாத்தப்படுகின்றன. இந்நிலையில் தமிழ் மாணவர்கள் இப்புதிய பயிற்சி நெறிகளைக் கற்றுத் தேறமுடியாத நிலை காணப்படுகின்றது. சுருங்கக் கூறின், தென்னிலங்கையில் பட்டப்படிப்புக் கல்வியும் பட்டப் பின்படிப்புக் கல்வியும் சமூக அறிவியற் துறை சார்ந்த ஆராய்ச்சிப் பயிற்சி நெறிகளும் பல புதிய, நவீன பரிமாணங்களைக் கண்டு வருகின்றன. தமிழர்கள் பெருமளவுக்கு இப்புதிய உயர்கல்விப் பாரம்பரியங்களுடன் எதுவித தொடர்புமின்றி வாழுகின்றனர். அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளில் உயர்கல்வி தவிர்ந்த ஏனைய விடயங்களான வாழ்க்கைப் பாதுகாப்பு, வெளிநாடு செல்லல், புனர்வாழ்வு போன்ற அம்சங்கள் முன்னுரிமை பெற்று வருவதும் கண்கூடு.

இலங்கைப் பல்கலைக்கழக அமைப்பில் அனுமதி பெற்று உயர்கல்வி கற்று வரும் தமிழ் மாணவர் தொகுதியில் மற்றொரு விசேட அம்சம் உண்டு. வட கிழக்கில் உள்ள 8 மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய சில தென்னிலங்கை மாவட்டங்களில் (கொழும்பு, கண்டி, நுவரெலியா, பதுளை போன்றன) தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். இவ்வாறு தமிழர்கள் பல மாவட்டங்களில் வாழ்ந்தாலும் தமிழர்களுக்கான பல்கலைக்கழக அனுமதியையும் பல்கலைக்கழகக் கல்வியில் தமிழர்களுக்குரிய உரிமையையும் பேணிப் பாதுகாப்பதற்கு யாழ். மாவட்ட மாணவர்களின் உயர்ந்த பெறுபேறுகளே உதவுகின்றன. நாடளாவிய ரீதியில் அனுமதி பெறும் தமிழ் மாணவரில் ஏறத்தாழ 70–75 வீதமானவர்கள் யாழ். மாணவர்களே! அனுமதி பெறும் மாணவர்களில் 45 வீதமானவர்கள் திறமை சித்தியடிப்படையில் தெரிவு செய்யப்படுவதால், யாழ். மாவட்ட மாணவர்கள், அனுமதியில் முன்னணியில் நிற்கின்றனர்.

இதன் முக்கிய தாற்பரியம் யாதெனில், யாழ். மாணவர்களின் கல்வி நிலை தற்போதைய போர் சூழலினால் பாதிக்கப்பட்டு பெறுபேறுகளில் வீழ்ச்சி ஏற்படும்போது, அனுமதி பெறும் தமிழ் மாணவர் தொகையும் வீழ்ச்சியடைய நேரிடும் என்பதாகும். இவ்வீழ்ச்சியை ஏற்கனவே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அண்மைக் காலங்களில் தமிழ் மாணவர் அனுமதி 1000 இலிருந்து 700ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. எதிர்காலத்தில் 10,000 மாணவர்கள் அனுமதி பெறும்போது 1800–2000 தமிழ் மாணவர்கள் அனுமதி பெறும் நிலை தற்போது இல்லை என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். யாழ். மாவட்டத்தில் ஏற்படும் கல்வித் தராதர வீழ்ச்சி, நாடளாவிய ரீதியில் தமிழர்களின் உயர்கல்வி வாய்ப்புகளையும் உரிமையையும் பாதிக்கும் என்பதை மனங்கொளல் வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதி பெறும் தமிழ் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் பயில வேண்டியுள்ளது. இதனை மறுப்பதற் கில்லையெனினும் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் (பேராதனை, கொழும்பு) ஒப்பீட்டளவில் பெருவளர்ச்சி பெற்றுள்ள வளங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லாது போகின்றது. இவ்வளங்களற்ற வட கிழக்குப் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் மத்தியிலிருந்து, உயர் தேர்ச்சியுடைய கற்றறிவாளர் குழாமொன்று உருவாவதில் சிரமங்கள் உள்ளன. பல பாதிப்புகளுக்குள்ளான யாழ். பல்கலைக்கழகத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய நிலையொன்றுண்டு. போர் நிலைமைகளால் ஆசிரியர்களும் மாணவர்களும் சிதறி வாழுகின்ற நிலையே இன்று ஏற்பட்டுள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலான தமிழ் மொழி வழிக் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக் கல்வி கூடிய ஸ்திரத்தன்மையைக் கொண்டு விளங்குவதைக் குறிப்பிட வேண்டும்.

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து தமிழர்களின் உயர்கல்வி நிலைமைகள் எதிர்மறைப் போக்குகளையே காட்டுகின்றன. அவர்களுடைய உயர்கல்வியின் எதிர்காலம் உற்சாகம் தருவதாயில்லை.

# பயணம்

ஆழியாள்

காலையில் இரண்டு ரொட்டிகளைத் தின்ன கெலி இருந்தும், ஒன்றரையாய் சாப்பிட்டு வேலைக்குப் புறப்பட்டேன்.

என்னைப் பொறுத்தவரை வேலைக்குப் போகும் படலம் என்பது பரீட்சைக்குப் படிக்கும்போது ஏற்படும் உணர்வு; புரிந்தும், புரியாதும் இருக்கும். போகாது நிற்கலாம் என்ற யோசனை எட்டிப் பார்க்கும். சீ . . இதென்ன கோழைத்தனம் என உட்குரல் கேட்கும். இறுதியில் நடப்பது நடக்கட்டும் 'நீ உன் கடமையைச் செய் என்பதன் உள்ளார்ந்த பொருளுணர்ந்த மோன நிலையில் கிளம்புவேன்.

முன்னறை வாசலில் இருந்து கேட்வரை சைக்கிளை உருட்டி வருவதற்கு 80 அல்லது 84 அடிகள் எடுத்து வைக்க வேண்டும். அப்படியே சைக்கிளின் முன் ரோதையை கேட்டில் முட்ட வைத்து அதன் கொழுக்கியை 'ணங்' கென்று எடுத்து சைக்கிளை இடமாய் ஒரு தினுசாக வளைத்து கேட்டின் இரும்புக் கேடர்களில் கால்கள் கிழிபடாது வெளியே வந்தால் சுறாவிடமிருந்து தப்பித்த சுகானுபவங்கிட்டும்.

பின்னர் பின் ரோதையை கணக்கெடுத்தவாறு கேட்டில் முட்டியும், முட்டாததுமான துறவு நிலையில் சைக்கிளை நிற்பாட்டி கொழுக்கியை மாட்டுவேன் – 'ணங்' என்று வேறோர் சுருதியில் ஒலிக்கும்.

செம்மண் வீதி.

சைக்கிளின் இருக்கையை ப்ஊ...... ப்ஊ..... என்றெல்லாம் ஊத உகந்த இடம். அப்பா தன் முகத்தின் அன்றாட அலுவல்கள் முடிந்ததும் 'சேவிங் செட்டை' ஊதுவதும் இப்படித்தான். அதில் கொர்.... சர்....என்ற வேற்றொலிகளும் கலந்திருக்கும். என்னதில் கலப்பிருக்காது. சுத்த பஞ்சமத்தில் வரும் ப்ஊ..... ப்ஊ..... ப்ஊ......

இந்த சின்னப் புதுக்குளத்து செம்மண் வீதி ரொம்பச் செழிப்பானது. வேம்பு, தேக்கு, மா மரங்களால் அடர்ந்தது. வவுனியா எங்கும் வெயில் உக்கிர தாண்டவ மாடினாலும் சின்னப் புதுக் குளத்தில் அது இவ் அடர் மரங்களோடு சிரித்துக் கைகோர்த்துப்போம். மந்தைகள் தாம் இடும் பசளைகளை இங்குதான் இடுவோம் என்று சங்கல்ப்பம் செய்தனவோ என்னவோ இன்னோரன்ன வகை சாணி, புழுக்கைகள் இறைந்து கிடக்கும்.

தெருவை ஒரு தரம் அளவெடுத்தவாறு சைக்கிளை இடதுபுறம் சாய்த்து வலது பெடலை தட்டி மேலே சுழற்றிக் கொண்டு வந்து விட்டு, இடக்காலை நெட்ட மரம் போல் உறுதியாய் வைத்துக் கொள்வேன். ஏலவே மேற் கொண்டு வரப்பட்ட பெடலை, வலக்காலால் இலேசாய் அழுத்தியபடி, நெட்ட மரக்காலை மெது, மெதுவாய் காற்றில் உயர்த்தி இடது பெடலில் வைத்தவாறு லாவகமாய் இருக்கையில் அமர்ந்து பெடல்களை மாறி மாறிச் சுழற்றுவேன். மோனம் கலைந்திருக்கும்.

சைக்கிளும் எனக்கேற்றபடி குதிரையாய்ச் சிறகெடுக்கும். சாணிகளுக் கிடையே லாவகமான சுழிப்புகள், சுற்றிவளைப்புகள், வெட்டுகள் அனைத்தும் நடக்கும். எதுவும் இயலாத பட்சத்தில், குவியல்களின் மேலேயே குதிரைப் படையெடுப்புக்கள் நிகழும். ஒவ்வொரு குவியலின் மீதான படையெடுப்பும் அதைக் கடந்த பின் ஓயும். உடனே ஜான்சி ராணியாய் கழுத்தைத் திருப்பி என் படையெடுப்பின் தீரச்சுவடுகள் சாணக் குவியலின் நடுவே டயர் அடையாளங்களாய்த் தென்படுகின்றனவா என்பதைப் பார்த்து கணச் சிமிட்டலில் முன் திரும்புவேன். அடுத்தது படையெடுப்பா, சுற்றிவளைப்பா என்று முடிவு செய்ய ஒரு கணம் மிச்சமிருக்கும்.

செம்மண் வீதியால் வலப்பக்கம் திரும்பி வருகிற தார் ரோட்டை, ஒரே தாவலில் கடந்து பெரிய கல் ரோட்டுக்குள் நுழைவேன். முழுதும் நொறுங்காத கருங்கற்களால் ஆன பாதை இது. இதற்குள் நுழைந்து வெளியேறும் என் வாகனத்துக்கு 'டொக் டொக்' குதிரை அனுபவம் மறுந்தாலும் கிட்டும். பெரிய கல்வீதியைத் தாண்டுகையில் பொருட்கள், பொத்தான்கள், உதிரிப்பாகங்கள் இருக்கின்றனவா என்ற தேடல்களும், அடையாளப்படுத்தல்களும் தினப்படி நிகழ்வு.

அதைக் கடந்து இடப்புறம் திரும்ப, வருவது ஹொரவப் பொத்தானை ரோட்டு. வீதியின் பெயர் வாயில் கெழுத்தி முள்ளு மாதிரிச் சிக்கும். மற்றப்படி நேர்வழி. பள்ளங்கள் சாதாரணம். சிலவற்றை அவசரத்துக்கு பங்கர்களாகவும் பாவிக்கலாம்.

இந்தக் ஹொரவப்பொத்தானை ரோட்டில் அதிக கவச வாகனங்கள் எதிரே ஊர்ந்து வரும். அப்படியான சோம்பேறிகளை எனக்கும் என் நேசப்படை சைக்கிளுக்கும் பிடிப்பதில்லை.

ஆவேசக் கோபத்தில் 'டிரிங் டிரிங்டிரிங்' என்று உரத்துச் சுட்டபடி போவோம். எம் சக்கரங்கள் உருளும். அருகே யோசப் காம்ப்பில் இருந்து ஷெல் வேட்டை நாய்கள், முல்லைக்கு ஓடுவதையும் அவற்றை ஹெலிகள் விட்டுத் துரத்துவதையும் கண்காணித்தபடி எம் சக்கரங்கள் உருண்டோடும். ரோஜர் மூரைப் பார்த்ததிலிருந்து அசையும் ஹெலியை ஒற்றைக் கையால் எட்டிப் பிடித்து ஏற எனக்கும் ஆசைதான். என்றாலும் எனது சைக்கிளின் நேரத்தை இழக்கத் துணியாது ஆசையை அடக்கிக் கொள்வேன். அதன் விளைவு வீதியில் எதிராளிகள் இல்லாவிட்டாலும் மேலும் மூன்று தடவைகள் 'டிரிங் டிரிங் டிரிங்' என்று கண்ணை மூடிக் கொண்டு சுட்டுத் தள்ள வேண்டியிருக்கும்.

இவ்வாறு எங்கள் கூட்டுப் படை முன்னேறிச் செல்கையில் இடப்பக்கமாக உள்ள மன்னார் வீதி கண்ணில் நேராய் விரியும். இம் மூன்றாங் கட்டப் போர் முனையில் திட்டமிட்டபடி வேகங் குறைத்து நிதானமாய், மழைக்காலத்துப் படையணியின் சாணக்கியத்தோடு நாங்கள் நகருவோம்.

இன்றும் பல சீவன்கள் வேலைக்குச் சென்று கொண்டிருக் கின்றன. பாதைகள் குறுக்கும் நெடுக்குமாய், வளைந்தும் நேராயும் சந்து பொந்துகளோடு கிடக்கின்றன. ஒவ்வொருவரும் தனக்கிசைந்ததோர் வாகனத்தில் பயணிக்கின்றனர். சிலர் நடையில்.'

என்றாலும் எங்கள் முகங்களின் மேல் வாயுக்கவசங்கள் துருத்திக் கொண்டிருக்கின்றன. சோறு இருந்தென்ன? சுதந்திரக் காற்றில்லையே. அதுதான் இந்த முகமூடிக் கோலம்.

என்றாயினும் குறுக்கும், நெடுக்குமாய்க் கிடக்கும் இந்த ஒற்றையடிப் பாதைப் புதிரை, விடுவிக்க ஒருவருக்காவது முடியாமல் போய்விடுமா என்ன? அப்போது தென்றலாய்க் கீற்றுக் களிடையே தவழ்ந்து, சிலுசிலுத்து, சிற்றொலிகள் ஒவ்வொன்றாய்ச் சேகரித்து உள்வாங்கி சுழன்றெழுந்து 'ஹோ' எனும் இரைச்சலாய், பேரிரைச்சலாய் ஆரோகணித்து உச்சஸ்தாயியில் தணிந்து குளிர்ந்து எமக்குக் கிட்டும் சுத்தக்காற்று.

சுத்தக்காற்று . . . . . . ! பரிசுத்தக்காற்று . . . . . ! சுதந்திரக் காற்று மோத முகமூடிகள், வாயுக்கவசங்கள் அனைத்தும் அறுந்து வீழும் அக்கணமே.

தேடல்களும் அடையாளப் படுத்தல்களும் ஸ்தம்பிதமாகும்.

அன்று வேலையிலிருந்து எனக்கு ஓய்வு கிடைக்கும். என் சைக்கிள் ஓரிடத்தில் தரித்திருக்கும்.

காற்றின் வருடலில் அதன் இமைகள் மூடுகையில் நானும் மோனத்தில் திளைத்து நிற்பேன். ⌧



# தொடர்பு சாதன வளர்ச்சிக்கு சரியான வழிகாட்டல் வேண்டும்!

ஆ. சிவநேசச்செல்வன்
பிரதம ஆசிரியர், தினக்குரல்

தொலைக்காட்சிச் சேவையின் பாரிய செல்வாக்கையும் வலுவையும் எவரும் குறைத்து மதிப்பிடக் கூடாது. பத்திரிகை, வானொலி என்ற எந்த சாதனங்களிலும் பார்க்க வேகமான ஆளுமை வலுவைக் கொண்டது தொலைக்காட்சிச் சேவை.

பொதுவாக வெகுஜனத் தொடர்பு சாதனங்களை சரியான வழிப்படுத்தலின்றி இயங்க விடுவது கடிவாளமற்ற குதிரையை தெருவில் ஓட விடுவது போன்றது. பொதுஜன மனோபாவங்கள் கட்டுப்பாடற்ற வகையில் சகலவித சர்ப்புகளுக்கும் ஈடு கொடுக்கக்கூடியன. அலைபாயும் மனங்களை அறிவு பூர்வமாகவும், கலாசார மரபுகளுக்கும், பாரம்பரியங்களுக்கும் ஏற்ப வழிப்படுத்தா விட்டால் நச்சுக் கலாசாரமே வேரூன்றும்.

வாழையடி வாழையாக இருந்துவரும் கல்வி, கலாசார மரபுகளையும், பண்பாட்டையும் மாற்றும் வகையில் வெகுஜனக் கலாசாரம் புதிய எண்ணக் கோலங்களை மக்கள் மத்தியில் வேகமாகப் படிய வைக்கக் கூடியது. வர்த்தக நோக்கங்களுக்காகவோ அல்லது சமூகப் பொறுப்புணர்ச்சியற்ற வகையிலோ திசைதிருப்பும் போக்குகள் தோன்றும்போது அவை ஆரம்ப நிலையிலேயே முளையிலே கிள்ளப்பட வேண்டும்.

வெகுசன தொடர்பு சாதனங்களைப் பற்றிய ஆய்வுகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் சமூகவியலாளர்கள், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் வெறுமனே தன்னியக்கமாக யந்திர கதியில் செயற்படுவன அல்ல என்ற உண்மையை ஏகோபித்த நிலையில் ஏற்றுக் கொண்டுள்ளனர். வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மக்கள் நலனுக்காக இயங்குபவை. அவை எழுந்தமானமாகச் செயற்பட ஆரம்பிக்கும் நிலையில் ஆபத்துக்களே அதிகமாகும். வெகுஜனத் தொடர்பு சாதன ஊடகங்கள் மக்களுக்காக, மக்களால், மக்களின் நலன் அபிவிருத்தி கருதி நடாத்தப்படுபவை. இதே

நிலையில் வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் ஜனநாயகப் பண்பைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. அதே நேரத்தில் ஜனநாயகம் சுதந்திரம் என்ற வகையில் எதையும் செய்யலாம் என்ற நிலமைக்கு இடமளிப்பதும் கூட அழிவுப் பாதையையே மிஞ்ச வைக்கும்.

வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் வெறுமனே களிப்பூட்டுவதற்கு மட்டும் பயன்படுத்தப்படுவது என்ற நிலமைக்கு மட்டும் இடமளிக்கக் கூடாது. எந்த நாட்டிலும் அதன் கல்வி, கலாசார, பண்பாடு, அரசியல் வடிவங்களில் நல்லதும் உண்டு. கெட்டதும் உண்டு. எது நல்லது கெட்டது என்று சமூக அளவு கோல்களுடன் மதிப்பீடு செய்யும் முகவர்களாகத் தொடர்பு சாதன ஊடகங்கள் செயற்பட வேண்டும்.

தொடர்பு சாதன ஊடகங்களின் சர்வ வல்லமைப் பண்புகளையும், அதன் விளைவுகளையும் தெளிவாக உணராது முன்யோசனையற்ற செயற்பாடுகளுக்கு இடமளிப்பது ஆபத்தானது. இலங்கை ஒரு அபிவிருத்தியடைந்து வரும் நாடு. சமுதாய நிறுவனங்களும், மதிப்பீடுகளும், நம்பிக்கைகளும் பாரம்பரிய அளவு கோல்களுக்கு உட்பட்டவை. பாரம்பரிய கலாசாரத்தில் ஊறிய நிலையில் திடீரென நவீனத்துவத்தையும் அதன் பக்க விளைவுகளில் ஒன்றான வெகுசனக் கலாசார ஊடுருவலையும், சரியான வழிகாட்டலின்றிச் செயற்படும் வாய்ப்புகளையும் அளிப்பது அபிவிருத்திப் பாதையையும் நம்பிக்கை வலுவையும் வேரிழந்து பாறவைத்துவிடும்.

இலங்கை பல இனங்கள் வாழும் ஒரு நாடு மட்டுமல்ல மத ரீதியாகவும் வேறுவேறு கலாசாரங்களைக் கொண்டது. இனரீதியாக மட்டுமல்ல மொழி அடிப்படையிலும் தனித்துவமான கலாசாரக் கூறுகள் காணப்படுகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் திடீரென நவீனத்துவ வேகம் வெகுசனத் தொடர்பு சாதனங்களினூடாக நுழைவது சமுதாய அடித்தளங்களை சிதைப்பதாக அமையக் கூடாது.

இன்றைய சூழ்நிலையில் தனியார் தொலைக்காட்சிச் சேவையின் ஊடாக வேர்விடும் இந்திய மெல்லிசை, பொப்பிசை, திரைப்பட ஊடுருவல் சமுதாய அடித்தளங்களையே குழிபறிக்கும் தன்மையானது. மத்தியதர வர்க்கத்தினரிடேயும், தொழிலாண்மை (professional) நிறைந்த குடும்பத்தினரிடேயும் கலாசார மாற்றத்திற்கான அறிகுறிகள் துரிதமான வளர்ச்சியைப் பெற்றுள்ளன.



மத்தியதர வகுப்பினரினதும், பிறரினதும் சமூக பொருளாதார உறுதிப்பாட்டின் சின்னமாக தொடர்பு சாதனப் பாவனையும் பெருகியுள்ளது. பத்திரிகைகளை வாசித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல் என்ற மூன்று தேவைகளையும் நிறைவிக்கும் சாதனங்களை தினமும் பயன்படுத்துவதும் இன்றியமையாததாகின்றது.

வாசித்தல், கேட்டல், பார்த்தல் ஒரு வகையில் குடும்ப விவகாரமாகியுள்ளது. சிறுவர்கள், இளைய தலைமுறையினர் குடும்பம் என்ற அமைப்பில் வேறுபாடு இல்லாமல் இந்த தொடர்பு சாதனங்களைத் தமக்குத் தேவையான பொழுதில் எல்லாம் பயன்படுத்துவதும் நாளாந்த வாழ்க்கையாகியுள்ளது.

மத்திய தர வர்க்க, மேல்மட்ட பெற்றோர் தமது குழந்தைகளின், ஓய்வு நேரம், பண்பாட்டு நிலை, ஆளுமை வளர்ச்சி போன்றவற்றைப் பேணும் வகையில் உயர்மட்டக் கலையான சங்கீதம், நடனம், கலைமீடுபாடு, அறிவு வளர்ச்சி போன்றவற்றை வளர்ப்பதில் கவனம் எடுத்தும் வருகின்றனர். இளைய தலைமுறையினர் பாரம்பரிய மதிப்பீடுகளிலிருந்து விலகிச் செல்லாத வகையில் அவர்களை, கலாசாரப் பின்னணியோடு அல்லது ஒழுக்க வரம்புகளிலிருந்து பிசகாது வழிப்படுத்துவதில் கூட கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

இளைய தலைமுறையினரினது அல்லது பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகளது ஓய்வு நேரத்தைச் சரிவரப் பயன்படுத்தும் பணியில் கல்விப் பயிற்சி, தொழில் நுட்பப் பயிற்சி என வழிப்படுத்தும் வாய்ப்புகளைத் தேடி அலையும் நிலையில் தொலைக் காட்சிச் சேவை பொழுது போக்கு என்ற வகையில் காலை முதல் நடு இரவு வரை மெல்லிசை அல்லது பொப்பிசைக் கலாசாரத்தை ஊடுருவ வைப்பது பொறுப்புணர்ச்சியற்ற வர்த்தக மயமான செயற்பாடுகளின் விளைவாகவே அமைகிறது.

திடீரென வர்த்தக ரீதியாக அல்லது, கட்டுப்பாடற்ற வகையில் தோன்றியுள்ள மாற்றங்களின் மத்தியில் இளைய தலைமுறையினரைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்குப் பெற்றோர் தள்ளப்பட்டுள்ளனர். பொப்பிசை, மெல்லிசை, திரைப்படங்கள் புதியதாக அறிமுகமானவை அல்ல. இவை புதிய கலாசார அலையாகத் தோன்றியவைதான். ஆயினும் இதுவரை இவற்றைத் தேடிப் போகும் நிலையே இருந்தது. இப்போது சின்னத் திரையில் வண்ணப்படங்களாக வீடு தேடி வரும் நிலைமையை தொலைக் காட்சிச் சேவை உருவாக்கியுள்ளது. இந்தத் திடீர் ஊடுருவலின் கோரப் பிடியிலிருந்து இளைய தலைமுறையினரை மீட்பது அல்லது வழிப்படுத்துவது அல்லது தடுப்பது

இன்றைய மத்தியதர வர்க்கப் பெற்றோரின் முன்னால் எழுந்துள்ள புதிய பிரச்சனையாகும்.

பொழுதுபோக்கு, திரைப்பாடல், திரைப்படம் என்ற வரிசையில் குடும்பமே தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னர் அமரும் சூழ்நிலை தோன்றியுள்ள நிலையில் யாரை விலக்குவது தடுப்பது என்ற சங்கடமே உருவாகின்றது.

திரைப் பாடல்களில் ஆபாசக் காட்சிகள் வரும்போது பெற்றோரும், பிள்ளைகளும் அல்லது சகோதரர்கள் ஒன்று கூடி சின்னத் திரையில் தோன்றும் வண்ணப்பட வடிவங்களை கூனிக் குறுகி பார்க்கும் நிலைமையும் தோன்றுகின்றது.

ஒரு வகையில் இதனைச் சமுதாய மாற்றத்தின் விளைவு என்று கருத முடியுமா? அல்லது வெகுஜன தொடர்பு ஊடகம் ஜனநாயக ரீதியாக கொடுக்கும் முறைசாராக் கல்வி என்று கருதுவதா? என்பதை அலசிப் பார்க்க வேண்டும்.

கருங்கக் கூறின் படுக்கை யறைக் காட்சிகளை தணிக்கை வரம்புகளையெல்லாம் மீறிக் கலாசாரக் கோலமாக தொலைக்காட்சிப் பெட்டி மூலம் வீடுகளிலிருந்து வயது வேறுபாடின்றிப் பார்க்க அனுமதிக்கும் நிலைமை வெகுஜனக் கலாசாரத்தின் ஜனநாயக விளைவாகிப் போயுள்ளது.

தொலைக்காட்சிச் சேவை நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. இவை வயது வேறுபாடு இன்றி யாவருக்குமே தெரிவு செய்து அவரவர் தேவைக்கேற்ப பயன்படுத்துவதுதான் சமுதாய விதி என்று ஜனநாயக ரீதியான நியாயத்தை அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றில் நடைபெற்று வரும் தலைமுறைச் சீரழிவுகளின் போது பேசி அமைதியடைய முடியுமா? என்பது கூடச் சிந்தித்துப் பார்க்க வேண்டியதொன்றாகும்.

வெகுசன கலாசாரத்தின் தோற்றம், அதன் ஆளுமை, தாக்கம் ஆகியனவற்றை அடிக்கடி நாடி பிடித்துப் பார்ப்பது அவசியமானது. நவீன வளர்ச்சி வேகத்தையும் அதன் போக்குகளையும், மதிப்பீடு செய்து, சமுதாயத்தின் போக்கிற்கு ஏற்ப அவற்றை வழிப்படுத்தும் பணியை தொடர்பு சாதன ஊடகங்களின் பின்னால் அவற்றை நிழல் போலத் தொடர்ந்து மேற்கொள்வது அவசியமானது.

கலாசாரம், சமூகம் பற்றிய ஆய்வுகள் மனித சமுதாயத் தோற்றக் காலம் முதலாக நடந்து வருபவை. கலாசாரத்தைப் பேணுவது வழிப் படுத்துவது சிக்கலானது. கலை, தொழில்துறை, ஜனநாயகம், வகுப்பு, இனம் போன்ற சொற்கள் எல்லாம் கலாசாரத்தோடு பின்னிப் பிணையும் நிலைமை தவிர்க்க முடியாது.



வெகுஜன தொடர்பு சாதன ஊடகங்களின் செயற்பாட்டை ஒரு தனியான தொழில்துறையாகக் கருதி லாப நட்ட மதிப்பீடுகளின் முனைப்புகளுடன் செயற்படுவது ஆபத்தானது. தொடர்பு சாதன ஊடகங்கள் வக்கிரமான போக்கினரின் உறைவிடமாக மாறக் கூடாது.

வெகுஜன தொடர்புத்துறை ஒரு தொழில்துறை என்ற இலக்குடன் நாசகார கலாசாரத்தை லாப நோக்குடன் சந்தைப்படுத்தும் இடமாக மாற விடுவது சமுதாயத்தை மனித நல இயல்புகளோடு எழுச்சிபெறச் செய்யும் வாய்ப்புகள் அனைத்தையுமே சீரழிப்பதாக அமையும்.

நிகழ்கால விளிம்பின் நிழல்களாகச் சமூகத்தை ஆக்கிரமிக்க முன்வரும் தொலைக்காட்சிச் சேவை தன்முனைப்புடன் செயற்படும் நிலை ஆபத்தானது. வெகுசனங்களின் மத்தியில் விஷ விதைகளை ஊன்றிக் கலாசாரத்தை சிதைக்கும் வழியில் தொடர்பு சாதன ஊடகங்கள் செயற்படக் கூடாது.

தொடர்பு சாதனங்களை வழி நடத்துபவர்களின் மத்தியில் அந்த சாதனத்தின் வேகம், பணி, வலு, ஆற்றல், எதிர்பார்ப்புகள் பற்றிய சிந்தனைகளை தொடர்பு சாதன சுதந்திரம் என்ற எல்லையுடன் நிறைவு படுத்துவது அவசியமானது. ☒

(←52)

இருக்கின்றன. அங்கு மக்களுக்கு பிரஜாவுரிமையில்லை, ஆனால் வாக்குரிமை இருக்கிறது. வாக்குரிமை என்ற ஒன்று இருப்பது டொமிசயில் என்னும் வதிவிடத்தைப் பொறுத்தே. அதுதான் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டம். அதன் பேரில் தான் திரு. டி. எஸ். சேனாநாயக்கா அன்று கூறினார் பிரஜாவுரிமை இல்லாவிட்டாலும் வாக்குரிமை இருக்கிறதென்று. எத்தனை முறை வேணுமென்றாலும் சொல்லுகிறேன் (குறுக்கீடு) பிரஜாவுரிமைச் சட்டம் சூழ்ச்சியாகவே நிறைவேற்றப்பட்டது. அதுவும் படிப்படியாகவே. பிரஜாவுரிமைச் சட்டத்திற்குப் பின்னர் பாராளுமன்றச் சட்டத் திருத்தம் கொண்டு வரவும், அடுத்து இமிகிரன்ட்ஸ் சட்டம் கொண்டு வரவும் திட்டமிட்டு திரு. டி. எஸ். சேனாநாயக்கா செயல்பட்டார். ஆனால் வாக்குகள் இவைகளுக்கு எதிராக அளிக்கப் பட்டிருந்தால் அல்லது ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவாக அளிக்கப்பட்டிருந்தால் பிரஜாவுரிமைச் சட்டமும் வந்திராது. இமிகிரன்ட்ஸ் சட்டமும் இல்லை. இவையனைத்தும் சந்தர்ப்பவாத ரீதியில்தான் இயற்றப்பட்டன.

(தொகுப்பு: எம். ஏ. நஸ்வி)

# கலக்கத்தை ஏற்படுத்தும் கணிப்பொறி

அம்சா ஆனந்தன்

காலவிரயத்தை தவிர்க்க பல்வேறு சிக்கலான கணக்குகளைக் கவனிக்க கண்டுபிடித்த மனித முயற்சியின் மகத்தான சாதனை என இந்த நூற்றாண்டின் 'இளைய பிரம்மா' எனக் கருதப்படும் கணிப்பொறிக்கு காலன் விதித்த கெடு 1999 டிசம்பர் 31 நள்ளிரவு 12 மணி. கணிப்பொறி கற்றவர்களின் மனதில் கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கும் வார்த்தை Y2K. 21ஆம் நூற்றாண்டு துவங்கும்முன் தீர்க்க வேண்டிய உலக நாடுகள் அனைத்தும் எதிர்கொள்ளும் பெரும் பிரச்சனை Y2K தான்.

Y2K என்றால் என்ன? கணிப்பொறி கட்டளையின்படிதான் (programme) இயங்குகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. கணிப்பொறி கட்டளைகளை பைனரிகளாக (10, 101, 1001) கொடுக்கப்பட்டு இயக்கப்படுகிறது. இதன்படி பார்த்தால் 31-12-1999 க்கு பின்பு 1-1-2000 என்று நமக்குத் தெரியும். ஆனால் கணிப்பொறியில் 1-1-00 என்றுதான் இருக்கும். கணிப்பொறியின் அர்த்தத்தில் 1900 என்று பொருள்படும். அதாவது 1999 க்குப் பின்பு கணிப்பொறியில் 1900 இலிருந்துதான் மீண்டும் கணக்கைத் தொடங்க இயலும். கணிப்பொறிக்கு வருடம் தெரியும். நூற்றாண்டு தெரியாது. இதனால் உலகம் முழுவதும் கணிப்பொறி மயமாக்கப்பட்ட அனைத்து முக்கிய விபரங்களும், தகவல்களும் பெரும் குழப்பங்களுக்கும் சிக்கல்களுக்கும் உள்ளாகும் என தொழில்நுட்ப வல்லுனர்கள் கருதுகின்றார்கள். 2000ஆம் ஆண்டின் முதல்நாளே எழக்கூடிய இந்த பிரச்சனையைத்தான் Y2K என்கிறார்கள். 'மில்லீனியன் பக்' (Millennium Bug) என்றும் இதனை கூறுகின்றார்கள்.

Y2K ஆல் ஏற்படும் பாதிப்புகள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு போன்ற மிக வளர்ச்சி பெற்ற நாடுகளில்தான் அதிகமாக இருக்கும். சர்வதேச அளவில் இயங்கும் பன்னாட்டு நிறுவனங்கள், பெரும் தொழில் நிறுவனங்கள், வங்கிகள், மருத்துவ




மனைகள், நிதி நிறுவனங்கள், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகள் Y2K பிரச்சனையால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும். எந்த அளவுக்கு ஒரு நாடு கணிப்பொறி தொழில்நுட்பத்தை சார்ந்து இருக்கின்றதோ அந்த அளவிற்குப் பாதிப்புகள் அமையும். எப்படி தவிர்த்திருக்கலாம்? கணிப்பொறியில் ஏராளமான தகவல்களைச் சேர்த்து வைக்கும் நுட்பத்தை அறிமுகப்படுத்தி, செயல்படுத்திய 1960ஆம் ஆண்டுகளில் இத்துறை வல்லுனர்கள், ஆண்டை நான்கு இலக்கங்களிலேயே குறிப்பிட்டிருந்தால் (1998-98) இந்த மாபெரும் தவறைத் தடுத்திருக்கலாம். 'ஹோலரித் கார்ட்' (Hollerith Card) என்றழைக்கப்படும் செவ்வக வடிவ தட்டில் அப்போதைய தொழில்நுட்பம் 80 எழுத்துக்களை அல்லது எண்களை சேர்க்க இயலும். அதனால் 15-8-1980 என்பதை 15-8-80 என்று குறிப்பிட்டதால் இந்தப் பிரச்சனை மாபெரும் சவாலாக எழுந்துள்ளது.

எப்படி சரி செய்யப் போகிறார்கள்? அமெரிக்க அரசு துறைகள் அனைத்தும் கணிப்பொறி மயமாக்கப்பட்டவை. இந்தப் பாதிப்பிலிருந்து பாதுகாக்க அமெரிக்க அரசு சுமார் 400 கோடி டாலர் வரை செலவிடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. Y2K பிரச்சனையால் எழும் பாதிப்புகளில் இருந்து மீள்வதற்கு உலக நாடுகள் அனைத்தும் குறைந்த பட்சம் 600 பில்லியன் டாலர் செலவிடும் என்று அமெரிக்காவின் 'கார்ட்னர் குரூப்' நிறுவனம் மதிப்பிட்டிருக்கிறது. பிரிட்டனின் தேசிய உற்பத்தியில் 27 சதவிகித பங்கை வகிக்கும் மாபெரும் நிறுவனங்கள் 31-12-1999 க்குள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முழுமையாய் செயல்படுத்த முடியுமா என்பதே பெரும் கேள்விக்குறியாக இருக்கிறது.


ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகள் 2000 ஆண்டில் இருந்துதான் 'பொதுவான செலாவணி' முறைக்கு மாற முடிவெடுத்துள்ளன. இந்த சூழ்நிலையில் Y2K பிரச்சனை ஏற்படுவது அந்நாடுகளுக்கு கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. Y2K பிரச்சனையால் கணிப்பொறி சம்பந்தப்பட்ட அனைவரும் வெகுவான கலக்கத்தில் உள்ளனர்.

2000 ஆண்டு பிறக்க இன்னும் 680 நாட்கள் இருக்கின்றன. அதற்குள் இப்பிரச்சனை தீர்க்கப்படுமா? இல்லை இல்லை தீர்க்கப்படத்தான் வேண்டும். இருக்கின்ற சொற்ப நாட்களில் எத்தனையோ புதுப்புது தொழில்நுட்ப அதிசயங்கள் நிகழலாம். ஒவ்வொரு நிமிடமும் புதிய கண்டுபிடிப்புகள் நிகழும் யுகம் இது. ஆகவே மிக்க நம்பிக்கையுடன் காத்திருப்போம்! ⊠




அமெரிக்காவின் வறுமையைத்
தனது புகைப்படங்களின் மூலம் சித்தரிக்கிறார்
டென்மார்க் எழுத்தாளர்


**ஜாக்கோப் மடாக் ஹோல்ட்ர்**
















# மாநில அரசாங்கம் ஒன்று எப்போது கலைக்கப்படலாம்?

## இந்திய அரசியலமைப்பின் உறுப்புரை 356 பற்றிய ஒரு கண்ணோட்டம்


வி. ரி. தமிழ்மாறன்
முதுநிலை விரிவுரையாளர், சட்டபீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்


கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற இந்தியப் பொதுத் தேர்தலில் நிலையான ஆட்சிக் கோஷத்தை முன்னிறுத்திப் பாரதீய ஜனதாக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் போட்டியிட்ட போதிலும் அவற்றால் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. ஒரு சில 'சரிக்கட்டல்களுடன்' அரசாங்கம் நகர்கின்றது அங்கே. இக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுள் 5 கட்சிகள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவை. அவையாவன அ.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி, மக்கள் தி.மு.க., ராஜீவ் காந்தி காங்கிரஸ், ஜனதாக் கட்சி என்பனவாகும். இவை 5க்கும் தமிழ் நாட்டில் மொத்தம் 30 ஆசனங்கள் கிடைத்தன. இவற்றில் சுப்பிரமணிய சுவாமி ஏற்கனவே கழன்று விட்டார். ஏனையோரைத் தன் பிடிக்குள் வைத்திருக்கும் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா தமிழ்நாடு அரசாங்கம் கலைக்கப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை மத்திய அரசுக்குத் தொடர்ச்சியாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். தமிழக பத்திரிகைகள் அவரை 'மேடம் 356' என்றே அழைக்கின்றன.

பா. ஜ. கட்சியின் பலம், கொள்கைகள், தமிழ்நாட்டில் ஜெயித்த கட்சிகளின் கொள்கைகள், வரலாறுகள் என்பவற்றை ஆராயவோ எடைபோடவோ இது பொருத்தமான இடமல்ல. இங்கே சட்டக் கண்ணோக்கில் மட்டும் ஜெயலலிதாவின் கோரிக்கை பற்றி ஆராய முற்படுகின்றேன். தமிழ்நாடு அரசாங்கம் இன்று கலைக்கப்படா விட்டாலும் வாஜ்பாய் தன் கதிரையைக் காப்பாற்ற வேண்டுமானால் சில வேளைகளில் கலைப்பு முடிவெடுக்கலாம். ஏனெனில் 'ஆட்சி' என்பது வாராது வந்த மாமணி பா. ஜ. கட்சிக்கு அதற்காக என்ன விலை கொடுக்கவும் கட்சியினர் தயங்கப் போவதில்லை என்றே நினைக்கின்றேன்.



அங்ஙனம் கலைப்பதானால் மத்திய அரசாங்கம் பயன்படுத்த வேண்டிய அரசியலமைப்பு உறுப்புரையே இந்த 356 என்பதாகும். இந்த உறுப்புரை மாநிலங்களில் அவசரகால நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறி மாநில சட்டசபையைக் கலைத்து விட்டு ஆட்சியை ஆளுநரிடம் ஒப்படைப்பதாக இருக்கும். உறுப்புரை 356 என்ன சொல்கிறது என்பதைப் பூரணமாகப் பார்ப்போம்:

356. (1) மாநிலமொன்றின் அரசாங்கமொன்று அரசியலமைப்புக்கு இணங்கக் கொண்டு நடாத்தப்பட முடியாததான சூழ்நிலை ஒன்று உருவாகியுள்ளதென, அந்த மாநில ஆளுநரிடமிருந்து பெறும் அறிக்கையொன்றின் மேல் அல்லது வேறுவிதமாக, ஜனாதிபதியானவர் திருப்திப்படுமிடத்து அவர் பிரகடனமொன்றை விடுக்கலாம். அப்பிரகடனத்தின் மூலம்:

(a) மாநில அரசாங்கத்தின் எல்லா அல்லது ஏதேனும் பணிகளை; ஆளுநர், ஏதேனும் அமைப்பு அல்லது அதிகார சபையிடம் உரித்தளிக்கப்பட்டுள்ள அல்லது பிரயோகிக்கப்படக்கூடிய எல்லா அல்லது ஏதேனும் தத்துவங்களை ஜனாதிபதி தானே பொறுப்பேற்றுக் கொள்ளலாம்.

(b) மாநில சட்ட சபையின் தத்துவங்கள் பாராளுமன்றத்தினால் அல்லது அதன் கீழ் பிரயோகிக்கப்பட வேண்டும் எனப் பிரகடனப்படுத்தலாம்.

(c) பிரகடனத்தின் நோக்கங்களுக்கு வலுக்கொடுப்பதற்காக அவசியம் அல்லது விரும்பத்தக்கது என ஜனாதிபதி கருதுகின்றதான அத்துணை இடைவினைவானதும் காரண விளைவானதுமான ஏற்பாடுகளை ஆக்கலாம். அம்மாநிலம் தொடர்பில், அரசியலமைப்பின் ஏற்பாடுகள் இடைநிறுத்தி வைக்கப்படுவதையும் இது உள்ளடக்கும்.

எனினும் மாநிலத்தின் உயர் நீதிமன்றத்துக்கென உரித்தளிக்கப்பட்டுள்ள எத்தத்துவங்களையும் ஜனாதிபதி தனக்காக்கிக் கொள்ள முடியாது. அத்துடன் அவர் உயர் நீதிமன்றம் தொடர்பில் அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாடுகளின் செயற்பாட்டை இடைநிறுத்தி வைக்கவும் முடியாது.

(2) அத்தகைய பிரமாணம் எதுவும் பின்னைய பிரமாணம் ஒன்றால் திரும்பப் பெறப்படலாம் அல்லது மாற்றியமைக்கப் படலாம்.

(3) இந்த உறுப்புரையின் கீழ் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு பிரமாணமும் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு சபை முன்பாகவும் வைக்கப்பட வேண்டும் என்பதுடன் அது முன்னைய பிரமாணம் ஒன்றைத் திரும்பப் பெறும் பிரமாணமொன்றாக இருந்தாலன்றி இரண்டு மாதங்கள்

கழிவதன் மேல் செயற்பாடொழிவதாலும் வேண்டும். ஆனால் அக்காலக் கழிவுக்கு முன்பாக இரண்டு சபைகளினதும் தீர்மானங்களின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆயினும், மக்களவை கலைக்கப்படுகையில் அத்தகையதொரு பிரமாணம் பிறப்பிக்கப்படுமாயின் அல்லது இப்பிரிவில் கூறப்பட்டுள்ள அந்த இரண்டு மாதங்களுக்குள் மக்களவை கலைக்கப்படுமாயின், அத்துடன் இப்பிரமாணத்தை அங்கீகரிக்கும் தீர்மானம் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டிருந்து ஆனால் மக்களவையினால் இந்த இரண்டு மாதங்களில் நிறைவேற்றப் பட்டிருக்காவிடின்; மக்களவை புதிதாகக் கூட்டப்பட்ட முதல் அமர்வின் 30ஆம் நாளின் முடிவுடன் அப்பிரமாணமும் செயற்பாட்டிலிருந்து ஒழியும். ஆனால் அந்த 30 நாட்களுக்குள் மக்களவை தீர்மானம் ஒன்றின் மூலம் அப்பிரமாணத்தை அங்கீகரிப்பின் அது தொடர்ந்தும் செயற்படும்.

(4) இங்ஙனம் அங்கீகரிக்கப்படும் பிரமாணமொன்று, முன்கூட்டியே திரும்பப் பெற்றிருக்கப்படாவிடின், அது பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களின் முடிவில் தானாகவே வழக்கொழியும்.

இருப்பினும், இரு சபைகளினாலும் அங்கீகரிக்கப்படுவதன்மேல் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்குமாக இது நீடிக்கப்படலாம். எவ்வாறாயினும் இந்நீடிப்பு மொத்தமாக மூன்று வருடங்களுக்கு மேலாக வலுவிலிருக்கக் கூடாது.

மேலும் அத்துடன், அத்தகையதொரு ஆறுமாத காலப் பகுதிக்குள் மக்களவை கலைக்கப்படுமாயின், அவ்வேளையில் இப்பிரமாணத்தை நீடிக்கும் தீர்மானம் மாநிலங்களவையினால் நிறைவேற்றப் பட்டு, மக்களவையினால் நிறைவேற்றப் பட்டிருக்காத சூழ்நிலை இருக்குமாயின், மக்களவை திரும்பக்கூடிய முதல் அமர்விலிருந்து 30ஆம் நாளின் முடிவில் அப்பிரமாணம் செயற்பாடொழிந்ததாகும். ஆனால் அந்த 30 நாட்களுக்குள் வேண்டுமானால் மக்களவை அப்பிரமாணத்தை நீடிக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற முடியும்.

அத்துடன், 1987 மே 11ஆந் தேதியன்று பஞ்சாப் மாநிலம் தொடர்பில் பிறப்பிக்கப்பட்ட பிரமாணத்தைப் பொறுத்தவரையில் மேலே கூறப்பட்ட 'மூன்று வருடங்கள்' என்பது "ஐந்து வருடங்கள்" என்பதாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

(5) மேலே (4)வது வாசகத்தில் கூறப்பட்டது எது எப்படியிருப்பினும், (3)வது வாசகத்தின் கீழ் நீடிப்பை



பிரமாணம் பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்துக்கு அப்பாலும் வழங்குவதாயின் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் பின்வரும் நிலைமைகள் உள்ளன என்பதில் திருப்திப்பட வேண்டும்:

(a) இந்தியா முழுவதிலும் அல்லது ஏதேனும் மாநிலம் முழுவதிலும் அல்லது ஒரு பகுதியில் அவசரகால நிலைப் பிரமாணம் செயற்பாட்டிலிருக்க வேண்டும்; அத்துடன்

(b) சம்பந்தப்பட்ட அந்த மாநிலத்தில் சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தலை நடாத்துவதிலுள்ள சிரமங்கள் காரணமாக, அப்பிரமாணம் தொடர்ந்தும் இருப்பது அவசியமென தேர்தல் ஆணையகம் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.

இருப்பினும் இந்த வாசகத்திலுள்ள எதுவும் (5) பஞ்சாப் மாநிலம் தொடர்பிலான 1987 மே 11ஆந் தேதிய பிரமாணத்துக்குச் செல்லுபடியாகாது.

அரசியலமைப்பின் 356வது உறுப்புரையை அது இன்றுள்ள நிலையில் முழுவதுமாக மேலே தந்துள்ளேன். இந்த உறுப்புரையில் 5 பிரதான வாசகங்கள் உள்ளதைக் காணலாம். அத்துடன் ஒவ்வொரு வாசகத்துக்கும் பல காப்புவாசகங்களும் (proviso) இருப்பதையும் காண முடிகிறது. இந்த உறுப்புரை பயன்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த வாசகங்கள் அல்லது காப்பு வாசகங்களுள் ஒன்று மிக நுணுக்கமாகப் பொருள்கோடல் செய்யப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதே வழக்கமாகிறது. இந்திய அரசியலமைப்பு ஆக்கப்பட்டபோது (ஜனவரி 1950) இந்த உறுப்புரை இதே வடிவில் இருந்திருக்கவில்லை. காலத்துக்குக் காலம் கொண்டு வரப்பட்ட திருத்தங்களின் மூலமாகவே உறுப்புரையின் இன்றுள்ள நிலை பெறப்பட்டுள்ளது.

இந்த வகையில் முக்கிய நான்கு திருத்தங்கள் எமது கவனத்துக்கு உரியன. அரசியலமைப்புக்கான 44வது திருத்தம் 1978இல் கொண்டுவரப்பட்டது. இதன்படி 'ஒவ்வொரு ஒரு வருடத்துக்குமாக நீடிக்கலாம்' என்ற நிலை மாற்றப்பட்டு 'ஆறுமாதங்களுக்குமாக' என ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கையில் பாராளுமன்றம் அவசரகால நிலையை ஒவ்வொரு மாதத்துக்குமாக நீடிக்கின்றது. இந்தியாவில் இது ஒவ்வொரு 'ஆறுமாதக் காலத்துக்குமாக' என்றிருக்கும். மேலும் இத்திருத்தமே புதிதான 5வது வாசகத்தையும் உறுப்புரை 356க்குச்

சேர்த்து வைத்தது. இந்த வாசகம் இல்லாதுபோனால் மத்திய அரசு போதிய காரணங்களின்றியே மூன்று வருடங்களுக்கு அவசரகால நிலையை நீடித்துக் கொண்டுபோக முடியும். ஆனால் 5வது வாசகத்தின்படி இது இப்போது சாத்தியமில்லை. பிரமாணம் பிறப்பிக்கப்பட்டதும் இரு மாதங்களுக்குள் இரு சபைகளாலும் அங்கீகரிக்கப்படுகின்றதல்லவா. அந்த அங்கீகாரம் முதல் ஆறு மாதங்களுக்கு மட்டுமே. எனவே இன்னொரு ஆறு மாதங்களுக்கு நீடிப்பை வழங்க முடியும். அதன் பின்னர் இரண்டாவது தடவை நீடிப்பு வழங்குவதாயின் 5வது வாசகத்தின் கீழ் செயற்பட வேண்டும். இதுபற்றி உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுப்பதற்கு இவ்வாசகம் வழிசெய்கிறது.

48வது திருத்தம் 1984இல் கொண்டுவரப்பட்டது. இது 5வது வாசகத்துக்கு ஒரு காப்பு வாசகத்தைச் சேர்த்தது. இது பஞ்சாப் மாநிலந் தொடர்பானதாகும். 59வது, 64வது திருத்தங்களும் இவ்விதமே பஞ்சாப் மாநிலஞ் சம்பந்தமாகவே கொண்டுவரப்பட்டன.

356வது உறுப்புரையின் கீழ் ஜனாதிபதி ஆட்சி 100க்கு மேற்பட்ட தடவைகளில் (1950–98) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் கூட்டாட்சித் தத்துவத்துக்கான பெருஞ் சவாலாக இது அமைந்துள்ளது. இப்பிரிவின் உபயோகம், துஷ்பிரயோகம் என்பவற்றை நடைபெற்றிருக்கின்ற சம்பவங்களை வைத்தே கண்டுபிடித்து விடலாம். ஆயினும் சர்ச்சைக்குரியவற்றை மட்டுமே இப்போது கவனிப்போம்.

356 (1) இன் கீழ் அவசரகால நிலைப் பிரகடனஞ் செய்யப்பட்டதும் மாநில சட்ட சபையின் தத்துவங்கள் பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்பட வேண்டியதாகும். பாராளுமன்றம் தனது இந்தத் தத்துவங்களை ஜனாதிபதியிடம் வழங்குவதன் மூலம் ஜனாதிபதி மாநிலங்களுக்குச் சட்டமாக்க முடியும். ஜனாதிபதி தான் விரும்பும் வேறு எந்த அமைப்புக்கேனும் இத்தகைய தத்துவங்களைக் கையளிப்பதற்கும் அவருக்குப் பாராளுமன்றம் அதிகாரமளிக்கலாம். [357(1)(a)].

## 356இன் பிரயோகமும் முன்மாதிரிகளும்

இலங்கையைப் போலன்றி இந்தியாவில் நீதிமுறை மீளாய்வுக்கு (judicial review) அரசியல் அமைப்பில் ஏற்பாடுள்ளது. எனவே சட்டசபைக் கலைப்பு, ஜனாதிபதி ஆட்சிப் பிரகடனம் என்று எதுவுமே இந்திய மாநில உயர்நீதிமன்றம், மத்திய உச்ச நீதிமன்றம் என்பவற்றின் மீளாய்வு நியாயாதிக்கத்துக் உட்பட்டவையேயாகும். எனவே அண்மைக்கால வழக்குகளின் அடிப்படையில் பார்க்கையில் ஜனாதிபதி மனம் போன போக்கில் இத்தகைய கலைப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது. இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது என்பதைப் பார்ப்போம்.

356இன் கீழான முதலாவது கலைப்பு 1951இல் பஞ்சாப்புடன் ஆரம்பமானது. ஆனால் சர்ச்சைக்குரிய முதலாவது கலைப்பு 1959இல் கேரளச் சட்டசபைக் கலைப்பாக இருந்தது. மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்ற காரணத்தால் கம்யூனிஸ்ட் அமைச்சரவை கலைக்கப்பட்டது. உண்மையில் அதற்குப் போதுமான அளவு பெரும்பான்மை சட்டப் பேரவையில் இருந்தது. அரசாங்கத்துக்கு எதிராகப் பெருமளவு கிளர்ச்சி இருந்ததுடன் சட்டம், ஒழுங்குப் பிரச்சனையும் கேள்விக்குரியதாயிருந்தது. ஆனாலும் மத்திய அரசின் நடவடிக்கையைப் பலரும் கட்சி சார்பின்றிக் கண்டிக்கவே செய்தனர்.

பல சந்தர்ப்பங்களில், ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்படுவதற்கு காரணமாயிருப்பது கட்சித் தாவலேயாகும். தேவையான பெரும்பான்மையை எவரும் பெறமுடியாத நிலை தோன்றியுள்ளதாக வைத்தே இங்ஙனம் கலைப்புகள் நடாத்தப்பட்டுள்ளன. 1976இல் ஒரிசா, உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கட்சிப் பிரச்சனைகள் தீர்க்கப்படுவதற்குக் கலைப்புப் பயன்படுத்தப்பட்டது. ஒரிசாவின் அப்போதைய முதலமைச்சர் திருமதி நந்தினி சத்பதி காங்கிரஸ் தலைமைப் பீடத்தின் கட்டளைக்கு அடிபணிய மறுத்தமைக்காக சட்டப் பேரவை கலைக்கப்பட்டது.

1977 இவ்விடயத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்துவிட்டது. 356வது உறுப்புரை மிக் விசித்திரமான முறையில் பாவிக்கப்பட்டதும் இந்த ஆண்டிலேதான். 9 மாநிலங்களது சட்டப் பேரவைகள் இதன் மூலம் கலைக்கப்பட்டன. இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், பீகார், ஹிமாசலப் பிரதேசம், ஒரிசா, மேற்கு வங்காளம், ஹரியானா போன்ற ஒன்பது மாநிலப் பேரவைகளுமே இங்ஙனம் கலைக்கப்பட்டவை. காரணம் என்ன? 1977 மார்ச்சில் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியடைந்து ஜனதாக் கட்சி பதவிக்கு வந்தது. சில மாநிலங்களில் காங்கிரஸுக்கு ஓர் ஆசனம் கூடக் கிடைக்கவில்லை. எனவே காங்கிரஸ் வசமுள்ள சட்டப்

பேரவைகள் மக்களின் விருப்பைப் பிரதிபலிப்பனவாக இனியும் கொள்ளப்பட முடியாது என்று கருதியே இந்த ஒன்பதும் கலைக்கப்பட்டன. இது தொடர்பில் உள்துறை அமைச்சர் சரண்சிங் சம்பந்தப்பட்ட முதலமைச்சர் களுக்குக் கடிதம் எழுதினார்.

இராஜஸ்தான் சட்டப் பேரவை இந்தக் கடிதத்தை எதிர்த்து நீதிமன்றம் போனது. வழக்கு மத்திய மாநில உறவு தொடர்பான ஒரு சட்டப் பிரச்சனையுள்ளது என்றவாறாக அரசியலமைப்பின் உறுப்புரை 131இன் கீழ் தாக்கலானது. (AIR 1977 SC 1361). 356இன் கீழ் மட்டுமே பேரவையைக் கலைக்கலாம். ஆனால் உள்துறை அமைச்சரின் கடிதம் உறுப்புரை 356இன் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்டது என இராஜஸ்தான் வாதிட்டது. அத்துடன் பாராளு மன்றத்தின் இரு சபைகளதும் சம்மதம் பெறப்பட்டதாக இல்லையென்றும் இம்மாநிலம் சுட்டிக்காட்டியது. உள்துறை அமைச்சரின் செயற்பாட்டுக்கு நிரந்தர தடை விதித்து உத்தரவிடுமாறு உச்ச நீதிமன்றில் வாதிடப்பட்டது.

உச்ச நீதிமன்றின் ஏழு நீதியரசர்கள் கொண்ட அமர்வு மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டது. ஜனாதிபதியின் 'திருப்தி' என்ற விடயம் கேள்விக்குட்படுத்தப்பட முடியாதது. எனவே அவர் திருப்திப்பட்டு முடிவெடுத்து கலைப்பு உத்தரவைப் பிறப்பித்தால் அதனை நீதிமன்றம் எதுவுஞ் செய்ய முடியாது என்று தீர்ப்பில் கூறப்பட்டது. இதில் உட்கிடையாகப் பெறப்படுவது யாதெனில், ஜனாதிபதி எந்தவிதத்திலும் விரும்பினால் திருப்திப்பட முடியும். ஆளுனரின் அறிக்கையில் தங்கித்தான் திருப்திப்பட வேண்டும் என்பதில்லை.

ஆனாலும், அத்திருப்தியானது தீய நோக்குடன் கூடியதாயின் *(mala fide)* அல்லது முற்றிலுஞ் சம்பந்தப்படாத புறக்காரணங்களின் அடிப்படையில் கொள்ளப்பட்டதாயின், முற்றிலும் தொடர்பில்லாத காரணமாக இருக்குமாயின் நீதிமன்றம் அதனை ஆராயும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் என்று இதே வழக்கில் நீதியரசர்கள் பகவதியும் குப்தாவும் குறிப்பிட்டிருந்தனர்.

பிரதம நீதியரசர் Beg கூறியதாவது: "இது விடயத்தில் ஆரோக்கியமானதொரு (அரசியலமைப்பு) மரபை உருவாக்கிப் பேணிவரல் வேண்டும். அதன்படி 356 வேண்டுமென்றோ விஷமத்தனமாகவோ எதேச்சாதிகாரமான முறையிலோ பாவிக்கப்படாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும். நிறைவேற்றுத்துறையின் இத்தத்துவத்தை ஒழுங்குபடுத்தும்



அத்தகைய மரபொன்றை ஆக்கிக் கொடுப்பது நீதிமன்றத்துக்கு அழகல்ல. இது முற்றிலுமே அவர்களுக்கான விடயம்".

அடுத்த சிக்கல் 1980இல் மீண்டும் ஒன்பது சட்டப் பேரவைகள் கலைக்கப்பட்டபோது எழுந்தது. இம்முறை காங்கிரஸ் அரசு தனது பங்குக்கு இந்தக் கைக்கரியத்தைச் செய்தது. இம்முறை தமிழ்நாடு சட்டப் பேரவையும் இதிலடக்கம். மக்களின் விருப்பைப் பிரதிபலிக்கவில்லை என்றே இங்கும் காரணம் சொல்லப்பட்டது. இத்தேர்தலில் காங்கிரஸுக்கு 351 ஆசனங்களும் ஆளுங்கட்சியாக இருந்த ஜனதாவுக்கு 31 ஆசனங்களும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. எனவே ஜனதாவுக்கு ஆதரவான மாநிலப் பேரவைகள் ஒன்பதும் கலைக்கப்பட்டன. ஆனாலும் 1977இல் இருந்த நிகழ்வுகளின் படியான நியாயம் 1980 கலைப்பில் இருக்கவில்லை எனலாம். ஏனெனில் முன்னைய சந்தர்ப்பத்தில் சில மாநிலங்களில் காங்கிரஸ் ஓர் ஆசனம் கூடப் பெற்றிருக்கவில்லை. ஆனால் பின்னைய சந்தர்ப்பத்தில் அப்படியில்லை. கலைக்கப்பட்ட மாநிலங்களில் சில ஜனதாக் கட்சிக்குக் கணிசமான ஆதரவைத் தந்திருந்தன.

கூட்டாட்சித் தத்துவத்துக்கு முரணான விதத்தில் மக்களின் விருப்பு என்பதை மாநில-மத்திய அரசாங்கங்களைப் பொறுத்தளவில் ஒரே அளவுகோலால் கொள்ள முயலுதல் என்பது மிகப் பிற்போக்கான அணுகுமுறையாகும். மாநில அரசு மத்திய அரசு என்ற வித்தியாசம் இன்னும் வளர்க்கப்பட வேண்டிய தேவையிருக்கையில் அந்த வித்தியாசத்தை மழுங்கடிக்கும் விதத்தில் கலைப்புச் செய்து அதிகார ஆணை பற்றிப் பேசுவது கேலியான விடயமே.

இதே கொள்கையை அமெரிக்காவும் பின்பற்றினால் ஜனாதிபதியும் காங்கிரஸும் எப்போதும் ஒரே கட்சியினராகவே இருக்க முடியும். அதுமட்டுமன்றி மாநிலங்களது சட்டவாக்க சபையும் ஜனாதிபதியின் கட்சியைச் சேர்ந்தவர்களாலேயே அலங்கரிக்கப்படும் நிலை இருக்கும். இதை அமெரிக்க மக்கள் எண்ணியும் பார்க்க மாட்டார்கள். ஏனெனில் வலுவேறாக்கம் (separation of powers), கூட்டாட்சித் தத்துவம் (federal principle) போன்றவற்றைக் குழிதோண்டிப் புதைக்கும் விதத்தினதாகச் செயற்பட வேண்டியிருக்கும். ஆனால் இந்தியாவில் மாநிலக் கட்சிகள் – அகில இந்தியக் கட்சிகளுக்குப் பக்கப்பாட்டுப் பாடுபவையாக இருக்கும் மட்டும் இந்தக் கோரிக்கையும் இருக்கவே செய்யும். இது கூட்டாட்சிக்கு எதிர்மறையான போக்கு என்பதில் சந்தேகமேயில்லை.

**(தொடரும்)**


# "சூழ்நிலைகளே எங்கள் பாதையினைத் தீர்மானிக்கும்"

## "சரியான தலைமை வழிகாட்டல் தமிழ்மக்களுக்கு இருப்பின் இடைஞ்சலாக இருக்க மாட்டேன்"

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (E.P.D.P.) செயலாளர் நாயகம்

டக்ளஸ் தேவானந்தா பா.உ. உடனான

**நேருக்கு நேர் சந்திப்பு!**



**? இலங்கையில் இன்று தமிழ்ப் பேசும் மக்களுக்கு அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் உள்ள பிரச்சனைகள் எவை என்று கருதுகின்றீர்கள்?**

✍ அடக்குமுறைக்கும் பாரபட்சத்துக்கும் எதிராக ஆரம்பித்த போராட்டம் இன்று தமிழ்ப்பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கான போராட்டமாக மாறிவிட்டது. மொழி, குடியேற்றம், தரப்படுத்தல், பாதுகாப்புப் பிரச்சனைகளாக இருந்தவை இன்று அபிலாசைகளாகப் பரிணாமம் பெற்றுவிட்டன. எனவே இதற்கான தீர்வையே இன்று யோசிக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஆரம்பத்திலிருந்த பிரச்சனைகளுக்கு இன்று பெயரளவிலேனுஞ் சில சட்ட ஏற்பாடுகள் இருக்கவே செய்கின்றன. ஆனால் நாம் இப்போது நெடுந்தூரம் வந்துவிட்டோம்.

அரசியல் போராட்டத்தின் உச்சக் கட்டமே ஆயுதப் போராட்டமாகும். பரிணாம வளர்ச்சியுடன் அதுவுஞ் சம்பந்தப்பட்டு விட்டது. மொழி வளர்ச்சி, இனப் பாதுகாப்பு, சுயபாதுகாப்பு ஏற்பாடுகள், வாழ்விடங்களின் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றுக்கான சுதந்திரமான செயற்பாட்டைத் தரவல்ல அதிகாரங்களே அபிலாசைகளாக உள்ளன. இதற்கு அதிகாரப் பகிர்வு (power sharing) அவசியமாகும். இது மத்தியிலான அதிகாரப் பகிர்வாகவும் இருக்க வேண்டும். இவை யாவற்றையும் சேர்த்தே அபிலாசை என்கின்றேன்.

இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின் கீழ் கிடைத்தது அதிகாரப் பரவலாக்கம் மட்டுமே. ஏனைய மாகாண மக்களுக்கு இது பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் வடக்கு–கிழக்கு மாகாண மக்களுக்கு



அதிகாரப் பரவலாக்கம் மட்டும் போதாது. எனவேதான் விசேட ஏற்பாடுகள் தேவையாகின்றன.

**? இவற்றை வென்றெடுப்பதற்கு ஆயுதப் போராட்டத்தை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?**

✍ அரசியல் இலக்கொன்றை அடைவதற்கு இரு வழிகள் உள்ளன. ஒன்று ஜனநாயக வழிப் போராட்டம். மற்றையது ஆயுதப் போராட்டம். இன்று அரசியல் இலக்கை அடைவதற்காக– ஜனநாயக வழிப் பாதைக்கு நாம் வந்துள்ளோம். சூழ்நிலைகளே எங்கள் பாதைகளையும் தீர்மானிக்கின்றன. கடந்த காலச் சூழ்நிலைகள் எம்மை ஆயுதமேந்த வைத்தன. போராட்டங்களினால் ஏற்பட்ட அழிவுகள், இழப்புகள், துன்பங்கள தவிர்க்க முடியாதவைதான். அதேவேளை எமது போராட்டம் விழலுக்கு இறைத்த நீராகவும் இருக்க முடியாது. இரண்டையும் சமன் செய்து பார்த்தே சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டியுள்ளது.

**? இவ்விதத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டத்தை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

✍ இலங்கை–இந்திய ஒப்பந்தத்துக்குப் பின்னர் எந்த ஆயுதப் போராட்டத்துக்கும் நியாயமிருப்பதாகக் கூறமுடியாது என்கிறேன். அது ஒரு பொன்னான வாய்ப்பு. அதை நாங்கள் சரியாகப் பயன்படுத்தியிருந்தால் கடந்த 10 வருடங்களில் சுயநிர்ணய உரிமைக்கான அடித்தளம் வலுவாக இடப்பட்டிருக்கும்.

இந்திய அரசுஞ்சரி, இலங்கை அரசுஞ்சரி, தத்தமது சொந்த நலன் கருதிய நிலைப்பாட்டிலிருந்தே பிரச்சனைகளை அணுகின. இனியும் அணுகும். இதற்கு யாரும் விதிவிலக்கல்ல. அந்த வகையில், நாங்கள் சரியான முறையில் எமது பிரச்சனைகளை முன்னெடுத்திருக்க வேண்டும். ஆயின், எமக்குக் கிடைத்த வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்தியிருந்தால் தற்போதைய அவலநிலை ஏற்பட்டிருக்குமா என்பதை எண்ணிப் பாருங்கள்.

தமிழ்ப்பேசும் மக்களின் இன்றைய நிலை முள்ளின் மேல் விழுந்த சேலையின் நிலைதான். நாமேதான் கவனமாக நடந்து கொண்டு சிக்கலிலிருந்து மீளவேண்டும். உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். பிரபாகரன் சரியான அரசியல் பாதையில் சென்றிருந்தால் யாழ் மீதான படையெடுப்பைத் தடுத்திருக்கலாம். யாழ் கைப்பற்றப்பட்டதால் ஏற்பட்ட அனர்த்தங்களும் மன உளைச்சல்களும் தவிர்க்கப்பட்டிருக்கும்.

1995இல் புலிகளுக்கும் இந்த அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின்போது இரு பிரதான

கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. பூநகரி இராணுவ முகாமை அகற்றுதல், கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதியளித்தல் என்ற இரண்டுமே அப்போது வலியுறுத்தப்பட்டன. ஆனால் பின்னர் என்ன நடந்தது? யாழ்ப்பாணம் முழுவதுமே பூநகரி இராணுவ முகாம் போல ஆக்கப்பட்டு விட்டது.

போராட்டம் என்பதே எதையாவது பெறுவதற்காகவே நடாத்தப்படுகிறது. அதில் இழப்புகள் ஏற்படலாம். ஆனாலும் இன்றைய ஆயுதப் போராட்டமானது மேலும் மேலும் அழிவுகளையே கூட்டுகின்றதால் இருப்பதையும் இழக்க வைக்கும் அபாயமே எம்மைச் சூழ்ந்துள்ளது.

**? ஆயுதப் போராட்டத்தில் இறங்கிய தமிழ்க் குழுக்களிடையே ஒருமித்த தலைமை யொன்றை ஏற்படுத்த முடியாமல் போனதற்குக் காரணமென்ன?**

✍ இது மிகமிகத் துரதிர்ஸ்ட வசமானது. ஒற்றுமை ஏற்படாமல் போனதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன. சக இயக்கங்களது ஜனநாயக உரிமைகள் மதிக்கப்படாமை, சிறிய அளவிலான கொள்கை வேறுபாடுகள் என்ற இரண்டுமே இக் காரணங்களாகும். இத்தவறுக்கான பொறுப்பை எல்லா இயக்கங்களும் ஏற்றேயாக வேண்டும். இருந்தாலும் சகோதரப் படுகொலைகள் நிறுத்தப்பட்டிருந்தால் ஏனைய வேறுபாடுகளை மேவி ஒற்றுமை ஏற்பட வாய்ப்பிருந்திருக்கும். ஏனைய கட்சிகளின் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்பட்டால் மற்றைய பிரச்சனைகள் தீர்க்கப்படக்கூடியனவே. இதில் கூடிய கவனஞ் செலுத்த வேண்டியவர்களே விடுதலைப் புலிகளே.

**? தீர்வுப் பொதியை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?**

✍ இலங்கையில் இனப்பிரச்சனை என்று ஒன்றுள்ளது. அதற்கு அரசியல் தீர்வு அவசியம். யுத்தம் ஒருபோதும் வழியல்ல. தீர்வுப் பொதியானது மேலே நான் குறிப்பிட்ட அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக அமைந்தால்தான் நாம் ஆதரிப்போம். ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.ஃஎவ்., ஈரோஸ் ஆகிய ஐந்து கட்சிகளும் தற்போதைய பொதிக்கு தமது நிலைப்பாட்டினைத் தெரிவித்து அறிக்கை சமர்ப்பித் துள்ளன. எமது கட்சி 19 பக்கங்களில் தனது யோசனைகளை முன் வைத்துள்ளது. இந்த யோசனைகள் எல்லாம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையுடன் பின்னிணைப்பாகப் பிரசுரமாகியுள்ளன. இவற்றைத் தமிழ்ப் பேசும் மக்கள் கட்டாயம் வாசித்துப் பார்க்க வேண்டும்.



**? புலிகள் இல்லாத தீர்வு சாத்தியமாகுமா? அதாவது பொதியின் ஏற்பாடுகளை அமுல் படுத்தும் கட்டம் என்று ஒன்று வந்தால்........?**

✍ புலிகள் இணங்கி வந்தாலும்(?) பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டும் இல்லாமல் எந்தத் தீர்வு முயற்சியும் வெற்றியளிக்கப் போவதில்லை. ஸ்ரீ.ல.சு.கயுஞ் சரி ஐ.தே.கட்சியுஞ் சரி தேசியப் பிரச்சனைகளில் கூட நேரெதிரெதிர் நிலைப்பாட்டையே எடுத்து வருகின்றன. இவர்கள் நாட்டு நலனை முன்னிறுத்திச் செயற்படுகின்றார்களா என்பது கேள்விக்குரியது. ஒரு கட்சி-சூடு என்றால் மறுகட்சி குளிர் என்கின்றது. இதுதான் தொடரும் நாடகம். இவ்விரு கட்சிகளும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். பொதுவான அடிப்படையில் இவர்கள் இணங்கிக் கொள்ள வேண்டும். அத்தகையதொரு அடிப்படையை தற்போதைய அரசியலமைப்பின் 13வது திருத்தம் வழங்குகின்றது என்பது எனது கருத்தாகும்.

**? தமிழ்ப்பேசும் மக்களின் அபிலாசைகளை 13வது திருத்தம் பூர்த்தி செய்கின்றது என நம்புகின்றீர்களா?**

✍ இது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தினால் விளைந்தது. அதாவது மாகாணசபை அமைப்பு முறை. இந்த முறையை தற்போது இரு பிரதான கட்சிகளும் ஏற்றே செயற்பட்டு வருகின்றன. விரைவில் ஒரு தேர்தலை இந்த முறையின் கீழேயே இக்கட்சிகள் சந்திக்கத் தயாராகின்றன. எனவே ஏற்கனவே இணங்கிக் கொண்டுள்ள செயற்பாட்டிலிருந்து ஆரம்பிப்பதே சிறந்ததாகும். ஆக, தற்போதுள்ள மாகாணசபை அமைப்பு முறையை முதலாவது கட்டம் என்று எடுப்போம். இந்தக் கட்டத்தில் இரு நன்மைகளை நாம் பெறக்கூடியதாக உள்ளது. அதாவது மக்களது நாளாந்தப் பிரச்சனைகளைத் தீர்மானிப்பதற்கான ஒரு களமாக இந்த முறை பயன்படுகின்றது. அத்துடன் இணக்கம் காண முடியாமல் சகதிக்குள் சிக்கிய நிலையிலுள்ள கட்சிகள் யாவும் அந்தச் சகதிக்குள் இருந்து வெளிவருவதற்கு இந்த முறையைப் பற்றிப் பிடித்துக் கொள்ளலாம். அதாவது தற்போதுள்ள முட்டுக்கட்டையிலிருந்து மீள மாகாண சபை முறையைப் பயன்படுத்துவது நன்று.

இரண்டாவது கட்டமாக; இன்று அரசாங்கத்தின் தீர்வுப் பொதியில் ஏறக்குறைய 70% விடயங்களில் (அதிகாரப் பகிர்வு) திருத்தங்கள், மாற்றங்களுடன் ஈ.பி.டி.பி. உட்பட பாராளுமன்றத்திலுள்ள தமிழ்பேசும் மக்களின் கட்சிகள் யாவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. பெரும்பான்மைக்

கட்சிகள் இரண்டும் இதில் உடன்பட்டுள்ளன. மிகுதி 30% விடயங்கள் முக்கியமான விடயங்கள். அரச அமைப்புமுறை (Structure of State) அதாவது ஒற்றையாட்சி அரசா-சமஷ்டி அரசா போன்றவை, வடக்கு-கிழக்கு பிரிப்பா அல்லது இணைப்பா, நிலம் மீதான உரிமை, பொலிஸ் அதிகாரம், நீதித்துறை, வெளிநாட்டு நிதியுதவி போன்ற விடயங்களில் இணக்கம் காணப்படவில்லை. அதுமட்டுமல்ல. இவ்விடயங்களை அரசியலமைப்பில் சேர்ப்பதாயின் பாராளுமன்றத்தில் 2/3 பங்கு பெரும்பான்மை வாக்குகளும் சர்வசன வாக்கெடுப்பில் 51% வாக்குகளும் பெறப்பட்டாக வேண்டும். அந்த வகையில் இது உடனடியாகச் சாத்தியமில்லை. எனவே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட 70% விடயங்களைப் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றுதல் சாத்தியமாகும். இதைச் செயற்படுத்துதலில் தடையேதுமில்லை. நாங்கள் கோருவது யாதெனில் 13வது திருத்தத்துடன் சேர்த்து மேலதிகமாக 70% தீர்வு யோசனைகளையும் நடைமுறைக்கு இட்டால் இரண்டாம் கட்டம் பூர்த்தியாகின்றது.

இனி மூன்றாம் கட்டத்தைப் பார்க்கலாம். இக்கட்டத்தில் புலிகளும் பங்குபற்றுவதில் பிரச்சனையேதும் இருக்காது. அவர்கள் கலந்து கொள்வது இறுதிக் கட்டத் தீர்வில் என்பதைக் கவனிக்கவும். வடக்கு-கிழக்கில் தேர்தலை நடாத்தி அங்கிருந்து வரும் பிரதிநிதிகளுடன் புலிகளையும் சேர்த்துப் பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டும். இங்கு புலிகளும் பேச்சுவார்த்தையை இலகுவில் தட்டிக் கழிக்க முடியாது.

புலிகள் பங்குபற்றவில்லை என்பதற்காக 13வது திருத்தத்துடன் சேர்த்து - தற்போது இணக்கம் காணப்பட்டுள்ள 70%மான விடயங்களையுஞ் செயற்படுத்தாமலிருப்பது நேர்மையான விடயமல்ல என்பதே எனது கருத்தாகும்.

**? வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டுடன் உடன்படுகின்றீர்களா?**

✍ வடக்கு-கிழக்கு தாயகக் கோட்பாட்டில் எனக்கு எவ்விதக் குழப்பமுமில்லை. அது பேரத்துக்கு அப்பாற்பட்டது என்பதில் என்றும் மிகத் தெளிவுடனும் உறுதியுடனுமே இருப்பேன்.

**? தற்போது இருவித யோசனைகள் பற்றி விவாதிக்கப் படுகின்றன. தென்கிழக்கு மாகாணத் தனி அலகுக் கோரிக்கை ஒன்றுள்ளது. வேறுசில முஸ்லீம் தலைவர்கள் வடக்கு-கிழக்குக்கு வெளியில் முஸ்லீம் மக்களுக்கிருக்கும் அதே ஏற்பாடுகள் வடக்கு-கிழக்குக்குள் இருக்கும் முஸ்லீம்களுக்கும் இருந்தால் போதாதா என்கிறார்கள். உங்கள் நிலைப்பாடென்ன?**

✍ முஸ்லீம் மக்களின் அபிலாசைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக்கூடிய வகையில் வடக்கு-கிழக்கு சுயாதிக்க அலகுக்குள்ளாக இன்னொரு அகச்சுயாதிக்க அலகொன்றை ஏற்படுத்துவதே பொருத்தமானதும் நடைமுறைச் சாத்தியமானதுமாகும் என் நம்புகின்றேன். தமிழ்ப்பேசும் சமூகங்களுக்கிடையில், தமிழ்-முஸ்லீம் சமூகங்களுக்கிடையில் சகோதரத்துவத்தையும் அன்னியோன்னியத்தையும் பரஸ்பரக் கௌரவத்தையும் பாதுகாத்துத் தரும் என்றும் நம்புகின்றேன்.

**? புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் யார் என்ற பிரச்சனை தடையாக இருப்பின் - புலிகளின் தலைமையை ஒப்புக் கொண்டு பேச்சுவார்த்தை தொடங்க வழிசமைப்பீர்களா?**

✍ பேச்சுவார்த்தை என்பதன் பொருளே பரஸ்பர விட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை, பரஸ்பரப் புரிந்துணர்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டமைவதாகும். இவையே ஜனநாயகத்தின் ஆணிவேராகவும் அமைவன. எனவே, இச்சந்தர்ப்பத்தில் புலிகள் இப்படி ஒரு கோரிக்கையை முன்நிபந்தனையாக வைத்தால் அவர்களது நோக்கம் பற்றிய சந்தேகமே மேலும் அதிகரிக்கும்.

இங்கு யார் தலைமை ஏற்பது என்பது பிரச்சனையேயல்ல. பிரபாகரன் மாத்திரமல்ல. வேறு தமிழ்த் தலைவர்கள் கூட சரியான ஒரு வழிகாட்டலைக் காண்பிப்பார்களாயின் அதை ஏற்பதில் அல்லது வழிவிட்டு அரசியலிலிருந்து ஒதுங்குவதில் எந்தப் பிரச்சனையும் எனக்கில்லை. ஒதுங்குதல் என்னும்போது- ஒரு சரியான தலைமைத்துவத்திலிருந்து மக்களைப் பிரிக்க, திசைதிருப்ப, அல்லது குழப்புவதற்கு சுயலாப அரசியல் காரணமாகி விடக்கூடாது என்பதையே கருத்தில் கொள்கின்றேன். அதாவது மக்கள் பாதிக்கப்படும் ஒரு சூழ்நிலை ஏற்படுவதற்கு வீணான முரண்டுபிடிப்புகள் காரணமாகக் கூடாது என்பதுதான் பொருள்.

**? புலிகளிடம் ஆயுதம் இருக்கும்வரை நாடு முழுவதும் ஆயுத அரசியலுக்கு அவசியமும் இருந்துதானே தீரும். எனவே அவர்களில்லாத அரசியல் என்பது ஆயுத அரசியலை இப்புறத்தில் நீடித்தல் என்று தானே பொருள்.**

**உதாரணமாக, இன்று நாட்டில் எவரிடம், எந்த ரக, எத்தனை துப்பாக்கிகள், கைக்குண்டுகள் உள்ளன என்பதற்கு ஏதேனும் கணக்கு உண்டா? இதன் ஒட்டுமொத்த விளைவென்ன?**

✍ ஆயுத அரசியல் இரு தசாப்தங்களாக இந்நாட்டில் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. ஆனால் ஈ.பி.டி.பி.யை பொறுத்தவரை அது தற்பாதுகாப்புக்காகவே ஆயுதமேந்துகின்றது. இது அடிப்படை உரிமையும் கூட. ஒரு வைத்தியரின் கையிலிருக்கும் கத்திக்கும் கொலையாளியின் கையிலிருக்கும் கத்திக்கும் இடையில் வித்தியாசமில்லையா? எங்களுடைய ஆயுதங்கள் வைத்தியன் கைக் கத்தியாகவே பயன்படும். எனவே நாம் ஆயுத பாணிகள் என்பதோ அல்லது படைகளுடனான எங்களது உறவு / தொடர்பு என்பதோ முற்றிலுந் தற்காப்பு நோக்கங் கொண்டதே தவிர– சக அமைப்புக்களைப் போன்று மக்களைக் கைது செய்ய, துன்புறுத்த, கப்பம் வசூலிக்க, சொந்த லாபமீட்ட பயன்படப் போவதில்லை. ஒரு குறிப்பிட்ட காலம் வரை இந்த ஆயுதப் பிரசன்னம் தவிர்க்க முடியாததே. இனப் பிரச்சனைக்கான கௌரவத் தீர்வு காணப்பட்டால்தான் இந்த ஆயுதக் கலாச்சாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

❓ **தற்போது அவசரகால நிலை நீடிப்புப் பிரேரணைக்கு பாராளுமன்றத்தில் ஆதரவாக வாக்களிக்கும் ஒரே தமிழ்க்கட்சி உங்களுடையது தான் என்று குற்றஞ் சாட்டப்படுவது பற்றி......?**

✍ மூக்கிருக்கும் வரை சளி போகாது என்ற மாதிரித்தான். யுத்தமிருக்கும் வரையும் மக்களும் துன்பப்பட்டேயாக வேண்டும். இங்கு யுத்தத்தில் ஈடுபடுவது புலிகளும் சிங்கங்களும். இடையிலகப்பட்டு நசுங்குவது அப்பாவி மக்களாகவே உள்ளனர். இதை யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பும் உணரவேண்டும். ஆனால் அவர்கள் அங்ஙனம் உணர்வதற்கான அறிகுறி எதுவுமேயில்லை. இந்த இருதரப்புமே இது விடயத்தில் தீர்மானிக்கும் வல்லமையும் கொண்டுள்ளன. அதிகாரங்களும் கைவசம் வைத்துள்ளன. எனவே இந்நிலையில் ஈ.பி.டி.பி. அவசரகால நிலை நீடிப்புக்கு ஆதரவாக வாக்களிக்கின்றது என்பது தவிர்க்க முடியாததொரு விடயமாகும். இது தற்காலிக நிலைப்பாடேதான்.

இன்று பாராளுமன்றத்தில் வடக்கு–கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளாக த.வி.கூ., புளொட், ஈ.பி.டி.பி. என்பனவே உள்ளன. இவற்றுள் முதலிரண்டும் அவசரகால நிலை நீடிப்புப் பிரேரணைக்கு எதிராகவே வாக்களிக்கின்றன. ஆனால் இந்த இரு கட்சிகளதும் செயற்பாடு பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது போலவேதான். இது சுயலாப அரசியலேயன்றி வேறெதுவுமல்ல.



ஒரேயொரு உதாரணம் கூறுகிறேன். அரசாங்கம் சொல்கின்றது யுத்தம் மூலந்தான் சமாதானம் என்று. யுத்தத்தின் பின்னரே தீர்வென்றும் கூறுகின்றது. ஆயின் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் எப்படிப் பட்டதாக இருக்கும். அங்கே யுத்தத்துக்குப் பிரத்தியேகக் கவனிப்பு இருக்காதா? வேறெந்தச் செயற்பாட்டிலும் யுத்தப் பிரசன்னம் இருக்கவே செய்யும். ஆனால் அவசரகால நிலை நீடிப்பை எதிர்ப்பவர்கள் வரவு–செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களிக்கின்றார்கள். இதன் நோக்கமென்ன? இதை மக்களே புரிந்து கொள்ளட்டும்.

மேலும், பாராளுமன்ற ஆசன எண்ணிக்கையின்படி, ஈ.பி.டி.பி., புளொட், த.வி.கூ. என்பவற்றுக்கு மொத்தம் 17 ஆசனங்களே உள்ளன. இவை யாவுமே எதிர்த்தாலும் கூட அரசாங்கம் கவிழ்ந்துவிடப் போவதில்லை. அவசரகால நிலை நீடிப்பு நிறைவேறாமல் விடப் போவதுமில்லை. ஈ.பி.டி.பி. எதிர்த்து வாக்களிப்பதால் ஏதோ பெரிய சலசலப்பு ஏற்பட்டு விடப் போவதுமில்லை. சந்தடியின்றி எமது எதிர்ப்பு அமுங்கிப் போய்விடும். இதைவிட, சரியான சந்தர்ப்பமொன்றை எதிர்பார்த்து எமது குரலை ஓங்கி ஒலிக்கச் செய்யவே காத்திருக்கின்றேன்.

❓ **சரி, இன்றைய நிலையில் தமிழ்ப்பேசும் மக்களுக்கு நீங்கள் கூறும் அரசியல் அறிவுரை யாது?**

✍ இன்றைய நிலையில் தமிழ்ப் பேசும் மக்கள் இருவித பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. ஒன்று நாளாந்தப் பிரச்சனை. மற்றையது அரசியற் பிரச்சனை. இந்தப் பிரச்சனைகளை சில வேளைகளில் ஒன்றாகவும் வேறுசில சந்தர்ப்பங்களில் தனித்தனியாகவும் அணுக வேண்டியுள்ளது. உதாரணமாக, யாழில் உணவுப் பற்றாக்குறை, போக்குவரத்து, சுகாதாரப் பிரச்சனை என்பன தனித்தனி அணுகப்பட வேண்டியன. ஆனால் பாதுகாப்பு, கெடுபிடிகள் என்பன அரசியற் பிரச்சனையின் விளைவுகளாக அதனோடு சேர்த்துப் பார்க்கப்படக் கூடியன.

அதேவேளை, தமிழ்ப்பேசும் மக்களைப் பல பிரதிநிதிகள் பல்வேறு விதங்களில் பிரதிநிதித்துவஞ் செய்கின்றார்கள். துரதிர்ஸ்டவசமாக, இவர்களுக்கிடையில் நட்பு ரீதியிலான முரண்பாட்டை விட பகைமைமிக்க முரண்பாடே நிலவி வருகின்றது. இது எமது மக்களை இன்று மிக மோசமாகப் பாதிக்கின்ற விடயமாகும். இவ்வாறான பிரச்சனையிலிருந்து தமிழ்ப் பேசும் மக்கள் மீள்வதாயின் இவர்களுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதும் சுயலாப அரசியல்வாதி களைப் பின்தள்ளி சரியான சக்திகளை அடையாளங் காண்பதும் மக்களுடைய கைகளிலேயே தங்கியுள்ள ஒரு விடயமாகும். யுத்த கோஷங்களுக்குச் செவிமடுக்காமல் இருக்கவேண்டும்.

அரசியல் தீர்வை வென்றெடுக்கவும் ஒற்றுமையும் சமாதானமும் தழைத்திடவும் அவசியமான மக்களின் ஒத்துழைப்பு, மனந்தளராத செயற்பாடுகள் என்பவற்றை மனமார வரவேற்கின்றேன்.

# நீறுதூர்ந்த நெருப்பிலிருந்து........

சு. வில்வரெத்தினம்

சங்கப் பலகையிலே
சரிக்கட்டி வைத்த தொட்டில்
தொட்டிலிலே கண் வளர்ந்திருந்தவை
குழலும் தான்;
யாழும் தான்;
முழவும் தான்;
மனித முயல்வின் திறன்
முழுதுந்தான்.

தொட்டிலுக்குக் காவலாய்
ஆயகலைகள் அனைத்தினதும் தாய்
மடியிலே மழலையெனக் கிடத்திய வீணை
வீணையை மெலிதாய் மீட்டியதென்ன
மேவும் மாலைப் பொழுதும் சாய
பிளிறியெழும் கரிய இருள்
பிறை வெண்குருத்தைச் சப்பிவிழுங்கியபடி.

இருளின் அடர்விடை
ஊடுபத்தியவியும் சுடரின்
புகையும் குமைச்சலுமாய்
துர்வாடையின் அடைவு
துட்டாத்துமாக்களினதாய்த்தான்
இருத்தல் வேண்டும்.

கொள்ளிக்கண் பரிகலங்கள்
உள்ளக் கமலத்தை உழக்கி மிதித்தபடி
தொட்டிலுக்குத் தீமூட்டிவிட்டு
கோட்டையின் கபாடங்களினுட் போய்மறைய
குழலுந்தான்
யாழுந்தான்
முழவுந்தான்
மனித முயல்வின் திறன் முழுதுந்தான்.

பிள்ளைத் தமிழின் பிடிசாம்பரள்ளிப்போய்
மாவலியிற் கரைப்பமென
வாடிபோட்டிருந்தவரின் வஞ்சமனத்தகத்ததே
போலும் தீ மூண்டெழுகிறது
தீயிடை எழுந்தவீச்சம் திசைகளைச்சுட்டது
வீக தென்றலைச் சுட்டது
வீங்கிள வேனிலைச் சுட்டது
மீட்டியிருந்த நாதமணித் தளிர்
விரல்களைச் சுட்டபோதங்கு
மாசில் வீணை நரம்புகள் கேவின
குழலும் குழல்வழிப் பல்லியமும் தேம்பின
முழவின் ஏங்கின மனித முயல்வின்
திறனெலாம்.

தாயவள்
தமிழ்தம் உணத்தந்த கலைத்தெய்வதம்
பூண்டிருந்த வெள்ளைப் பணியெலாம்
புகைபடர
ஆயகலைகளெலாம் சூழநின்று
பாலுக்கிரந்தழுத 'பரிபாடலை' நான்
எப்படிப் பாடுவேன்?
பாடத்தான் வேண்டும்
காற்றை, கனலை, கனைகடலை,
மலைமுகடுகளை
கடந்து செல்லெனச் செல்லும்
ஓர்பாடலை.

கபாடபுரங்களை காவு கொண்ட பின்னும்
காலத்தாற் சாகாது மீந்த
தொல்கனிமத்து உரமெலாம் சேரப்
பாடத்தான் வேண்டும்.

ஏடு தொடக்கி வைத்த நாட்களில்
என்னம்மை மண்ணிலே
தீட்டித்தீட்டி எழுதுவித்த விரல் முனையைத்
தீயிடைக் காய்ச்சி
திசைகளின் சுவரெலாம் எழுதத்தான்
வேண்டும்
எழுகிற யுகத்தினோர் பாடலை.

(யாழ். பொதுநூலக எரிப்பின்
நீறுபூத்திருந்த உணர்வுகளில் கிளறி
எழுந்தது). ☒

☺

## தோழர் சரத் நினைவாக...

(இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களுள் ஒருவராகவும் மானிட நேயராகவும் நாட்டின் இனப்பிரச்சனை தொடர்பில் நேர் கொண்ட பார்வையுடையவராகவும் இருந்த சரத் முத்தெட்டுவகமவின் நினைவு நாள் ஜுன் 11ஆந் திகதியாகும்.

94,000 இந்திய வம்சாவழியினருக்குப் பிரசாவுரிமை வழங்கும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது (1986 பெப்ரவரி) எதிர்க்கட்சியில் இருந்து கொண்டும் அச்சட்டமூலத்தை ஆதரித்து சரத் ஆற்றிய உரையின் ஒரு பகுதி அவரின் ஞாபகமாகக் கீழே தரப்படுகின்றது):

"1934இல் முதன் முதலில் இடதுசாரிகளே இப்பிரச்சனைக்குக் குரல் கொடுத்தனர். அடுத்து என்ன நடந்தது? இடதுசாரிகள் இக்கோரிக்கையை விடுத்து வந்தனர். 1937இல் இராஜ்ய சபையில் இரு சமசமாஜக்கட்சி அங்கத்தவர்களே இருந்தனர். அச்சமயத்தில் டாக்டர் விக்கிரமசிங்க சிறையில் இருந்தார். ஆனாலும் டாக்டர் என். எம். பெரேரா, பிலிப் குணவர்தனா ஆகிய சமசமாஜக் கட்சி அங்கத்தவர்கள் இராஜ்ய சபையில் அங்கம் வகித்தனர். அன்று கம்யூனிஸ்ட் கட்சி இருக்கவில்லை. எல்லோரும் சமசமாஜக் கட்சியில் இருந்தனர். அன்று டாக்டர் என்.எம். பெரேரா பிரேரணை ஒன்றை கொண்டு வந்தார். இந்திய தொழிலாளர்கள் இவ்வாறு கொண்டுவரப் படுவதை முழுதுமாக நிறுத்த வேண்டுமென்பதே அது. இப் பிரேரணையை பிலிப் குணவர்தனா ஆமோதித்தார். இதற்கு வாக்களிக்கப்பட்ட விதம் மிக முக்கியமாகும். நீங்கள்தான் இப் பிரச்சனையின் பங்காளிகள், நீங்களும், உங்கள் கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களுமே. இந்திய மக்களை தொழிலாளர்களாக இங்கு கொண்டு வருவதை நிறுத்துமாறு பிரேரித்தது டாக்டர் என். எம். பெரேரா, ஆமோதித்தது பிலிப் குணவர்தனா. இங்கு நேரம் போதாததினால் அவர்களின் உரைகளை வாசிக்கவில்லை. எனினும் அவை மிக முக்கியமானவை. 1937 இராஜ்ய சபை ஹன்சார்ட் அறிக்கைகளின் 11வது தொகுப்பிலும், 1937 ஜுலை, செப்டெம்பர் இதழ்களின் இரண்டாயிரத்து நாநூறாவது பக்கங்களிலும் இவ்வுரைகள் உள்ளன. அவைகளை வாசிக்குமாறு

இப்பிரச்சனையில் அக்கறை காட்டும் கௌரவ அங்கத்தினர்களை வேண்டுகிறேன்.

அன்று இப்பிரேரணைக்கு வாக்களித்தது எவ்வாறு? டாக்டர் விக்கிரமசிங்க அந்நாளில் இராஜ்ய சபையில் அங்கம் வகிக்கவில்லை. இதற்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் பின்வருமாறு:

திரு. பேர்னாட் அலுவிஹரா, திரு. ஏ. இ. குணசிங்கா (இக்காலம் வரைக்கும் இவர் வகுப்புவாதத்தில் விழுந்திருக்கவில்லை. இவரது சரித்திரத்தை நான் பின்னர் கூறுகிறேன்). அடுத்து டி.பி.ஆர். குணவர்தன, (அதாவது திரு பிலிப் குணவர்தனா) டாக்டர் என். எம். பெரேரா, டி. எம். இராஜபக்ஷ ஆகியோர்.

இவ்வாறாக இதை ஆதரித்து வாக்களித்தவர்கள் 5 பேர். அதாவது இந்தியத் தொழிலாளர்களை 1937இல் கொண்டு வருவதை நிறுத்தக் கோரும் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தவர்கள் 5 பேர் மாத்திரமே.

1947இல் சோல்பரி யாப்பின்படி அன்று நடந்த முதலாவது பொதுத் தேர்தலின் பின்னரான பாராளுமன்றத்தில் அன்றிருந்த நிலைமை மாறுபட்டிருந்தால், இங்கு வந்த இந்தியர்கள் உங்களுடைய கட்சியினராக இருந்திருந்தால் 1948இன் பிரஜாவுரிமைச் சட்டம் வந்தே இராது. மலையகத்திற்கு அண்மையில் உள்ள களனிவெலி, ருவன்வெல்ல, அவிசாவளை தொகுதிகளிலும் இரத்தினபுரி – பதுளை மாவட்டங்களின் சில தொகுதிகளிலும் கண்டி மாவட்டத்தின் சில தொகுதிகளிலும் ஒன்று அவர்களின் பிரதிநிதிகள் அல்லது எனது ஞாபகத்தின்படி இலங்கை – இந்திய காங்கிரஸின் பிரதிநிதிகள் தெரிவாகினர். இவர்கள் இல்லாத இடங்களில் இடதுசாரிகள் வந்தனர். வர்க்க உணர்வுக்கு ஏற்ப இந்திய தொழிலாளர்கள் வாக்களித்தனர். அதன் பின்னர்தான் பிரஜாவுரிமைச் சட்டம் அவசியப்பட்டது. உங்கள் வரலாற்றைப் புரட்டிப் புரட்டிப் பாருங்கள். இச்சட்டத்தை சமர்ப்பிக்கும்பொழுது திரு. டி. எஸ். சேனநாயக்கா என்ன சொன்னார். படித்துப் பாருங்கள்– பிரஜாவுரிமை பற்றிய விவாதம் இங்கிருக்கிறது. அன்று இச்சட்டத்தை சமர்ப்பித்து பேசிய டி. எஸ். சேனநாயக்கா சொன்னார். இச்சட்டத்தினால் இந்தியத் தொழிலாளர்களுக்கோ அல்லது இந்திய மக்களுக்கோ வாக்குரிமை இல்லாமல் போகாது என்று. பிரஜாவுரிமை சட்டம் கொண்டுவருகையில் 1948இல் இருந்த கருத்து இதுதான். வாக்குரிமை பறிபோகாது என்றார். அதன் பின்னர் கொண்டுவரப்பட்டது இமிகரண்ட்ஸ் சட்டம்.

அடுத்து 1949இல் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்திற்கு திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது. அதனால் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அத்தனகலை கௌரவ உறுப்பினர் (லக்ஷ்மன் ஜயக்கொடி) இப்போது சொன்னார் வாக்குரிமை இருப்பது பிரஜாவுரிமை இருப்பவருக்குத்தான் என்று. அப்படியில்லை. வாக்களிக்க பிரஜாவுரிமை அவசியமில்லை. இப்படி பல நாடுகளில்

(29 ←)



# இலங்கையில் இலக்கிய விமரிசனம் – சில எதிர்பார்ப்புகள்

தெ. மதுசூதனன்

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் சமகாலச் சிரத்தை பற்றியும் இலக்கிய விமரிசன முறைமை பற்றியும் நாம் சிந்திக்க வேண்டிய கட்டத்தில் உள்ளோம். இன்று ஈழத்துத் தமிழ் இலக்கியம் எப்பொருளைப் பேசுகின்றது? எவ்வாறு அதனைப் பேசுகின்றது? ஏன் அவ்வாறு பேசுகின்றது? போன்ற வினாக்கள் இயல்பாக எழுகின்றன. அத்தோடு இவற்றின் பின்புலத்தில் விமரிசனத்தின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பன பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டும். இவற்றை விளங்கிக் கொள்ளும் விதத்தில் 'இலக்கிய விமரிசனம்' பற்றிய சில சிந்தனைகளை மட்டும் இக்கட்டுரை பேசுகின்றது. இது ஒரு முழுமையான வரன்முறையான ஆய்வுக் கட்டுரை அல்ல.

ஈழத்தில் இலக்கியம் தனது ஆக்கபூர்வமான பணியைச் செய்வதற்கான களங்கள் அதிகம் உள்ளன. ஆனால் அந்தக் களங்களை நாம் இன்னும் சரிவரப் பயன்படுத்த முடியாதவர்களாகவே உள்ளோம். இன்றும் இலக்கிய விமரிசனம் எனும் பெயரில் திட்டித் தீர்ப்பது அல்லது தூக்கி மெச்சுவது என்றவாறே நிகழ்த்தி விடுகின்றோம்.

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் விமரிசனம் எனும் பெயரில் நடந்து வருவது இன்று யாதெனில், வெறும் அபிப்பிராயங்களும் மேலோட்டமான குறிப்புக்களும் மனப்பதிவுகளும் தான். இந்த வரையறைகளை இன்னும் தாண்டாமலேயே உள்ளோம். இதனால் விமரிசனம் குறித்து தவறான பிரக்ஞைகளும் புரிதல்களும் எம்மிடையே வளர்ந்து விட்டன. வெறும் அபிப்பிராய வெளிப்பாடுகள் மாத்திரம் இலக்கிய விமரிசனம் ஆகிவிட முடியாது. அத்துடன் இலக்கியங்கள் பற்றிய தரவுகளைப் பட்டியல் போட்டுத் தருவதும் விமரிசனத்தின் பணி அல்ல.

எமது முழுத் தமிழ் இலக்கியப் பரப்பையும் அதன் வளத்தையும், பலம் பலவீனம் குறைபாடுகள் யாவற்றையும் இனங்கண்டு பேசத் தொடங்கும் பொழுது தான் பல்வேறு கருத்து நிலைப்பட்ட விமரிசன முறைமைகள் குறித்துப் பேசுவோம். அந்நிலையில் இலக்கிய விமரிசனம் பல முனைகளில் இருந்தும் தொழிற்படும். இதனால் எமது இலக்கிய வளம் இன்னும் ஆழ அகலப்படும்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளத்தின் தொடர்ச்சியான ஆற்றலை உயிர்ப்பை விளங்கிக் கொள்ள முனையும் பொழுது, அல்லது அதன் முழுமையை பார்க்கத் தொடங்கும் பொழுதுதான், எமது இதுகாலுமான விமரிசனச் செயற்பாடுகள் விமரிசனப் புலமை பற்றிய போதாமைகள் யாவும் நமக்குப் புலப்படும்.

விமரிசனம் என்பது வரன் முறையாக ஆற அமரச் செய்யப்படும் ஆய்வுப் பணியாகும். அந்த ஆய்வின் பொழுது பல கருத்து வேறுபாடுகள் தோன்றும். புதிய பிரச்சனைகள் கிளப்பப்படும். அவற்றை விளக்கவும் தீர்க்கவும் முனைகின்ற பொழுது புதிய தெளிவுகள் ஏற்படும். இது முற்றுமுழுதான ஒரு புலமை முயற்சியாகத் தொடரப்படும்.

விமரிசனத்தின் பொழுது ஒருவர் இன்னொருவரின் கோட்பாடுகளை மேற்கொள்ளவில்லையே என்பதற்காக அவரைக் கண்டித்தல் கூடாது. அவர் தான் மேற்கொண்டுள்ள – சுயமாக வரித்துக் கொண்டுள்ள – கோட்பாட்டின் – உள்ளார்ந்த தருக்கத்தைப் பூரணமாக ஏற்றுக் கொள்கின்றாரா என்பதை முதலில் ஆராய வேண்டும். அடுத்த நிலையிலேதான் அவரது கோட்பாட்டின் குறை நிறைகளை இன்னொரு கோட்பாட்டின் கண்ணோட்டத்தில் வைத்துக் கூறல் வேண்டும். அதுதான் நேர்மையான விமரிசனத்துக்கு இடமளிக்கும். ஆனால் இந்தப் பின்புலத்தில் ஈழத்து விமரிசனச் சூழல் அமையவில்லை; வளர்த்தெடுக்கப்படவில்லை.

இன்னும் நம்மிடையே "விமரிசனப் புலமை" ஏற்படவில்லை. நாம் பிற விமரிசகர்கள் கூறியவற்றையே அளவுகோல்களாகக் கொள்கின்றோம். அவற்றைக் கூட இன்னும் தெளிவாக அறிந்து தெளிந்து கொள்ளவில்லை. அதன் வெளிச்சத்தில் இலக்கியங்களைப் பார்க்கும் அணுகும், விமரிசிக்கும் பாங்குகள் இன்னும் எம்மிடையே ஆழப்படுத்தப்படவில்லை. அல்லது கூவரவில்லை. மிகை எளிமைப் பாங்கில் இக் கோட்பாடுகளை விளங்கி மலினப்படுத்திய விமரிசனங்களையே செய்கின்றோம். இது எம்மிடையே இக்கோட்பாடுகள் குறித்த தவறான புரிதல்களையும் விளக்கங்களையும் கூட ஏற்படுத்தி விடுகின்றன.

இலக்கியம் எவ்வாறு ஓர் படைப்பாக்கச் செயற்பாடோ அதுபோல் விமரிசனமும் படைப்புச் செயற்பாடாகவும் கலையாகவுமே பார்க்கப்பட வேண்டும். இலக்கியத்தை புரிந்து கொள்வதற்காக விமரிசனம் எனக்கூறிக் கொண்டாலும் அதனை எளிமைப்படுத்தி விளங்கிக் கொள்ளக் கூடாது.

இன்று இலக்கிய விமரிசனம் சமூகவியல், சமூக வரலாறு, தத்துவம், மொழியியல், உளவியல் போன்ற அறிவுத் துறைகளின் பார்வைகளையும் உள்வாங்கிச் செரித்துக் கொண்டு தனித்த துறையாக, ஓர் அறிவியலாகவே மேற்கொள்ளப்படுகிறது.

சமூக மாறுதல்களுக்கும் சமுதாயச் சிந்தனைகளுக்கும் ஏற்ப இலக்கியம் பற்றிய புரிதலிலும் விளக்கத்திலும் மாற்றங்கள், வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. ஏற்பட்டும் வருகின்றன. நமது இதுகாலுமான இலக்கியக் கல்வியை வரலாற்று ரீதியில் பின்னோக்கி பார்க்கும் பொழுது புரிந்து கொள்ளலாம். ஆதலால் இலக்கியத்துக்கான முடிந்த முடிவான விளக்கம் ஒன்றை நாம் கொடுத்து விட முடியாது. இது மாறக் கூடியது. அதுதான் வரலாறும்.

இலக்கிய விமரிசனமும் அவ்வக் கால இலக்கியங்களை புரிந்து கொள்வதற்கும் மதிப்பிடுவதற்குமான செயற்பாடாக அமைந்தாலும் விமரிசனச் சிந்தனையிலும் பார்வையிலும் பல்வேறு மாற்றங்கள் வளர்ச்சிகள். அவையும் கோட்பாட்டு நிலைப்பட்ட விமரிசனங்களாக மாற்றமுறுகின்றன.

இந்தப் பின்புலங்களில் இருந்தெல்லாம் ஈழத்து விமரிசனப் போக்குகளை புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு முயற்சி செய்யும்போது திருப்திகரமான பதில்கள் எதனையும் கொள்ள முடியாது.

ஈழத்தில் மார்க்சிய விமரிசன மரபு ஐம்பதுகளின் கடைசியில் தொடங்கி 1960களில் முனைப்புப் பெற்று மிகுந்த தாக்கம் செலுத்திய ஒன்றாகவே இருந்தது. ஆனால் 1970களின் பின்னர் அம்மரபு தேக்கமுற்று 1975க்கு பின்னர் முற்றாகவே தேங்கிவிட்டது. 1950–70 வரை ஏற்படுத்திய தாக்கத்தின் செழுமையின் தொடர்ச்சியிலேயே பின்வந்த காலத்தை மார்க்சிய விமரிசன மரபு கடக்கத் தொடங்கியது. இதனால் மார்க்சிய விமரிசனக் கோட்பாட்டு அணுகல் முறை வெறும் கலைச் சொல்லாடல் விளையாட்டாகவே மாறியது. மார்க்சிய இலக்கிய விமரிசனத்தை மேலும் அடுத்த நிலைக்கு வளர்த்துச் செல்ல முடியவில்லை. இன்னொரு விதத்தில் கூறினால் 1970களின் பின்னர் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் மு. எ. சங்கத்தின் பாத்திரம் செயற்பாங்கற்ற ஒன்றாகவே மாறியது; மாறிவிட்டது. எவ்வாறாயினும் முற்போக்குச் சங்கத்தின் செயலற்ற தேக்கம் மார்க்சிய விமரிசனப் பயில்விலும் / செயற்படுத்தலிலும் கூட தாக்கமேற்படுத்தியது. இதுவரையான வரலாறும் இதைச் சுட்டி நிற்கிறது.

முற்போக்கு இலக்கியங்களுக்கான சமூக அங்கீகாரத்தை பெற்றுக் கொடுப்பதில் மார்க்சிய விமரிசகர்களின் பாத்திரம் முதன்மையானது; முக்கியமானது. ஆனால் விமரிசனத் தொழிற்பாட்டில் விமரிசகர்கள் சில வகையான விமரிசனங்களில் ஈடுபடவேயில்லை என்பது வேறுவிடயம்.

குறிப்பாக ஒரு எழுத்தாளருடைய 10, 15 வருட கால படைப்புக்களை கவனித்து, பிரயோக விமரிசன நிலையில் வைத்து, அந்தப் படைப்பாக்கங்களினூடாக

வரும் வளர்ச்சிகளை காணும் விமரிசனப் பாங்கு ஒன்றை முன்வைக்கவில்லை. வளர்த்தெடுக்கவில்லை. இது இவர்களால் செய்யத் தவறப்பட்ட விமரிசனம் என்றே கூறவேண்டும். இதனால் எந்தவொரு படைப்பாளியினுடைய முழு வளர்ச்சிகளையும் படைப்பாளுமைகளையும் படைப்பாக்கற் திறன்களையும் காணமுடியாமல் போய்விட்டது. அல்லது வேறு சில எழுத்தாளர்களின் வளர்ச்சியின்மைகளையும் குறைபாடுகளையும் கூட காண முடியவில்லை.

கருதுகோள், கருத்துநிலை சம்பந்தமான குழுச்சண்டைகளில் அதிகம் ஈடுபட்டது உண்மைதான். இதற்கு நியாயப்பாடுகள் இல்லாமலும் இல்லை. ஆனால் படைப்பு விமரிசனம் எனும் நிலையில் அதையும் கடந்து விமரிசன முறைமை படைப்பியல் பார்வை இன்னும் இன்னும் ஆழமாக மேம்பட்டிருக்க வேண்டும்.

1970களுக்கு பிறகுதான் பலரும் புத்தகங்கள் /தொகுதிகள் போடத் தொடங்குகின்றனர். இதன் பின்னர் குறித்த ஒரு எழுத்தாளருடைய முழு வளர்ச்சிகளையும் படைப்பியல் ஆளுமைகள் குறித்தும் கவனத்தில் எடுத்து விமரிசனம் செய்வதற்கான உந்துதல்கள் 70களுக்கு பிறகு அதிகரித்திருந்தன. இருப்பினும் இது கவனிப்புப் பெறாமலேயே போய்விட்டது.

முற்போக்கு கருத்துநிலை சார்புக்குள் வராத பல்வேறு எழுத்தாளர்கள் குறித்தும் அதிகம் அக்கறைப்படவில்லை. படைப்பு ரீதியில் ஒப்பீட்டு அடிப்படையில் கூட இந்த மட்டங்களிலிருந்தும் விமரிசனங்களை முன்வைத்திருக்க வேண்டும். விமரிசனம் எனும் பெயரில் வெறும் அபிப்பிராயங்கள் மேலோட்டமான குறிப்புக்கள் இவற்றுக்கு அப்பால் இது செல்லவில்லை. வளர்த்தெடுக்கப்படவில்லை. விமரிசனம் விமரிசனச் செயற்பாடுகள் பலதள மட்டங்களிலும் நோக்குகளிலும் பார்வைகளிலும், பல்வேறு கருத்து நிலைகளிலும் கூட முன்னெடுக்கப் பட்டிருக்க வேண்டும். அப்போது தான் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் சிரத்தை மாற்றங்கள் எவ்வாறு இக்காலப் பகுதிகளில் நடைபெற்று வருகின்றன என்பது குறித்து எல்லாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

சமூக அசைவியக்கத் தொழிற்பாட்டில் சுழன்று, மாறிவரும் சமூகவுறவுச் சிக்கல்களிடையேயும், அகப்புறச் சவால்களுக்கிடையேயும், அவற்றிற்கூடாகவும் இலக்கியம் எவ்வாறு படைப்பாக்கம் பெற்று வருகிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இவற்றினை விமரிசன நோக்கு நிலைகளில் புரிந்து கொள்வதற்கான சில முன்முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அப்பொழுதுதான் ஈழத்தில் சமகாலச் சிரத்தை பற்றிய, கருத்துநிலைகள் பற்றிய, தெளிவும் அவற்றுக்கிடையேயோடும் நுண்ணிய அம்சங்களும் நமக்கு புலப்படும். நாம் இனிச் செய்ய வேண்டிய பணியும் இதுதான். ☒



## 'திருப்பம்' இரு இதழ்கள் பற்றிய சிவசேகரத்தின் மனப் பதிவுகள்!

அன்புடையீர்,

1 பாடசாலைக் கல்வி பற்றிச் சோ. சந்திரசேகரம் சொல்லியவை (திருப்பம் 2) பற்றிச் சில சொற்கள்:

(மாக்ஸியர்கள் உட்பட?) 'தீவிரவாதக்' கல்வியாளர்கள் எனக் கூறப்படுவோர் கல்வி முறையின் வர்க்கப் பண்பு தொடர்பாகக் கூறுவனவற்றுக்குச் சாதகமான புள்ளி விவர ஆதாரங்கள், (அமெரிக்கா உட்பட்ட) மேனாட்டுக் கல்வி முறை பற்றிய 'மிதவாத' ஆய்வுகளின் மூலமும் புலனாகியுள்ளன.

எந்த அறிவினதும் அகச் சார்புத் தன்மை பற்றி மாக்ஸியரல்லாதோரால் மாக்ஸிய விரோத நோக்கில் முன்வைக்கும் விளக்கங்களை ஏற்பதில் நமது ஆய்வறிவாளர்கள் பலருக்குத் தயக்கம் குறைவு. நடுநிலையானதும் பக்கச் சார்பற்றதுமான ஆய்வின் விளைவான மனித அறிவு இல்லை என்ற மாக்ஸிய நிலைப்பாடு மட்டும் ஐயத்துக்குள்ளாக அவசியம் என்ன? நவீனமாதல், விருத்தி, உலகமயமாக்கம், தகவற் தொழில் நுட்பம் என்பன பற்றிப் பரவலாக நிலவும் பார்வை ஏகபோக முதலாளியத்தின் பார்வையே. இப் பார்வை, இன்று, 'தீவிரவாதக்' கண்ணோட்ட மற்றவர்களாலும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. கல்வியில் ஆளும் வர்க்க நலன் சார்ந்த பண்பு காரணமாகத் தொழிலாளர்களது பிள்ளைகள் பாடசாலைக்குப் போகக் கூடாது என்று எவரும் வாதிடுவதில்லை. ஆயினும் நமக்குக் கற்பிக்கப்படும் ஏராளமான பொய்கள் பற்றிய விழிப்புணர்வும் கல்வியின் முனைப்புப் பற்றிய தெளிவும் மீளவும் மீளவும் வலியுறுத்தப்படவேண்டியன.

மலையகத் தமிழர் கல்வியில் பின்தங்கியிருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. திட்டமிட்டே பிற்படுத்தப்பட்ட ஒரு சமுதாயமான மலையகத் தமிழர்கட்கு உயர் கல்வியில் விசேட முன்னுரிமை தேவை. மலையக மக்களது பேரைச் சொல்லி மிகவும் முன்னேறிவிட்ட தலைமைகள் தோட்டத் தொழிலாளரது நீண்டகாலச் சமுதாய முன்னேற்றத்திற்காக இக் கருத்தை வலியுறுத்திச் செயற்பட மாட்டார்களா?

கல்வியின் தரம் குறைந்து விட்டது எனக் கூறுவோர் காட்டும் ஆதாரங்களான ஆங்கில அறிவு போதாமை, பொது அறிவு போதாமை, தொழில் ஆற்றற் குறைபாடு போன்றவற்றையிட்டு சந்திரசேகரம்

முன்வைக்கும் வாதங்கள் சரியானவை யாயினும், கல்வியின் தரம் தாழ்ந்து விட்டது என்று கூறுவதற்கான நிசமான ஆதாரங்கள் அவையல்ல.

இலவசக் கல்வியும் தாய்மொழிக் கல்வியும் கல்வி வசதிகளின் பெருக்கமும் 1960க்குப் பின்பு பாடவிதானத்திற் செய்யப்பட்ட மாற்றங்களும் நாட்டின் பாடசாலைக் கல்வியையும் பல்கலைக்கழகக் கல்வியையும் தரத்தில் உயர்த்தின. ஆயினும், கடந்த இருபது ஆண்டுகளிற் பாடசாலைக் கல்வி சந்தித்துள்ள பெருஞ் சரிவு, பல்கலைக்கழகக் கல்வியையும் மிகவும் பாதித்துள்ளது. 'ரியூஷன்' முறை 1970களில் க.பொ.த. (உ.நி.) மாணவர்களது சுயமாய்ப் பயிலும் ஆற்றலைப் பாதிக்கத் தொடங்கியது. 1977க்குப் பின்பு, ரியூஷன், பாலர் வகுப்பு வரை தொற்றி விட்டது. நமது பாடசாலைக் கல்வி நோயுற்றிருக்கிறது. ரியூஷன் அதற்குப் பரிகாரம் என்று பலரும் நம்புகின்றனர். நம் குழந்தைகளின் சுயமான சிந்தனை ஆற்றலை முடக்கிக் கிளிப் பிள்ளைகட்குரிய கல்விமுறை ஒன்றை அல்லாது வேறெதற்கும் தகுதியற் றோராக ரியூஷன் அவர்களைச் சீரழித்து விடுகிறது.

நமது குழந்தைகள் மகிழ்ச்சி யுடன் விளையாடித் துள்ளித் திரியும் பருவத்தில் முதுகிற் பாரம் சுமந்து கூனுகின்றனர். வீட்டுக்கும் பாடசாலைக்கும் வெளியே உள்ள விசாலமான ஒரு உலகம் பற்றிச் சிந்தித்து, அனுபவித்து அறிய வேண்டிய வயதில் 'ட்யூட்டறி' வாத்திமாரது மூளைச்சலவைக்கு ஆளாக்கப்படுகின்றனர். கல்வித் தரம் பற்றிய இன்றைய பிரச்சனை நமது கல்வியை அது எப்போதோ இருந்த குறைபாடான நிலைக்கேனும் மீட்க முடியாதா என்று ஏங்குமாறான அவலம் தொடர்பானது. சந்திரசேகரம் இதுபற்றி கவனங் காட்டுவாரென்று எதிர்பார்க்கிறேன்.

2 செல்வி திருச்சந்திரன், மாக்ஸியத்தைப் பற்றிய திரிப்புக்களின் அடிப்படையில், தன்னுடைய வகையான பெண்ணியத்தை நிலைநிறுத்த முயல்வது இப்போது தான் தொடங்கிய ஒன்றல்ல. ஐந்து ஆண்டுகட்கு முன்பே அவருடன் இவ்விடயம் தொடர்பாகக் கடுமையாக முரண்பட நேர்ந்தது. அதை மீண்டும் செய்யும் நிர்ப்பந்தத்தைத் திருப்பத்தின் மூலமும் ஏற்படுத்தியுள்ளார். அது போக, தமிழகத்து அரசியல் பற்றிய பரிச்சயமின்மையும் அவரது கட்டுரையிற் புலனாகியுள்ளது. அவரது கட்டுரை தொடர்பாக நான் கூற விரும்புவன:



தென்னிந்தியத் திராவிட இயக்கங்கள் பெண்ணுரிமை விடயத்தில் ஏனைய இந்தியத் தேசிய இயக்கங்களினின்று வேறுபட்டவை என்ற கூற்றை நியாயப்படுத்தும் முறையில் ஈ.வெ.ரா. செயற்பட்டார் எனலாம். ஈ.வெ.ரா. விடம் மாக்ஸியச் சிந்தனையுடன் கொஞ்சம் பரிச்சயமும், (சில குறைபாடுகளுடனெனினும்) மனித சமத்துவம் பற்றிய உறுதியும் இருந்தன. அவரது சுயமரியாதை, பகுத்தறிவு இயக்கங்களது வாரிசுகளான திராவிட இயக்கங்களில் அவரது பெண்ணுரிமை நிலைப்பாட்டின் நிழல் கூட இல்லை எனுமளவுக்கு இன்றைய நிலை உள்ளது. பல சீர்திருத்தத் திருமணங்களில் 'பார்ப்பனிய' எதிர்ப்பு இருந்த அளவுக்குப் பெண்ணுரிமை இலக்கு இருந்ததா என்பது பற்றி எனக்கு ஐயம் உண்டு.

தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பான குறிப்புக்களில், வேத மரபும் சங்ககாலமும் பற்றிக் கட்டுரையாளரது கூற்றுக்கள், இக்காலங்களிற் பெண்கள் இருந்த நிலை அவற்றையடுத்த உபநிடத, (பிராமணிய) இந்துமத எழுச்சிக் காலங்களில் மிகவும் சரிவுக்காளானது என்பதை அறிந்து எழுதியது போலத் தெரியவில்லை. சங்ககாலம், நால் வேதம் என்ற பதங்களை அவற்றின் உண்மையான உள்ளடக்கம் பற்றிய அறிவின்றிக் கட்டப்பட்ட படிமங்களின் வடிவிலேயே கட்டுரையாளர் ஏற்றுக் கொண்டுள்ளது போற் தெரிகிறது.

கட்டுரையாளர் கூறுவது போல 1988இல் முஸ்லிம்களும் *தமிழ்த் தேசியத்துக்காக* ஐக்கியப்பட்டனரா என்பது பற்றியும் எனக்குட் பல ஐயங்கள் உள்ளன. 'கற்பழித்தல்' என்ற சொல் பெண்களை அவமதிக்கிறது என்று மிகவும் கடுமையாக முன்பு ஒருமுறை வாதாடிய கட்டுரையாளர் அந்தக் கீழ்த்தரமான சொல்லையே பிரயோகித்திருப்பதும் என்னை ஏமாற வைக்கிறது. இவ்வாறான கவனயீனம் கட்டுரையிற் பல இடங்களில் உள்ளது.

தாய்நாடு என நாடுகள் அழைக்கப்படுவதற்கான வாசிப்புக்களை அள்ளி வழங்கும் கட்டுரையாளர், ஜேர்மனியும் ரஷ்யாவும் தந்தையர் நாடெனவே விளிக்கப்படுவதற்கான காரணத்தையும் தந்துதவ வேண்டும். நமது மரபில் தாய் நாடு என்ற சொல் எப்போது வந்ததோ தெரியாது. பாரதி, தாய் என்றும் தந்தையர் நாடென்றும் இந்தியாவை விளித்திருக்கிறார். 'வந்தே மாதரம்' இந்தியாவின் தேசிய கீதத்துள் எவ்வாறு உச்ச நிலை கண்டது எனவும் கட்டுரையாளர் தான் விளக்கி உதவ வேண்டும்.

அடையாள வரையறைகளில் சாதி, சமயம், இனம், வர்க்கம், பால்நிலை என்ற ரீதியில் அமைவதாகவும் அவற்றுள் *ஒன்றுக்கு மட்டுமே முக்கியத்துவம்* அளிக்கப்படும் என்பதும் கட்டுரையாளரது நிலைப்பாடு. நான் அவரிடம் மன்றாடிக் கேட்க விரும்புவது, முரண்பாடுகள் பற்றி மாஓ சேதுங் எழுதிய விரிவான கட்டுரையை அவர் ஒருமுறை பொறுமையாக வாசிக்க வேண்டும் என்பதே. மாக்ஸிய

அணுகுமுறையே ஆணாதிக்கச் சமுதாயத்தின் தோற்றம் பற்றிய ஒரு தெளிவான பார்வையை முதலில் முன்வைத்துப் பெண்ணுரிமைக் காகவும் குரல் கொடுத்தது. சீன விடுதலையின் பின்பு முதலாவதாக இயற்றப்பட்ட சட்டம் பெண்களது உரிமைகள் பற்றியது என்பதையும் இங்கு நினைவூட்டல் தகும்.

மாக்ஸியத்தைக் கொச்சையாக விளக்கி அதன் மீது விளக்குமாற்றுப் பூசை நடத்துவோர் பலர். கட்டுரையாளருக்கு முன்னரே பலர் அந்தப் பாதையில் பயணம் செய்துள்ளனர். வர்க்கப் போராட்ட முடிவில் வர்க்கமற்ற சமுதாயம் தோன்றும்போது சகல ஒடுக்கு முறைகளும் ஒழியும் என்பது மாக்ஸியப் போராட்ட இலக்கும் எதிர்பார்ப்பும் இணைந்த கூற்று. ஆயினும், அந்த நாள் வரும்வரை ஒடுக்கப்பட்ட மக்கள் எல்லாரும் கையைக் கட்டிக் கொண்டு தியானம் செய்ய வேண்டும் என்று மாக்ஸியவாதிகள் கருதவில்லை. 'ஆண்-பெண் பால் வேறுபாடும் முதலாளித்துவத்தால் செயற்கையாக நுழைக்கப்பட்டது என்று மாக்ஸியம் கூறுகிறது' என்பதும் கட்டுரையாளர் வழங்கும் ஒரு புதிய செய்தி.

பெண்ணுரிமையை வேறு எந்த மனித உரிமையினும் குறைவாகவும் ஆண்-பெண் சமத்துவத்தை எந்த மனித சமத்துவத்தினும் கீழ்ப் பட்டதாகவும் கருதுவதற்கு ஒரு மாக்ஸியவாதிக்கு நியாயம் இல்லை. பெண்ணுரிமைக்கான போராட்டம் பல தளங்களில் நிகழ்கிறது. வசதிபடைத்த ஒரு வர்க்கத்தின் பெண்களது பிரச்சனையாகவே பெண்ணுரிமையைக் காணுகிறவர்களுடன் மாக்ஸியர்கள் முரண்படாமலிருக்க முடியாது. மனித சமத்துவத்தின் இன்றியமையாத கூறாகப் பெண்களுக்கும் ஆண்களுக்கு மிடையிலான சமத்துவம் அமைகிறது. இதுவே முதன் முதலாக மீறப்பட்ட மனித சமத்துவமுங்கூட. தனியுடைமையின் தோற்றமே இதன் காரணம். எனவே தனியுடைமையின் ஒழிப்புக்கும் பெண்ணுரிமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

தேசியமும் மாக்ஸியமும் பற்றியுங்கூடக் கட்டுரையாளர் மிகவும் குழம்பிப் போயிருக்கிறார். இந்தியா முழுவதும் தாய்மொழிக் கல்விக்காகக் குரல் கொடுத்து வந்தோர் மாக்ஸிய வாதிகளே. திராவிட இயக்கங்கள் இன்றும் நடைமுறையில் ஆங்கிலக் கல்விக்கே ஆதரவு காட்டி வருகின்றன. மக்களது அடையாளத்தை அதிகாரத்திற்கும் அடக்குமுறைக்கும் உதவும் ஒரு கருவியாக்குவது இன்னொரு விடயம்.

தேசிய உணர்வு என்பது குறிப்பான சமூக அரசியற் சூழ்நிலைகளாற் தோற்றுவிக்கப்படும் ஒன்று என்பதற்கு உலக வரலாற்றில் நிறைய ஆதாரங்கள் உள்ளன. தேசியம் என்பது ஒரு புனைவு. ஆயினும் குறிப்பிட்ட சமூகச் சூழல்கள் அதை ஒரு வலிய அரசியற் சக்தியாக்குகின்றன. இத்தாலிய தேசியம், ஜேர்மன் தேசியம் என்பனவற்றினுள் பிரதேச அடிப்படையில் அக முரண்பாடுகள் தோன்றும் அதே வேளையில் ஐரோப்பாவில் தேசிய எல்லைகள் கடந்த அரசியல் பொருளாதாரக் கூட்டு ஒன்றுக்கான முயற்சிகள் நடக்கின்றன என்பது தேசியத்தின் ஒரு வினோதம். தம்மிடையே மோதும் அரபு நாடுகளின் தேசியவாதங்களின் அர்த்தமென்ன? ஆபிரிக்காவில் தேசியத்தின் அர்த்தமென்ன? கடவுள் பக்தி போல தேசியமும் கற்பனையானது தான். கடவுளைக் கற்பனை செய்வது போல தேசத்தையும் கற்பனை செய்யலாம். கடவுளரின் பேராற் போரிடுவது போல தேசத்தின் பேராலும் போரிடலாம். அதேவேளை, வழிபாட்டு உரிமையும் சமய நம்பிக்கைக்கான உரிமையும் மறுக்கப்படின் பாதிக்கப்பட்ட மக்கள் அவற்றுக்காகப் போராடுவது நியாயமானது. தேசிய விடுதலையிலும் அவ்வாறான ஒரு நிலையே உள்ளது. அடையாளம் என்பது தெரிவு சார்ந்தும் நிகழ்கிறது. (பால், சாதி, வர்க்கம் என்பனவற்றில் தனிமனிதத் தெரிவு குறைவு. ஆயினும் கடந்தவர்கள் இருக்கிறார்கள்!)

தமிழர்கள் தேசவழமைச் சட்டத்தின் மூலம் அனுபவித்த நன்மைகள் எவை, அவை எப்போது எவ்வாறு பறிக்கப்பட்டன எனவும் கட்டுரையாளர் சிறிது எழுதுவாராயின் பயனுள்ளதாயிருக்கும். கேரளத்தில் மருமக்கள் மான்மிய முறைக்குள்ளும் பெண்கள் வஞ்சிக்கப்பட்டு வந்தது பற்றிச் சில காலம் முன்பு வாசித்த நினைவு. இந்தியாவின் பல சமூகச் சீர்திருத்தங்கள் ஆங்கிலேயர் மனம் விரும்பிச் செய்தனவல்ல எனவும் மேனாட்டுச் சிந்தனைப் பரிச்சயம் பெற்ற இந்தியச் சீர்திருத்தவாதிகளது தூண்டுதலால் நிகழ்ந்தன எனவும் வாசித்திருக்கிறேன். இது தவறாயின் திருத்திக் கொள்கிறேன். இந்தியாவிலிருந்து வெள்ளையர் போனால் பார்ப்பன ஆதிக்கமே மிஞ்சும் என்று ஈ.வெ.ரா. கருதினார். ஈ.வெ.ரா.வை மிஞ்சிய பெண்ணுரிமை வாதியென்று இந்தியாவிற் பலர் இல்லை. பிரித்தானியர் ஆணாதிக்கச் சிந்தனை நோக்கில் இந்திய மரபின் பெண்ணுரிமையைச் சிதைத்தனர் என்றால் பிராமணர்..?? இந்தப் புதிரை எவராவது விடுவிக்க முடியுமா?

3 சுதந்திரம் பற்றி வில்வரெத்தினமும் தமிழ்மாறனும் எழுதிய கட்டுரைகளில் தேசிய இனப்பிரச்சனை சார்ந்தே மதிப்பீடுகள் அமைந்துள்ளன. பின்னையவரது எழுத்தின் இறுக்கமின்மையும் கட்டுரைகளைப் பலவீனப்படுத்துகிறது. இந்த 50 வருடக் காலத்தில் (பிடுங்கப்பட்ட நமது கிடுகு வேலிகட்கு அப்பால் வாழும்) பெரும்பான்மையின்

பெரும்பாலான மக்களது வாழ்க்கை நிலை பற்றிய அக்கறையை நம்மால் ஏன் காட்ட இயலவில்லை?

**4** றெஜி ஸிரிவர்தனவின் மாக்ஸியத்தின் சிறப்பான பண்பு அவர் ஒரு பெரும்பான்மை இனத்தவர் என்ற நிலைப்பாட்டினின்று தேசிய இனப் பிரச்சனையை அனுகாமையாகும். அவுஸ்திரேலியாவில் வாழும் ஈழத்தமிழரான ஏணெஸ்ற் மக்கின்ற்றையர் சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய ஆங்கில நாடக நூல் ஒன்றிலும் குறுகிய தேசியவாதத்திற்கு அப்பாற்பட்ட நியாய உணர்வு கொண்ட ஒரு பார்வை இருந்தது. றெஜியின் எழுத்தின் முக்கியத்துவம் 'பெரும்பான்மை இனத்தவர் ஒருவரிடமிருந்து வெளிவந்துள்ளமை' என்று நாம் கருதுவோமாயின், அதையொத்த ஒரு நியாய உணர்வுடைய பார்வை அதன் எதிர்வினையாகத் தமிழ்ப் படைப்பாளிகளிடமிருந்து வருமென எதிர்பார்ப்போமா?

**5** ரஞ்சகுமாரின் கதையில் (திருப்பம் 1) கதை கூறப்படுங் காலம் கதை நடந்த காலத்திற்கு மிகவும் பிற்பட்டதாக அமைகிறது. எனவே, கதை சொல்லி, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரைக் கதை கூறும் காலத்தில் அஃறிணையில் (வந்தது, போனது என்று) குறிப்பதற்கான தேவை என்ன? (கதை சொல்லியின் தந்தையார் அடையாளம் பெறும் சாதி உணர்வுள்ளவர் கூட, ஆழ்வான் என்பதை விடுத்து ஆழ்வாப்பிள்ளை என்று நக்கலாக மட்டுமன்றி மரியாதையுடனும் அழைத்து விடுகிறார். யாருடைய மறதியோ தெரியாது). சாதி முறையின் தகர்விலும் சைவத்துக்குக் கொஞ்சம் நன்மைதான். கதை சொல்லி கோழி இறைச்சி சாப்பிடுவதை விட்டுவிட்டார். படைப்பாளி பிரசாரம் செய்யக்கூடாது என்று கவனமாயிருக்கும் போது, பிரசாரம் நடவாது எனவோ நல்ல இலக்கியம் பிறக்கும் எனவோ உத்தரவாதமில்லை என்பதற்கு 'மனக்கேடு' ஒரு சான்று. ரௌத்ரம், குஷி போன்ற சொற் பிரயோகங்கள் கதை சொல்லியின் மொழியுடன் ஒட்டவில்லை. கோழி 'குய்யோ முறையோ' என்று கத்திக் கொண்டு ஓடுவது கூட ஒரு சிறப்பான படிமமல்ல. இவர் 'கோசலை' எழுதிய ரஞ்சகுமாரா?

**6** சிவத்தம்பியின் சொற்பிரயோகங்களும் கணனியில் எழுத்துருவாக்கும்போது நிகழும் விபத்தும் சேர்ந்து 'அப்பன் முகப்பாடு' என்ற புதிய கலைச் சொல்லை உருவாக்கி விட்டது (திருப்பம் 1). அவரது மொழிநடை பற்றி ஒரு வாசகரது முறைப்பாடு (திருப்பம் 2), மிக நியாயமானதே. சிவத்தம்பி சொல்லும் பொருளில் உள்ளதை விடச் சிக்கலான ஒரு தோற்றம் அவரது மொழிநடையில் உள்ளது. இனி வருங் கட்டுரைகளில் இது பற்றி அவர் கவனிப்பாராயின், அவை கூடுதலானோரை எட்டும்.

அன்புடன்
சி. சிவசேகரம்
(பேராதனை)



# ? மதுரனிடம் கேளுங்கள் !

**கா. செல்வராஜ்,**
**மெயின் வீதி, மஸ்கெலியா.**

? எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் மலையக மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என கருதுகின்றீர்கள்?

! உங்கள் அடையாளத்தை வைத்துத் தங்களின் அடையாளத்தை மாற்றுவோரைத் தவிர்த்து, உங்களோடு தங்களை அடையாளங் காண்போருக்கு வாக்களியுங்கள்!

**எம்.எச்.ஏ. ரசீத்,**
**தர்கா டவுண், பேருவளை.**

? தமிழ் மக்களிடையே ஆயுதக் குழுவும் மிதவாதிகள் என்ற பிரிவும் உள்ளது. முஸ்லீம்களிடையே கிழக்குத் தலைமை– கொழும்புத் தலைமை என்ற மோதல் கட்சி பேதமின்றி நிலவுகின்றது. இதையிட்டுக் கவலைப்படாமல் பேரினவாதிகள் என்று எழுதிக் கொண்டிருப்பதால் ஏது பயன்?

! உண்மைதான். யாழ்ப்பாணம் – மட்டக்களப்பு –மலைநாடு என்று பெரிய வேற்றுமைகள் இருப்பதாகச் சிலர் ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளதையும் பார்த்தேன். அதேவேளை அஷ்ரப் – பௌஸி மோதலும் தற்போது பலருக்குச் செய்தித் தீனிபோடுகின்றது. தாங்கள் அவதார புருஷர்கள் என்று கருதுவதைத் தலைமைகள் கைவிட்டால் நீங்கள் கனவு காணும் ஒற்றுமை நிச்சயம் ஏற்படவே செய்யும்.

**சுகந்தி செல்லையா,**
**வேப்பங்குளம், வவுனியா.**

? இத்தனை துன்பங்களுக்கு மத்தியிலும் போராட்ட வாழ்வுக்கிடையிலும் சீதனம் எதிர்பார்க்கும் பெற்றோர்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

! அப்பாவி ஏழைகளின் பிள்ளைகள் பலர் இயக்கத்துக்குப் போய்விட்டார்கள். எதிலுமே 'நோகாது' இருப்பவர்களே இன்றும் தமது புதல்வர்களுக்குச் சீதனம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெளிநாடுகளிலுள்ள தமிழ் இளைஞர்கள் தகுந்த வாழ்க்கைத் துணை தேடி அந்தரிக்கின்றனர். இந்நிலைமை இங்குள்ள சில பெற்றோர்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை. வெளிநாட்டு மாப்பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுத்துவிடுவதுதான் நிலைமையைத் திருத்துவதற்குத் தற்போதுள்ள வழியாகிறது.

சிவ. கணேசமூர்த்தி,
புத்தளம்.

? யாழ்ப்பாணத்தில் நடைபெறும் யுத்தத்தினால் யாழ்ப்பாணமே தெரிந்திருக்காத என்னைப் போன்ற எத்தனையோ பேர் இங்கு பாதிப்புக்குள்ளாகிறார்களே. தடுக்க வழியில்லையா?

! எப்படித் தடுப்பதாம்? நீங்கள் தமிழர் என்ற அடையாளம் உங்களோடு இருக்கும் வரை இத்தகைய பாதிப்புக்கள் இருக்கவே செய்யும். எத்தனையோ பேர் தங்கள் அடையாளத்தை மாற்ற முயன்று தோற்றுப் போயுள்ளனர். எனவே அதை விடுத்து, பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தப் பாருங்கள். மனிதாபிமானத்தை ஒருபோதுமே கைவிட்டுவிடாதீர்கள்.

திருமதி எஸ். நடேசானந்தம்,
கொக்கட்டிச்சோலை.

? இங்கு பெண்ணுரிமை அமைப்புக்கள் பெரும் ஆர்ப்பாட்டஞ் செய்கின்றன. கணவன் பெயரைப் பின்னாலே போடுதல் கட்டாயமில்லை என்று வாதிட்டுத் தந்தை பெயரையே பின்னாலே போடும் பழக்கம் தீவிரமாகி வருகிறது. எனக்கு இதில் ஒரு விளக்கமின்மை உள்ளது. திருமதி. நடேசானந்தம் என்று எழுதினாலும் அல்லது தந்தையின் பெயரைப் போட்டு பொன்னையா என்று எழுதினாலும் ஆணின் பெயர்தானே பின்னாலே வருகிறது. இதில் எங்கே பெண்விடுதலை வருகிறது?

! நீங்கள் கூறுவது சரியான வாதமே. கணவனை எதிர்ப்பது, புறக்கணிப்பதே பெண்விடுதலை என நினைப்பவர் பலருண்டு. மேற்கு நாடுகளின் முறையை அப்படியே பிரதிபண்ணிப் பாவிக்க முனைவதால் வருஞ் சிக்கல்கள் இவை. ஐரோப்பியன்தானே திருமதி...... இன்னாரென்று எழுதக் கற்றுக் கொடுத்தவன். இப்போது அவனே மாற்றியும் போடுகிறான். தீர்மானங்களைப் பெண்கள் மேற்கொள்ளுவதுதான் உண்மையான பெண்விடுதலை. அந்தநிலை ஏற்படுவதானால் உங்களது முதல் பெயரை—சாந்தியோ— சத்தியகுமாரியோ— என்று எழுதும் நிலைவர வேண்டும். இடைப்பட்டதெல்லாம் போலிகளின் வெளிவேடமே. ☒

*யாழ்ப்பாண சமூகமும் சீதனப் பிரச்சனையும்-ஒரு மாற்று நோக்கு*

*எழுத்தும் வாழ்வும் ஒரே பாதையிலா?*
*எழுத்தாளர்களது சொந்த வாழ்வு விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதா?*

*அடுத்த இதழில் இடம்பிடிக்கின்றன!*



நூலகம்

# எமது விற்பனையாளர்கள்:

| | |
|---|---|
| ⇨பூபாலசிங்கம் புத்தகசாலை | கொழும்பு–11 |
| ⇨பூபாலசிங்கம் புத்தகசாலை | கொழும்பு–06 |
| ⇨முத்தையா & சன்ஸ் | கொழும்பு–11 |
| ⇨ஜெயா புக் சென்ரர் | கொழும்பு–11 |
| ⇨வி.ஜே.பி. இன்டர்நஷனல் (இன்ரமொட்) | கொழும்பு–06 |
| ⇨கவிதா புக் சென்ரர் | வவுனியா |
| ⇨கஜன் சென்ரர் | வவுனியா |
| ⇨லங்கா சென்ரல் புத்தகசாலை | கண்டி |
| ⇨கலைவாணி புத்தகசாலை | கண்டி |
| ⇨கேசவன் புத்தகசாலை | ஹட்டன் |
| ⇨சொய்ஸ் பலஸ் | கல்முனை |
| ⇨சக்தி நூல்நிலையம் | மட்டக்களப்பு |
| ⇨ராஜாஸ் புத்தக நிலையம் | மட்டக்களப்பு |
| ⇨ஜோதி புக் சென்ரர் | மன்னார் |
| ⇨துவாரகா சென்ரர் | திருகோணமலை |
| ⇨வாணி புத்தகசாலை | திருகோணமலை |
| ⇨பூபாலசிங்கம் புத்தகசாலை | யாழ்ப்பாணம் |
| ⇨மக்மில்லன் புத்தகசாலை | யாழ்ப்பாணம் |
| ⇨துர்க்கா புத்தகசாலை | சுன்னாகம் |
| ⇨ஆசீர்வாதம் புத்தகசாலை | சாவகச்சேரி |
| ⇨பரம் புத்தகசாலை | சாவகச்சேரி |
| ⇨குலம் புத்தகசாலை | பருத்தித்துறை |

## ஏகவிநியோகஸ்தர்:

லங்கா புத்தகசாலை,
**F.L 1.14,** டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு–12.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

1987 - 1997

IBS

ANNIVERSARY

With America Leading the Computer World...

# Microsoft Office

## Course Contents

- Introduction to Computers
- Microsoft Disk Operating System
- Microsoft Windows 95
- Microsoft Word 97
- Microsoft Excel 97
- Microsoft PowerPoint 97

- *Payment can be made in installments.*
- *Initial installment Rs. 2500.00 at enrollment.*
- *5% Discount on full payment.*

***For more details please call over at,***

**Course Fees :- Rs. 7500/-**
**Duration : 3 Months**

International Business Systems Overseas(Pvt.) Ltd.,
*No. 40 2/1, Edward Lane, Colombo - 3.*
*Tel : 585636, 585631, 585605 Fax : 503175, 595329*
*E-mail : ibstd@slt.lk*
*Overseas Branch : G. Vaffushi , Republic of Maldives.*

*Affiliated to the Institute for Certification of Computing Professionals (ICCP - USA).*